ஸ்ரீ

பகவத்விஷயம்

முதற்பத்து

திருவாய்மொழி மூலமும்

ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி,
இருபத்திநாலாயிரப்படி, ஈடு முப்பத்தாறாயிரப்படி வ்யாக்யாநங்களும்,
சீயர் அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு, த்ரவிடோபநிஷத்ஸங்கதி,
த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி, திருவாய்மொழிநூற்றந்தாதி இவைகளுடன்

சே. கிருஷ்ணமாசாரியர் பதிப்பு.

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியராலும்,
அ. வீ. நரஸிம்மாசாரியராலும்
பரிசோதிக்கப்பெற்றது.

திருவல்லிக்கேணி
நோபில் அச்சுக்கூடம்.

ரக்தாக்ஷி ௵]

[1925.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

வ்யாக்யாந ஸஹிதங்களான

பொதுத் தனியன்கள்.

****

அழகியமணவாளன் அருளிச்செய்தது.

ஶ்ரீஶைலேஶ தயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம் |
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ||

[ஸ்ரீஶைலேஶ இத்யாதி] - "நம: ஸ்ரீஶைலநாதாய குந்தீநகர ஜந்மநே | ப்ரஸாதலப்த பரமப்ராப்ய கைங்கர்யஶாலிநே" என்றும், "ஶேஷோ வா ஸைந்யநாதோ வா ஶ்ரீபதிர்வேதி ஸாத்த்விகைர்விதர்க்யாய மஹாப்ராஜ்ஞைர்முநயே ஶ்ரீஶைலேஶ க்ருபாபாத்ரம்" என்றும், "அனந்தன் திருமலையாழ்வாரென வந்தவதரித்து" என்றும் அவதாரவிஶேஷமாகச் சொல்லப்படுமவராய், சரமபர்வமான ஆழ்வார்திருவடிகளில் கைங்கர்யத்தை அவரருளாலே லபித்து வாழுமவராய், அதிலும் அவர் திருவடிகளான எதிராசர் செம்பொற்பாதம் இரவுபகல் மறவாமல் இறைஞ்சியேத்தும் எழிலையுடைய திருவாய்மொழிப் பிள்ளை சீருளுக்கு எற்ற கலமா யுள்ளவரை; "ஸ்ய ஶ்ரீஶைலநாதார்யஸவிதே ஶுஶ்ரூஷுவா ஜமுஷி" என்னக்கடவதிறே. ஸ்ரீஶைலபூர்ணர்க்ருபையாலும் ஸ்ரீஶைலதேஶிகர்தயையாலும் இராமாயணமென்னும் பக்திவெள்ளமும், தீர்த்தங்களாயிரமான திருவாய்மொழியும், யதீந்த்ரதத்ப்ரவணரிடங்களிலே குடிகொண்டு தேங்கிற்று. இவரும் தன்பக்தியென்னும் வீட்டின்கண் வைத்தபின்பிறே பெருகி வெள்ளமிட்டு விளைந்தது; "ஸ்ரீராமாயணமூக்திஸந்தாந:", "பாலோடமுதன்னவாயிரம்"; இராமாநுசனிறே இவரும். [தீபக்த்யாதிகுணார்ணவம்] - மதிநலங்கள் இவருக்குப் பிள்ளையருளால் உண்டாயிற்று. "ப்ரஜ்ஞாவிஜ்ஞாநவைபவைகபாஜநீ" என்றும், "ஜ்ஞாநவைராக்யபக்தய:", "நவைவ ஸோகாஶ்ருணம்" என்றுதொடங்கி, "த்யாவிநாதநாதேயே" என்றுமிறே ஏதத்பூர்வாவதாரங்களிலும் ஜ்ஞாநபக்த்யாதிகள் பூர்ணமாயிருப்பது; ஆராவன்பிளையவனிறே. அச்யுதபதாம்புஜயுக்மருக்மவ்யாமோஹாதிகள் உண்டிறே இங்கே; அவ்வவதாரத்திற் குறைகளும் தீர்க்க அவதரித்தவிடத்திலும், பெரியபெருமாள் விஷயத்துக்கு அநுரூபமாகப் பெரியசியருடைய அந்தப்ரேமாதிகள் இரட்டித்திறே இருப்பது. "ஜ்ஞாநகுணஸ்ரீமணவாளமுநய", "யதீந்த்ரநிஜபாதேய:", "குணாநாதாகரா:" என்னக் கடவதிறே. "ஸாஷ்டாங்கஸ்ஸப்ரேமஸ்ஸஹ்ருதயஜாமாதுர்யோகீ" என்றும், "யதிவர வசநாகார:" என்றும் சொல்லக்கடவதிறே. இனி, நம்பெருமாளிடத்தில் ப்ராவண்யம் எல்லை

யான எம்பெருமானுரளவும் வர்த்தித்தபடி சொல்லுகிறது; ஸாத்யவிவ்ருத்தியாய்க்கொண்டு சரமபர்வம்
வரக்கடவதாயிருக்கும். [யதீந்த்ரப்ரவணம்] - அந்தப்ராவண்யந்தான், "[illegible]

[illegible]" என்று விஶேஷஜ்ஞரான வேதாந்தாசார்யரும் விக்ருதராய்ப் பேசி அநுபவிக்கும்படியா
யிருக்கும். இவர்தாம் நிஜதேஶிகஸந்தர்ஶிதஸம்யமிதுரந்தரநிஹித ஸகலநிஜஸமாவாமுனிவரிறே. அவர்
பராங்குஶபாதபக்தர்; இவர் யதீந்த்ரப்ரவணர்; அந்தப்ராவண்யமிறே இவரை அனைவரும் கால்கட்டுகிறது.
[வந்தேரம்யஜாமாதரம்முநிம்] - "[illegible]" என்கிறதெல்லாம் இவருக்கு இவ்விஷயத்
திலேயாயிற்று. "[illegible]" என்னுமாபோலே திருநாமத்தை
அநுஸந்தித்துத் திருவடிகளிலே விழுகிறார். இவருடைய அநுஸந்தாந விஷயமான மந்த்ரமும் ஸ்துதிப்
ஞமமும் இருக்கும்படி இதுவாயிற்று. "[illegible]" என்கிறபடியே [illegible]
ஞுடைய ஸததாஸம்ருத்திகள் இவர் ஸங்கல்பாதீனைகளாயிருக்கும்படியைப் பற்ற 'முநி' என்கிறது.

இப்படிகளால் ஏற்றங்களையுடைய இவர் ஸ்துதிரூபமான இவர் தனியன்தான் "[illegible]" என்று வேதத்துக்கு 'ஓம்' என்னுமாபோலே, த்ராவிடவேத
ததங்கோபாங்கங்களென்ன, ஏதத்வ்யாக்யாநவிஶேஷங்களென்ன, ஏதத்ஸாரபூதமான ரஹஸ்யங்க
ளென்ன இவற்றினுடைய ஆத்யந்தங்களிலே அகிலதிவ்யதேஶவிலக்ஷணராலும் அநுஸந்திக்கப்படுமதாயி
ருக்கும். இவருடைய ஸகலதிவ்யப்ரபந்தப்ரவர்த்தகத்வம் பண்டு பலவிடங்களிலே கண்டுகொள்வது.
அதுக்குமேலே உபயப்ரதாநப்ரணவமான உறைகோயிலிலேயிறே இவர் உதித்தருளிற்று; இவருக்கு இவ்
வைபவம் ஜந்மஸித்தம்; இது, ப்ரணவார்த்தமாகிற பிதாபுத்ர ரக்ஷ்யரக்ஷக ஶேஷஶேஷி ஸம்பந்தத்ரயமும்
இவரிடத்திலே தர்ஶிக்கையாயிருக்கையாலே; "[illegible]

[illegible]" என்கையாலே - அகாரம் பகவத்வாசகமாயும், மகாரம் சேதந வாசகமாயும், உகாரம் உபயஸம்பந்த
ப்ரகாஶிகையையும் சொல்லும்; "அவ்வானவர்க்குமவ்வானவரெல்லாமுவ்வானவரடிமையென்றுரைத்தார்"
என்னக்கடவதிறே; விளக்குப்பொன்போலே நடுநிலத்தீவமிறே; "[illegible]", "[illegible]", "[illegible]" என்றே தத்ஸாபேக்ஷமாயிறே இருப்பது; "[illegible]

[illegible]", "[illegible]", "[illegible]", "[illegible]" என்னக்கடவதிறே; இப்படி முப்புரியூட்டி
யிறே இவரவதாரவைபவம் இருப்பது.

இன்னமும் இஶ்ஶ்லோகத்திலே பதங்கள்தோறும் இவ்வர்த்தம் காணலாயிறே இருப்பது. எங்
ஙனேயென்னில்,—'ஸ்ரீஶைலேஶ' என்கையாலே-அகாரவாச்யனை ஸர்வேஶ்வரனைச் சொல்லி, 'தயாபாத்
ரம்' எனகையாலே - பகவதநந்யார்ஹஶேஷபூதனை சேதநன் அவன்க்ருபைக்குப் பாத்ரமென்னுமத்தைச
சொல்லுகிறது. அடியில் பதத்தில் - ஆசார்யனை அவன்தானுகச் சொல்லுகிறது, விஶேஷநிர்த்தேஶத்
தாலே; தத்குணஸாரத்வாத் தத்வ்யபதேஶம்போலே; "[illegible]" இத்யாதி, "[illegible]" "தீபக்த்யாதிகுணார்ணவம்" என்கிற இப்பதத்தாலும் "தாமரையாள்கேள்வனொருவனையே
நோக்குமுணர்வு" என்றும், "ஆதியஞ்சோதிக்கே யாராதகாதல்" என்றும், "உன்னித்துமற்றொருதெய்
வந்தொழாள்" என்றும் சொல்லுகிறபடியே ஜ்ஞாநபக்திவைராக்யங்களை ப்ரதிபாதிக்கையாலே அநாரோ
தித பகவச்சேஷத்வத்தை பக்தியாலே சொல்லுகிறது; ஸ்வரூபமும் உன்னிணைத்தாமரைகட்கு அன்புருகி
நிற்குமதிறே; அகிஞ்சித்கரஸ்ய ஶேஷத்வாநுபபத்தே:. ஜ்ஞாநமாவது - தஜ்ஜ்ஞாநமிறே; பகவதேகாவலம்பி
யாயிறே ஜ்ஞாநம் இருப்பது. வைராக்யமாவது - தேவதாந்தரத்யாக ப்ரதாநமாயிறே இருப்பது. [யதீந்த்ர
ப்ரவணம்] - யதீந்த்ரராகையாவது - ஸ்வஸ்வரூபத்தை அநுஸந்தித்துத் துரும்பு நறுக்காதிருக்குமவர்களைத்

திருத்தித் திருமகள்கேள்வனுக்கு ஆக்கி அடிமைசெய்விக்கை. தம்மளவிலும் - யதிஶப்தம் அவிஶிஷ்டமாகையாலே, யதிந்த்ரராகையைப்பற்ற ப்ரவணராகிறார்; பகவதநந்யார்ஹஶேஷத்வம் ததீயபர்யந்தமிறே. அன்றிக்கே, [யதீந்த்ரப்ரவணம்] - அஸாதாரணமான ராமாநுஜஶப்தபர்யாயவாசகமாயிறே இத்திருநாமம் இருப்பது; அதுவும் ப்ரணவார்த்தம். ராமஶப்தத்தாலே - அகாரார்த்தமும், அநுஜஶப்தத்தாலே - தச்சந்தாநுவர்த்தியாயிருக்கிற ஆத்மஸ்வரூபமுமிறே சொல்லுகிறது. “[illegible]” என்றிறே ப்ராவண்யம் இருப்பது. [வந்தே ரம்யஜாமாதரம்முநிம்] - இத்தாலும் உகாரார்த்தமே சொல்லுகிறது; ரம்யஜாமாத்ருஶப்தத்தாலே - அகாரவாச்யனைச் சொல்லி, முநிஶப்தத்தாலே - ததநந்யார்ஹஶேஷத்வஜ்ஞாநத்தையுடைய பரமசேதநனைச் சொல்லுகிறது. ரம்யஜாமாதுர்மநநம் கரோதீதி - ரம்யஜாமாத்ருமுநி:. ஆக, இவையெல்லாவற்றாலும் - ப்ரணவார்த்தமாக அநுஸந்திக்கத் தட்டில்லை.

“[illegible]” என்றும், “வடதிசை மதுரை அயோத்தி” என்றும் அவதாரஸ்தலத்தைச் சொல்லுகிறபடியே, கோயிலுக்கு வடக்காயிருக்கிற வடதிருவேங்கடநாட்டில் ஏரார்பெரும்பூதூரிலே எம்பெருமானார் வடமொழியையும் தென்மொழியையும் வெளியிட அவதரித்தருளினார்; “நாரணனைக்காட்டிய வேதம் களிப்புற்றது தென்குருகைவள்ளல் வாட்டமிலாவண்டமிழ்மறைவாழ்ந்தது” என்னக்கடவதிறே. “அரங்கநகரும் மேவுதிருநகரியும் வாழவந்த மணவாளமாமுனி” என்கிறபடியே தென்னாட்டுத் திலதமான தென்குருகூரிலே பெரியசீயர் தென்மொழியை வெளியிடவே அவதரித்தருளினார்; “விரவு தமிழ்மறைமொழியும் வடமொழியும் வெளியாய்ச்செய்யும்விசித்ரவ்யாக்யாநஶேஷன்” என்னக்கடவதிறே. “[illegible]” இத்யாதி. இவருக்கும் இரண்டினுடைய ப்ரவர்த்தகத்வம் உண்டேயாகிலும், ஊற்றத்தைப்பற்ற ஒன்றிலே ஓதுகிறது. உடையவருடைய அவதாரவிஶேஷமாகையாலும், மற்றும் ஸர்வதாஸாம்யத்தாலும் யதிவரபுநரவதாரமாகையாலே, தீர்க்கஶரணாகதியை ஈன்ற முதல்தாயினுடைய மாதாபிதாபோலே, யோகித்யமும் ஸ்ரீஶைலேஶமும் நடந்துசெல்லுகிறது. இவரும் ஜந்மபூமியைவிட்டுவந்து காவிரிநடுவுபாட்டிலே கருமணியைக்கண்டு தந்மத்யஸ்தராய், வைஷ்ணவஸ்ரீயோடே வாழ்ந்துகொண்டிருந்து, ஸ்ரீரங்க ஸ்ரீயையும் ஶ்ருதிஸாகரத்தையும் த்ராவிடவேதஸாகரத்தையும் பெருகப்பண்ணிப் பெருமாளை நோக்கிப் போந்தார்; அவர் எல்லாவுயிர்கட்கும்நாதனரங்கனென்னும் பொருள் சுரந்தார், இவர் பல்லுயிர்க்கும் விண்ணின்தலைநின்று வீடளிப்பான் அனைத்துலகும் வாழப்பிறந்த எதிராசமாமுனிவனென்னும் அர்த்தத்தை அருள்சுரந்தார். சீயர் அவதரித்து வெளியிடாதபோது கண்ணுறந்தாரகமாயிறே உடையவர்வைபவம் இருப்பது; இராமாநுசமுனி செய்யகுன்றில் லேற்றிய தீபமிறே இவர். நாராயணாவதாரம் போலேயிறே இவர்களுடைய அவதாரமும் “[illegible]”, “[illegible]”, “[illegible]”, “[illegible]”; இரண்டுக்குமுண்டான தார்மிக்யமும் அப்படியே; ஸம்பந்தமும் அப்படியே; அவர் நாராயணவைபவப்ரகாஶகர், இவர் ராமாநுஜவைபவப்ரகாஶகர். அவ்வவதாரத்திலும் இவ்வவதாரத்துக்கு ஏற்றமுண்டு: “பிறப்பாயொழிவது”: நாராயண, ராமாநுஜ என்றிறே சதுரக்ஷரிகளின் வாசி இருப்பது. இவர் சதுரரில்தலையாகையாலே சரமசதுரக்ஷரியிலேநிலைநின்றார்; “எத்திறிருப்பாரைவெல்லுமே மற்றவரைச் சாத்தியிருப்பார்தவம்,” “[illegible]”, “அடியேன் சதிர்த்தேனின்றே”, “நம்புவார்பதி வைகுந்தங்காண்மினே”. ஆழ்வார்க்கு மதுரகவிகளிலும் சரமமான திருவடிகள் ராமாநுஜனைப்போலே, அந்தராமாநுஜனை இவர்க்கும் ஸ்ரீவத்ஸாங்காசார்யரிலும் சரமமான சரணங்கள் யதீந்த்ரப்ரவணனிறே; ஆகையால், சரமபர்வமான சீயர்விஷயமான இத்தனியனும் ஸகலவேதஸாரமான ப்ரபத்திபோலே நிரந்தராநுஸந்தேயமாகக்கடவது. (க)

ஸ்ரீ:

பொதுத்தனியன்கள்.

ஆழ்வான் அருளிச்செய்தது.

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் ।
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம் ॥

[லக்ஷ்மீநாதஸமாரம்பாம் இத்யாதி]: இத்தனியன்தான், ஸர்வாத்மஹிதைஷியாய் ஆப்ததமராய் குரூத்தமரான கூரத்தாழ்வான் அனைவர்க்கும் குருபரம்பராநுஸந்தாநத்தாலே உஜ்ஜீவநமுண்டாம்படி அருளிச்செய்ததாயிருக்கும்; ஆகையாலிறே, ஸர்வஶிஷ்டர்களும் இதை அங்கீகரித்து அநுஸந்தித்துக்கொண்டு போருகிறது.

[லக்ஷ்மீநாதஸமாரம்பாம்] - அதில் முற்பட “[illegible]” என்று ரஹஸ்யத்ரய ப்ரதிபாதகத்வத்தாலே ப்ரதமகுரு ஸ்ரீயப்பதியான எம்பெருமானாகையாலே முற்பட அருளிச்செய்கிறார்; “நரநாரணனாயுலகத்தறநூல் சிங்காமைவிரித்தவன்” என்றும், “தன்னடியார்திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல், என்னடியாரதுசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தாரென்பர்” என்றும், “பார்த்தனுக்கன்றருளிப் பாரதத்தொருதேர்முன்னின்று”, “குருமுகமாய்”, “பண்டேபரமன்பணித்த பணிவகை” என்றும் சொல்லக்கடவதிறே; “[illegible]”, “[illegible]”, “[illegible] [illegible]”, “பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து,” “அறியாதனவறிவித்தவத்தா,” “என்னைத்தீமனங்கெடுத்தாய்”, “மருவித்தொழும் மனமேதந்தாய்” என்றும்பிற்று அநுஸந்தித்துப்போருவது. பெரியபிராட்டியாருக்கு முற்படவாயிற்று ஸர்வேஶ்வரன் ஸ்ரீவிஷ்ணுலோகத்திலே த்வயத்தை அருளிச்செய்தது. “[illegible]” என்றுளே; அவன் தானும் “[illegible] விஷ்ணோர்[illegible] [illegible]” என்று அருளிச்செய்தானிறே அத்தாலும், கடகத்வத்திலே முற்பாடுடையளாகையாலும், மற்றையார்க்கு புடகத்வம் ஆவஸடியாகையாலும், “லக்ஷ்மீநாதஸமாரம்பாம்” என்று - மிதுநச்சேர்த்தியாக அருளிச்செய்தது. “இறையுமகலகில்லேன்” என்றிருக்கையாலே பிரிந்து நிலையில்லை; லக்ஷ்மிக்கு லக்ஷ்மீதந்த்ரத்திலே ப்ரபத்திப்ரவர்த்தகத்வம் உண்டிறே. ஸமாரம்பாம் என்று - இவர்கள் தொடக்கமாகக் குருபரம்பரையைச் சொல்லுகையாலே, ஸ்ரீவிஷ்வக்ஸேநஸம்ஹிதையிலே பகவானாலே ப்ரபத்யுபதேஶம் பண்ணப்பட்டதாகச் சொல்லப்படுமவருமாய், “[illegible]” என்று - பூவளருந்திருமகளாலே அருள்பெற்று, அத்தாலே “ஸ்ரீ[illegible]” என்னும்படி கைங்கர்ய ஸ்ரீயையுடைய ஸேனைமுதலியாரும், “திருமாலாலருளப்பட்ட சடகோபன்”, “திருமாமகளாலருள்மாரி” என்னும்படியான ப்ரபந்நஜநகூடஸ்தரும் ஸூசிதர். ஸேனைமுதலியாரும், விஷ்வக்ஸேநஸம்ஹிதாதிகளிலே [illegible]திகளுக்கு ப்ரபத்தியை வெளியிட்டருளினாரிறே; இப்படி வெளியிட்ட ப்ரகாரத்தை, “[illegible]” என்று தாமே அருளிச்செய்தார்; அத்தைப்பற்றவாயிற்று “[illegible]” என்று அத்யாத்மசிந்தையிலே அருளிச்செய்தது அவ்வளவன்றிக்கே, ஆழ்வாரவதாரவைபவத்தை ஸநத்குமாரர் மார்க்கண்டேயபுராணத்திலே ஒரு அத்யாயமெல்லாம் சேர அருளிச்செய்தாராகையாலே, இவர்களளவும் விவக்ஷிதம்.

இத்தக்குருபரம்பரையில் ஆதிமத்யாவஸாநங்களை அருளிச்செய்கிறவராகையாலே நாதயாமுநர்களை மத்யமபதஸ்தராக அருளிச்செய்கிறார், ‘நாதயாமுநமத்யமாம்’ என்று. நாதயாமுநர்கள் - நாதமுநிகளும் யாமுநமுநிகளும். அவர்கள் தாம் பரமஹம்ஸரிறே; “நாதயாமுநர் போல்வாரை அன்னமென்னும்” என்றிறே ஆசார்யஹ்ருதயத்திலே அருளிச்செய்தது; அவனும் அன்னமாகியிறே அருமறைகளை அருளிச்செய்தது. ஏவம்விதரான இவர்தான் மதுரகவிகளினுடைய திவ்யப்ரபந்தாநவரதாநுஸந்தாநத்தாலே ஆழ்வாருடைய அருள்பெற்ற நாதமுனியானார்; அந்நாதமுநியருளாலேயிறே யமுனைத்துறைவர் அவதரித்து தர்

ஶநத்தை ஆள வந்தாரானது. "நாதோபஜ்ஞம் ப்ரவ்ருத்தம் பஹுபிருபசிதம் யாமுநேயப்ரபந்தை: த்ராதம்" என்னக்கடவதிறே. அவ்வளவன்றிக்கே, "விஷ்ணுஹ்ருத்வ்ருத்திஷாஸ்யம் ஸேநேஶோ வதரிஷ்யதி" என்று ஸ்ரீஸேநாபதியாழ்வா ரவதாரமாக நம்மாழ்வாரைச் சொல்லிற்றிறே. ஆளவந்தாருக்கு ப்ரபத்யர்த்தோபதேஶம் பண்ணுகைக்கு அடியான உய்யக்கொண்டாரும் மணக்கால்நம்பியும் இவர்களிடையிலே அடைபடக்கடவரா யிருப்பர்கள். நாதயாமுநமத்யமாம் என்று - ஆழ்வான் அநுஸந்தாநக்ரமமாயிற்று இது; இவரை யொழிந்த மற்றையார் "லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம் | அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தே குருபரம்பராம்" என்றுமிறே அநுஸந்தித்துப்போருவது.

உடையவர்தாம், குருபரம்பரைக்கு நடுநாயகமிறே அவர்தாம் ஆழ்வானுக்கு ஸாக்ஷாதாசார்யராகையாலே 'அஸ்மதாசார்யபர்யந்தாம்' என்கிறது. "அஸ்மத்குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ: ராமாநுஜஸ்ய" என்னக்கடவதிறே; "ராமாநுஜாங்க்ரிஶரணோஸ்மி" என்றும் அநுஸந்தித்தார். இதிலே யமுனைத்துறைவ னிணையடியாங் கதிபெற்றுடைய இராமாநுசனுகையாலே - ஆளவந்தாருக்குச் சரணத்வயமென்னலாம்படியான பெரியநம்பியும் ஸூசிதர். "இளையாழ்வாரை விஷயீகரித்த அநந்தரத்திலே, 'இளையாழ்வீர் ! பெருமாள் ஸ்ரீதண்டகாரண்யத்துக்கு எழுந்தருளும்போது மரவடியைத் தம்பிக்கு வான்பணயம் வைத்துப்போய் வானோர்வாழ எழுந்தருளினாற்போலே. மேலை வானோர்வாழ இவரும் தமக்கு அடியானை அடியேனை அப்படி உமக்குவைத்துத் திருநாட்டுக்கு எழுந்தருளினார்' என்று அவர் அருளிச்செய்தார்; அத்தைப்பற்ற "யமுனைத்துறைவனிணையடியாங்கதி பெற்றுடைய இராமாநுசன்" என்று அமுதனார் அருளிச்செய்தார்" என்று திருநாராயணபுரத்தில் திருவாய்மொழியரசாயர் அருளிச்செய்தார். உடையவரை குருபங்க்திஹாரநாயகமாக நடுவே அநுஸந்திக்கவேண்டியிருக்க, யதாபாடம் எல்லாரும் அநுஸந்திக்கிறது - "ஆழ்வான்திவ்யஸூக்தி" என்னுமது எல்லாரும் அறிகைக்காக. இதிலே, ஆசார்யாபிமாநயுக்தராய் இவ்வருகிலுமுண்டான அனைவரும் ஸ்வாசார்யபர்யந்தமாக அநுஸந்திக்கும்போது நாதயாமுநர்களை நடுவாகச்சொன்னது - யதிவரர்க்கும் உபலக்ஷணமாகிறதென்று கண்டுகொள்வது. 'அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தேகுருபரம்பராம்' என்கிற இத்தால் - 'ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததா மபிவர்த்ததாம்' என்று - எம்பெருமானார் திவ்யஸங்கல்பத்தாலே வர்த்தித்துக்கொண்டு போருகிற ஆசார்யபரம்பரையானது ஸ்வாசார்யபர்யந்தம் ஸேவிக்கப்படுமே தென்கிறது. "எம்பெருமானிற்காட்டில் குருபரம்பரை அதிகம்; குருபரம்பரையைக்காட்டில் ஸ்வாசார்யன் அதிகன்" என்னக்கடவதிறே அஸ்மதாசார்யபர்யந்தாம் என்கையாலே - இவ்வருகுள்ளார்க்கு உத்தேஶ்யராய் ப்ரபத்திமார்க்கப்ரவர்த்தகரான கூரத்தாழ்வான், அவர் செல்வத்திருமகனாரான பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை வடக்குத்திருவீதிப்பிள்ளை பிள்ளைலோகாசார்யர் கூரகுலோத்தமதாஸநாயன் திருவாய்மொழிப்பிள்ளை பெரியசீயர் முதலாக "ஸர்வம் பாரமஹம்ஸ்யம்" என்னுமவர்களெல்லாரும் அநுஸந்தேயராம்படி ஸூசிதர்.

வேதாந்தாசார்யரான அண்ணவும் "ப்ரத்யக்ஷஶ்ரீ:பதிர்வைஷ்ணவாநாம் வ்யாக்ஞாநாயஸ்ஸம் | ஶ்ரீமத்க்ரமாயவாமியாஷி நிஸ்தாரதாமாஸம் | ஶ்ரேஷ்டஸம்ஶ்ரயாய ராமாநுஜார்ய பர்யந்தம்" என்று தொடங்கி, "பதீந்த்ரம் பவணாய லக்ஷ்மீபதேர்ப்ராணபரிதே | வ்யாப்தோ ஸம்ராமாநுஜார்யபர்யந்தம்" என்று நடுவாகவும், "வந்தே ஸர்வோத்ரிஷ்டஸந்தோஷபூர்ண ப்ரமேயாநந்தவ்யாப்தே | ஸம்ராமாநுஜார்யார்யோநீந்த்ராய ஸ்வாத்மநே || ஸ்வஸ்திஶ்ரீஶைலநாயாராய பரிபூர்ணக்ருபாஜுஷே | ராமாநுஜார்ய தேவாய ஸஹாஸாமாயஸம்" என்று - ஶ்ரிய:பதியைத் தொடங்கி ஸ்ரீமத்ராமாநுஜார்யர் நடுவாகவும், ஸ்ரீஶைலேஶதயாபாத்ரரான பெரியசீயரளவாக ஶேகரிக்கையாலே, இதுவே ஶாத்தஸம்ப்ரதாயம்; மநுவிபரீதம்போலே, இதுக்குப் புறம்பானது அஸம்ப்ரதாயம். உபாயாந்தரோபதேஷ்டாக்கள் - ஸ்வரூபநாஶகரான குருக்கள்; ஆகையாலிறே, "குருரேவ பரம்ப்ரஹ்ம" என்றது. "ஸாக்ஷாத் பலைகலக்ஷ்யத்வ ப்ரதிபத்தியாலே மந்த்ரரத்நத்தை உபதேஶிக்குமவர்களிறே - ஸத்குருக்களாகிறார்; "த்வயத்தினுடைய அர்த்தத்தையும் திரு

வாய்மொழியினுடைய அர்த்தத்தையும் உபதேஶிக்கிறான் யாவனொருவன், அவனுக்கேயிறே ஆசார்யத்வ பூர்த்தி உள்ளது" என்று ப்ரமேயரத்நத்திலே அருளிச்செய்தார். ஏவம்விதமான குருபரம்பரையிறே ஸேவ்ய மென்கிறது. மேலும், குருகுலதுர்யரான வரவரமுநிவர்யருடைய பரம்பரயா "[illegible]" என்று நடந்துசெல்லுவது; "[illegible]" என்று தொடங்கி, "[illegible]" என்றிறே தலைக்கட்டியருளினர். "[illegible]" என்று தொடங்கி, "[illegible]" என்று நடுவாகவும். "[illegible]" என்று எம்பெருமானளவாகவும் - வாக்யகுரு பரம்பராக்ரமத்தாலே வாதிகேஸரி அழகியமணவாளச்சீயர் அருளிச்செய்தது; இந்த க்ரமத்தை "முந்தை வினையகலமுன்னருளுமாரியனால், எந்தையெதிராசனின்னருள் சேர்ந்து-அந்தமில்சீர்ப், பொற்பாவை[illegible]ருளால் பொன்னரங்கர்தாள் பணிந்து, நற்பாலடைந்துய்ந்தேன் நான்" என்றும், "[illegible]" என்று விவரணமாலையின் அடியிலும் தத்வதீபாதியிலும் அருளிச்செய்தார்.

இந்தக்ரமம், "[illegible]" என்கிற ஶ்ருதியையும், "[illegible]" என்கிற பாஷ்யகாரவசநத்தையும் பற்றி யிருக்கிறது; "[illegible]" என்னக்கடவதிறே. "லக்ஷ்மீநாதஸமாரம்பாம்" என்கிற இத்தனியினில் குருபரம்பராக்ரமத்தையும் "தென்னரங்கனருந்திருமகளுமாதியா, அன்னவயற்பூதூர்மன்னனிடையா - என்னையருளாரியனேதானளவா வன்னகுருமுறையின், சீரியதாள்சேர்ந்துய்ந்தேனே" என்றும் அவர்தாமே அருளிச்செய்தார். இந்தக்ரமம், "திருவருள்மால்சேனைமுதலிசடகோபன்", "[illegible]" என்கிற தனியன்களிலும், "ஆதிமுதல்மாயன்மலர்மங்கைசேனைத்தலைவன்" என்றும், "சேனைநாதன் அருள்மாறன் நாதமுனி தாமரைக்கண் இராமர்வாழ், சீர்சிறந்தயமுனைத்துறைக்கிறைவர் செந்தொடைக்கதிபரருளினால், தானமர்ந்தவெதிராசர் கூரம்வருதலைவர் நீதிபுனைபட்டர்பின், தலைமையான மாதவச்சீயர் நம்பிள்ளை தழைத்தகண்ண னிருவகையினும், ஈனமின்றியருளுலகவாசிரிய னினியகூரகுலதாதருக், கின்பமேவுதிருவாய்மொழிப்பிள்ளை யிவர்க்குத்தானடிமையாகவே, யானவாழ்வுபெறவருள்வார் கோலமணவாளமாமுனிவன்" என்றுஞ் சொல்லிற்றிறே. இப்படி ஆரோஹாவரோஹக்ரமங்களிரண்டாலும் குருபரம்பரையை அநுஸந்திக்கக் குறையில்லை. "[illegible]" இத்யாதியாலே எம்பெருமான் செய்த ஆசார்யஸம்பந்த பர்யந்தமான உபகார பரம்பரையை அநுஸந்தித்தால், குருபரம்பரைக்குத் தலையான எம்பெருமானை முந்துறப்பற்ற அடுக்கும்; "[illegible]" இத்யாதியாலும், "நாராயணன் திருமால்" இத்யாதியாலும் ஆசார்யன்பண்ணின பகவத்ஸம்பந்தவைபவத்தை அநுஸந்தித்தால், "[illegible]" என்று ஆசார்யனை முந்துற அநுஸந்திக்க அடுக்கும். "குருபரம்பரையை முன்னிடவே ஶரணாகதன் குறைதீரும், பிராட்டியை முன்னிடவே ஶரண்யன் குறைதீரும்" என்றிறே ஆச்சான்பிள்ளை மாணிக்கமாலையிலே அருளிச்செய்தது. "ஜப்தவ்யம் குருபரம்பரையும் த்வயமும்" என்றிறே அருளிச்செய்தது. குருபரம்பராபூர்வகமல்லாத த்வயாநுஸந்தாநமும், நாவகாரியமிறே. இப்படி ஆதிமத்யாவஸாநஸஹிதையான ஸத்குருஸந்ததி, ஸர்வஸத்துக்களாலும் ஸதாநுஸந்தேய மென்றாயிற்று.

(உ)

இதுவும் ஆழ்வான் அருளிச்செய்தது.

யோநித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்மவ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாய மேநே |
அஸ்மத்குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ: ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே ||

[யோநித்யம் இத்யாதி] - ஸ்ரீராமாவரஜமுநீந்த்ரலப்தபோதராய், " ஸ்ரீவத்ஸசிஹ்ந: " என்று நிரூபகத்தையுடையரான கூரத்தாழ்வான், ஸ்ரீராமாநுஜதர்ஶநத்தை ரக்ஷிக்கவேண்டி ராஜகோஷ்டியிலே சென்று, " நாராயண பரம் ப்ரஹ்ம " என்றும், " நாராயண பரா வேதா: " என்றும், "நாரணனைக்காட்டிய வேதம்" என்றும், "நாராயணாதயி நத்ருஷ்டிம்வேதிக: ..." என்றும் "நாரணனேயாவதீதன்றென்பாரார்" என்றும், "அந்யாயமந்யாயம்" என்று அறைகூறி வென்று, "கலையறக் கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோதான்" என்னும்படி அவர்கள் தர்ஶநம் அஸஹ்யமாய், அத்தர்ஶநத்தை வேண்டாதே மீண்டு எழுந்தருளி தர்ஶநப்ரவர்த்தகரான எம்பெருமானார்தர்ஶநத்தை அபேக்ஷித்துக் கொண்டு எழுந்தருளியிருக்க, அவரும் "இனியறிந்தேனீசற்கும் நான்முகற்குந் தெய்வம் - நற்கிரிசை நாரணன்நீ" என்று திருவில்லாத்தேவரொல்லார்க்கும் மேலாக மேல்நாட்டிலே திருநாராயணனை ஸ்தாபித்து மீண்டு எழுந்தருளி, "அரங்கனல்லால்தெய்வமில்லை" என்று அறுதியிட்டு அரங்கனார்க்கு ஆள் செய்துகொண்டிருக்கிறவர், ஆழ்வான் கண்ணழிவுகண்டு கண்கலங்கியருளி, "பேரருளாளர், நேத்ரபுத்ராதிகளான ஐஹிகபுருஷார்த்தத்தையும், பெரியவிசும்பாகிற ஆமுஷ்மிக புருஷார்த்தத்தையுங் கொடுக்குமவராகையாலே, நேத்ரவிஷயமாக ஒரு ஸ்தோத்ரத்தைச் செய்யும்" என்று நியமிக்க, அப்படியே "அஸ்து" என்று ஸம்மதிபூர்வகமாக ஸ்தவம்பண்ணுகிறவர், " நேத்ரஸாத்குரு ஸ்ரீஶஸஹாமே " என்றும், " ஸ்ரீஶபஶ்யேயம் பரந்தம் ஸஹ " என்றும் அங்குத்தையிலநுபவபரிகரமான அப்ராக்ருத சக்ஷுஸ்ஸை அபேக்ஷிக்க, அப்படியே பேரருளாளரான பெரியபெருமாளும், "பஶ்யந்தி ஸதாதேவ நேத்ரேந்த்ரியநேநயர்ஶ்ரி", " ஸதா பஶ்யந்தி ஸூரய: " என்னும்படியான இமையாத கண்ணை இவர் பெறும்படி பெரியவீட்டுக்கு விடைகொடுத்தருள, அவரும் அதிப்ரீதராய் ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் திருமாளிகையிலே புறவீடுவிட்டிருக்க, இத்தை எம்பெருமானார் கேட்டருளி "அறப்பதறினார்" என்று பதறிக்கொண்டு இவரிருந்தவிடத்தேற எழுந்தருள, அவரும், பரந்தாமமென்னும் திவந்தருகைக்காக அவர்க்கு மறக்கவொண்ணாதபடி அவர்விஷயத்தில் ப்ரபத்தியான இச்ச்லோகத்தை " ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே " என்று விண்ணப்பஞ்செய்து திருவடிகளிலே விழ, அவரும் இவரபிப்ராயம் அறிந்து தம்முடைய ஸ்வம்மான ப்ரபத்தியை "திருநாரணன்தாள் காலம்பெறச் சிந்தித்துய்ம்மினோ" என்னும்படி "ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே" என்று குறைவற அவர்வலத்திருச்செவியிலே ப்ரஸாதித்தருளினாரிறே; அதடியாக, ஸ்ரீவைகுண்டகத்யத்திலே அவர்ப்ரார்த்தித்தருளின பேற்றை இவரும் ஸ்ரீவைகுண்டஸ்தவத்திலே ப்ரார்த்தித்துப் பேற்றோடே தலைக்கட்டினார்; அப்பேறுதான் ஆசார்யாதீநமாகையாலே அவரை அடியிலே ஶரணம் புகுகிறார்.

[யோநித்யம்] - இதில் - பக்திவிரக்திஜ்ஞப்திகுருத்வாநுகம்பாதிக்ய குணத்தாலே முக்திப்ரதத்வ ஶக்தியையுடைய உடையவர் திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறார். [யோநித்யம்] - "திசையனைத்துமேறுங்குணன்" என்று சொல்லப்படுகிற குணவத்தாப்ரதையையுடையராய், நாள்தோறும் ஆஶ்ரிதரை நழுவுதலின்றிக்கே ரக்ஷித்துக்கொண்டு போருகிற ஸர்வேஶ்வரனுடைய சரணாரவிந்தயுகலவ்யாமுக்ததையாலே தத்வ்யதிரிக்தஸமஸ்தவஸ்துக்களையும் த்ருணவத்ப்ரதிபத்திபண்ணியிருப்பாராய், அடியேனுக்கு அஜ்ஞாதஜ்ஞாபநம்பண்ணும் ஆசார்யராய், அதுக்கடியான ஜ்ஞாநாதிக்யத்தை யுடையருமாய், அகதிகள்விஷயங்களில் "ஐயோ!" என்று இரங்கும் ஆந்ருஶம்ஸ்யத்தை யுடையருமாய், சரரூபியாய் முன்வந்துநிற்கிற இந்த ராமாநுசனுடைய சரணங்களை ஶரணமாக அடைகிறேனென்கிறார்.

[யோநித்யம்] - யஃ என்று - "வைதிகோத்தமர்" என்னும் ப்ரஸித்தியைப்பற்றச் சொல்லுகிறது. நித்யம் அச்யுதபதாம்புஜயுக்மருக்மவ்யாமோஹதஃ என்று - "ஸ்ருஷ்டிஷு ஸுகாந்தேஷு ஸுரா ஸுராஸுர வாஹ்யத | கிங்கரோஸ்மி" என்றும், "ஸர்வாத்மநா த்வம் நாத வாஸ்மி" என்றும் சொல்லுகிறபடியே ப்ரணதார்த்திஹராச்யுதரானபேருளாளர் ஸ்ப்ருஹணீயமான திருவடித்தாமரைகளிலே நிரவதிகப்ரேமத்தாலே, "த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே" என்கிறபடியே திருவடிகளுக்கு அசலான அனைத்தையும் த்ருணஸமமாக எண்ணியிருப்பரென்கிறது. "நிரவதிகப்ரேமமநோஹரம் ஶரணம் நஃ", "தென்னத்தியூரர்கழலிணைக்கீழ்ப் பூண்ட அன்பாளனிராமானுசன்" என்று வரதநாராயணனை யாயிற்று; "யோ நித்யமச்யுதபதாம்புஜ..." என்று நிரவதிக ப்ரேமத்துடனே நித்ய திருவாராதநமாக நடத்திப்போருவது; அந்தபக்த்யைஶ்வர்யமதத்தாலே, "த்ருணீக்ருதவிரிஞ்சாதிநிரங்குஶவிபூதயஃ", "கொள்வதெண்ணுமோ தெள்ளியோர்குறிப்பு" என்னும்படி பண்ணியிருப்பராயிற்று; "ஸ்வாஹம் ஹரிபதாம்போஜயுக்ம... நிரவதிகப்ரேமமநோஹரம் ..." என்றாயிற்று இவர் ஶ்ரீஸூக்தியும் இருப்பது. [யஃ] - "திக்குற்றகீர்த்தி யிராமானுசன்" என்று ப்ரஸித்தரானவர். [நித்யம்] - நாடோறும். [அச்யுதபதாம்புஜயுக்மருக்மவ்யாமோஹதஃ]-அச்யுதனாகை யாவது - குணவிக்ரஹவிபூதிகளை நழுவுதலின்றிக்கே யிருக்குமவ னென்னுதல், ஆஶ்ரிதரை நழுவ விடாதவ னென்னுதல், ஆஶ்ரிதரக்ஷணத்தில்நின்றும் நழுவாதவ னென்னுதல். "வீவிலின்பம்மிக வெல்லே நிகழ்ந்த நம்மச்சுதன் வீவில்சீரன் மலர்க்கண்ணன் விண்ணோர் பெருமான்" என்றும், "ஆதுமிலகாலத் தெந்தை யச்சுதனமலன்" என்றும், "அயர்வாங்குநமன்றமர்க்கருநஞ்சினை யச்சுதன்றன்னை" என்றும், "நத்யஜேயம்" என்றுஞ் சொல்லப்படுகிற குணங்களிலேயாயிற்று இவர் ப்ரவணராயிருப்பது. அந்த அச்யுதபதாம்புஜயுக்மருக்மவ்யாமோஹம், அர்ச்சாவதாரந் தொடங்கிப் பரபர்யந்தமாக எங்கும் நித்யமாக உண்டாயிறே இவர்க்கு இருப்பது. அது எங்ஙனேயென்னில்;—அத்திகிரிப்பச்சைநிறத்தச்சுதனுடைய பதாப்ஜங்களிலும், வேங்கடத்தச்சுதனுடைய தாங்கு தாமரையன்ன பொன்னாரடியிலும், அரங்கமாநகரச்சுதனுலகமளந்த பொன்னடியிலும், நண்ணித்தொழுமவர் நச்சுவார்முன்னிற்கும் நாராயணனச்சுதனுடைய துளங்கு சோதித்திருப்பாதத்திலும், தயரதற்குமகனை அச்சுதன் காடுறைந்த பொன்னடியிலும், கோவிந்தனச்சுதன் பொற்றாமரையடியென்று பேசும்படியாய்க் கானில்கன்றின்பின்போன பொன்னடியிலும், அச்சுதனனந்த சயனன்செம்பொன்திருவடியிணையிலும், வீவிலின்பம்மிக எல்லைநிகழ்ந்த நம்மச்சுதனை விண்ணோர் பிரானை மாசில்மலரடியிலு மாயிற்று, இவர் மயல்கொண்டிருப்பது. இதுதான் "ஆர்வமொடுநிச்சல்நினைவார்" என்னும்படியிறே நித்யேச்சை நடந்து செல்வது. "தென்னத்தியூரர்கழலிணைக்கீழ்ப்பூண்டவன்பாளன்", "அரங்கன்கழல் சென்னிவைத்துத் தானதில்மன்னும்", "பஞ்சித்திருவடிப் பின்னைதன்காதலன் பாதம் நண்ணு", "நின்றவண்கீர்த்தியும் நீள்புனலும் நிறைவேங்கடப்பொற்குன்றமும் வைகுந்தநாடுங் குலவியபாற் கடலு முன்தனக்கெத்தனை யின்பந்தரும்" என்னக்கடவதிறே. அவர் தாமும் "ஶரணாகதிஸாரம்," "ஸ்ப்ருஹணீய ஶ்ரீநிவாஸ," "ஶ்ரீரங்கஶாயிநம்" என்றும், "க்ருதாஞ்ஜலிபுடோ நாராயணம்" என்றும், "ககுத்ஸ்த", "ஶேஷிணே ஶேஷஶாயிநே", "ஶ்ரீவைகுண்டநாய" என்றுமிறே அருளிச் செய்தது. ஆகையாலே, பூவார்கழல்களிலும், கண்ணன் கழலிணையிலும், காகுத்தன்தன்னடியிலும், பாற்கடலுள்பையத்துயின்ற பரமனடியிலும், வைகுந்தச்சேவடியிலும், ஸர்வாந்தர்யாமியான நாராயணசரணங்களிலு மாயிற்று வ்யாமுக்தராயிருப்பது. இப்படி பஞ்சாவஸ்தாவஸ்திதனை ஸர்வேஶ்வரனுடைய சரணாரவிந்தயுகள மகரந்தரஸாஸ்வாத மதுவ்ரதமாய் அநுபவித்து அதிலே மக்நராய், அத்தாலே ததிதரங்களாய் ஆவிர்ஞ்ச அமங்களமான பாஞ்சபௌதிகவிஷயபஞ்சகத்தையும், அதுக்குமேலான ஆத்மாநுபவத்தையும் த்ருணவத்ப்ரதிபத்தி பண்ணியிருப்பாராயிற்று. இப்படி பக்திவிரக்தியுடைய இவர்திருவடிகளைத் தாமும் அப்படி பரத்வாதிகளெல்லாமாக அறுதியிட்டு அடையப் பார்க்கிறார்.

[அஸ்மத்குரோஃ] - கீழ்ச்சொன்ன அச்யுதபக்தியாலே ததிதரங்களை த்ருணவத்கரிக்கையாலு மாயிற்று, இவரை ஆசார்யவரணம் பண்ணுகிறது "விஜ்ஞாதத்வாதிஸத்யாயாதத்வஜ்ஞாயிநே" என்னும்படி தத்த்வத்ரயத்தையும் உபதேசிக்கையாலே அலகலகாக ஆராய்ந்து "ஹாமஹஜேவியாஜி

வைராக்யத்தையும் ... ஸுஷு ஜந்மஜரா வ்யாதி ... ”
என்று தத்த்வத்வய விஷய வைராக்யத்தையும், “ தத்வஜ்ஞாநஸுஹ்ருத் ” என்று தத்த்வைகவிஷய பக்தியையுமுடையராகையாலே தமக்கு அநுகுணமாகவே ‘ அஸ்மத்குரோ: ’ என்கிறார். “ஜ்ஞாநபக்த்யாதி ... ”, “ ... ”. இவர்க்கும் இரண்டிற்கும்அடி எம்பெருமானாரிறே; “ ஸ்ரீமத்ராமாநுஜார்ய ... ” என்றுயிற்று இருப்பது. இவரையாயிற்று ப்ரதாந ஶிஷ்யராக ப்ரதமம் பெரியதிருமந்த்ரம் முதலான ரஹஸ்யங்களை ப்ரஸாதித்து அபிமாநித்தருளிற்று. நரநாராயணாவதார மென்னலாம்படியிறே, ராமாநுஜ கூராதிபர்கள் கூட்டாவிருப்பது. எல்லாரும் ஒருதட்டும் இவர் ஒருதட்டுமாகவிறே எம்பெருமானார் எண்ணியிருப்பது; அத்தைப்பற்ற, “ஒருமகள்தன்னை யுடையேன்” என்றாரிறே. இப்படி அத்விதீயமாயிற்று இரண்டு விஷயமும் இருப்பது. “கலையறக்கற்றமாந்தர்” என்னலாம்படியான இவருக்கு ஸகலார்த்தமும் ப்ரஸாதிக்கும்படியான ஜ்ஞாநவைபவத்தைச் சொல்லுகிறது ‘பகவத:’ என்று. “சொல்லார்தமிழொருமூன்றும் சுருதிகள்நான்கு மெல்லையில்லாவறநெறி யாவுந்தெரிந்தவன்”, “உண்மை நன்ஞான முரைத்த”, “இராமானுசன் மெய்ம்மதிக் கடல்” என்னும்படியிறே ஜ்ஞாநவைபவம் இருப்பது. “ ... ” என்னக்கடவதிறே; பகவச்சப்தம் - ஸர்வகல்யாணகுணங்களையும் பரிபூர்ணஜ்ஞாநத்தையும் சொல்லுகையாலே, அவற்றால்குறைவற்ற விஷயமாயிருக்கை. இத்தால் - தமக்கு அஜ்ஞாதஜ்ஞாபநம் பண்ணுகைக்கு உடலான ஜ்ஞாநவைபவத்தைப் பேசினார். இனித் தம்முடைய துர்க்கதி கண்டு இரங்கும்படி தயாபூர்த்தியை அருளிச்செய்கிறார், “அஸ்யதயைகஸிந்தோ:” என்று; ஈடுபடுகிறார். அஸ்ய - ராமாநுஜஸ்ய என்று மேலில் பதத்தோடே சேர்த்தி தயைகஸிந்து என்று - கேவலக்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்ய ரென்றபடி. “பயனன்றாகிலும் பாங்கலராகிலும், செயல் நன்றாகத்திருத்திப் பணிகொள்வான், குயில்நின்றார் பொழில்சூழ் குருகூர்நம்பி” என்றிறே இருப்பது. “பாடினனருள்கண்டீர் இவ்வுலகினில்மிக்கதே,” “எண்டிசையுமறிய வியம்புகேனொண்டமிழ்ச்சடகோபனருளை” என்னுமாபோலே, “நிகரின்றி நின்ற வென்னீசதைக் குன்னருளின்கணன்றிப், புகலொன்றுமில்லை யருட்குமஃதேபுகல்” என்றும், “உன்பெருங்கருணைதன்னை” என்றும், “வண்மையினாலும் தன்மாதகவாலும்” என்றுமிறே இவர்க்ருபையின் பெருமை இருப்பது. அருளாழியம்மானாய், “தயாஸிந்தோ ... ” என்னும்படியான ஸர்வேஶ்வரன் க்ருபை மறுத்தகாலத்திலும் ஒதுங்கலாம்படியான க்ருபை; அவன்கைவிட்ட ஸம்ஸாரிகளையும் “ ... ” என்று உபதேஶித்துத் திருத்துமவரிறே. கீழ்ச்சொன்ன ஜ்ஞாநபக்திவைராக்யம், நிரவதிகதயையாகிற இந்தக்குணங்களெல்லாம் கேட்டேபோகாமே கண்ணாலே கண்டு அநுபவிக்கலாம்படி ப்ரத்யக்ஷமாய் முன்வந்து நிற்குமவரை ‘அஸ்ய ராமாநுஜஸ்ய’ என்று அநுபவிக்கிறார். இந்த ராமாநுஜனுடைய வென்று - இவர்க்கு ஈடுபாட்டுக்கு விஷயம் இருக்கிறபடி. ‘ராமாநுஜஸ்யசரணௌ ஶரணம்ப்ரபத்யே’ என்று நாராயணசரண ஶரணவரணத்திற் காட்டிலும் ராமாநுஜசரண ஶரணவரணம் ஸ்வரூபாநுகுணமுமாய் அமோகமுமா யிருக்குமாகையாலே, அவர்திருவடிகளை ஶரணமாகப் பற்றுகிறார்; “பழுதாகாதொன்றறிந்தேன்” இத்யாதி. “மாறாயதானவனை - வேறாக, வேத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச், சாத்தியிருப்பார்தவம்”, “பாற்கடலுள் முன்தனக்கெத்தனை யின்பந்தரும்” என்று செழுந்திருப்பாற்கடல் கண்துயில்மாயன் திருவடிக்கீழ் விழுந்திருப்பாரிறே. வளர்ந்தவெங்கோப மடங்கலொன்றாய் அன்று வாளவுணன் கிளர்ந்தபொன்னாகங்கிழித்தவன்கீர்த்திப்பயிரெழுந்து விளைந்திடும் சிந்தையிராமானுசனைக் கண்டுஇறைஞ்சி மற்றவரைச் சாத்தியிருக்கப் பார்க்கிறார். எம்பெருமானார்தவம் - தபஶ்ஶப்தவாச்யையான ப்ரபத்தி. இவர்தவம் - “எம்பெருமானார் திருவடிகளே ஶரணம்” என்னும் ஆசார்யாபிமாநம்; “ ... ” என்றாரே. அவர்தவத்தைக்காட்டிலும் இவர்தவம் வென்றதாயிற்று; அவர்க்குமுன்னேயிறே இவர்க்குப் பேறு ஸித்தித்தது; “ ... * ... ”, “நம்புவார்பதி வைகுந்தங்காண்மினே” என்னும்படி வைகுண்டப்ரியதர்ஶநம் பண்ணினார்.

---

* ... என்று பாடாந்தரம்.

இந்த ராமாநுஜப்ரபத்தியிலே நாராயணப்ரபத்யர்த்தமெல்லாம் அநுஸந்தேயம்; கீழ் பக்திவிரக் ஜ்ஞப்தி வ்யூணிதையாகிற இவை - முக்திப்ரதஸக்திஸாதநங்களாயிருக்கும்; இதிறே, புருஷகாரஹா துக்கு அநுகுணமான ஸ்ரீமத் பதார்த்தமும். இவையும் ஈஸ்வரவஸீகரண ஹேதுவான குணமிறே. புரு காராந்தரநிரபேக்ஷமாயிறே இவ்விஷயம் இருப்பது. இனி, வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஸீல்ய ஸௌல யாதிகள் ஸௌகர்யாபாதகங்களாயிருக்கும், நாராயணபதத்திற்போலே; "[illegible]" என்று இஸ்ஸம்பந்தத்தாலே வாத்ஸல்யாதிகள் அநுஸந்தேய அங்கு. "இதத்தா யிராமாநுசன்", "எந்தையிராமாநுசன்", "எம்மைய னிராமாநுசன்". "ஏலப்புனை தென்னைமார்". என்னைமார் - ஆணுடன்பிறந்தவர்கள் என்னுமாபோலே இங்கு எல்லாரோடுமுண்டா ஸௌப்ராத்ரம், "கோயிலண்ணனிராமானுசன்", "அடியேனுக்கிருப்பிடம்", "இராமாநுசன்சரண்", "இ மாநுசன்சரணேகதி" என்கையாலே; தோஷபோக்யத்வமாகிற வாத்ஸல்யமும், ஸ்வத்தினுடைய லா லாபம் ஸ்வாமியதாம்படியாய் ஸ்வத்தை நோக்குகிற ஸ்வாமித்வமுமாகிற இவை - ராமாநுஜஸப்தத்தா அநுஸந்தேயம்; தாழ்ந்தவர்களோடே தன்பேறாகக் கலக்கையாகிற ஸௌஸீல்யமும் ஆஸ்ரயிப்பார்க் த்ருஷ்டிகோசரமாய்ப் புரோவர்த்தியாய் நிற்கிற ஸௌலப்யம். ஜ்ஞாநமாவது - ஆஸ்ரிதர்க்கு த்யாகஸ்வீ கங்களுக்கு உறுப்பான இஷ்டாநிஷ்டங்களை யறிகைக்கு உடலான அறிவு; ஸக்தியாவது-அநிஷ்டங்களை போக்குகைக்கும் இஷ்டங்களைக்கொடுக்கைக்கு முடலாய், அஸக்தரானவர்களை அக்கரையேற்றவல்லஸக். பூர்த்தியாவது - இவனிட்டதுகொண்டு த்ருப்தனாகவேண்டாத பூர்த்தி; ப்ராப்தியாவது-தன்பேறாகச்செய் தலைக்கட்டுகைக்கு உடலான ஸம்பந்தம்; காருணிகத்வமாவது - ஸம்பந்தமில்லாவிடிலும் குருடன் கு யிலேவிழுந்தால் எடுக்கைக்கு ஸம்பந்தம் வேண்டாதாபோலே பிறர்நோவுகண்டால் 'ஐயோ!' என் வேண்டும்படியான தயை; "[illegible]" என்னக்கடவதிறே ஔதார்யமாவது - கொள்வாரைத் தேடிக் கொடாவிடில் தரியாமற்கொடுக்கும் கொடையுடைமை; இ ஸௌகர்யாபாதக குணசதுஷ்டயமும், கார்யாபாதககுணஷட்கமும் இங்கும் அநுஸந்தேயம். அது எ னேயென்னில்;—"இப்படியைத்தொடருமிராமாநுசன்" என்னும்படி அவர்பின்படரும் குணனாய் "தீம்பனை னென்றுநினைத்தென்னையிகழா தெதிராச, ரன்றறிந் தங்கீகரிக்கையால்" என்கிற வாத்ஸல்யமும், "அண்ண லிராமாநுசன்" என்னும்படியுடையவராகையாலே பல்லுயிர்க்கும் வீடளிப்பானாய் விண்ணின்தலைநின் மண்ணின் தலத்து உதித்தபடியாலே ஸ்வத்திருந்தவிடத்தேவந்து நோக்கும்படியான ஸ்வாமித்வமும், "எ அருவினையின் திறஞ்செற் றிரவும்பகலும் விடா தென்தன்சிந்தையுள்ளே நிறைந்தொப்பறவிருந்தான் என்னும்படி ஒருநீராகக் கலந்த ஸௌஸீல்யமும், "என்கண்ணுள்ளும்நெஞ்சுள்ளும்நின்ற" என்று சொ லும்படியான ஸௌலப்யமும், "மெய்ஞ்ஞானத்திராமாநுசன்", "கதி ராமாநுசன்", "உண்மைஞ ஞானமுரைத்த விராமாநுசன்" என்று அறியாதன அறிவிக்கைக்கும் அவர்களுக்குச் செய்யவேண்டுவ வும் தவிர்க்கவேண்டுமதுவும் அறிகைக்கும் ஈடான ஜ்ஞாநமும், நிலத்தைச்செறுத்துண்ணும் நீசக்கலியை நினைப்பரிய பலத்தைச் செறுத்தும் என்பெய்வினை தென்புலத்தில் பொறித்த வப்புத்தகச்சும் பொறுக்கியும் போருகிற பாபவிமோசகதவஸக்தியும், "சலியாப்பிறவிப்பவந்தரும் தீவினைபாற்றித்த பரந்தாமமென்னுந்திவந்தரும்" என்னும்படி விரோதிநிவ்ருத்திபூர்வக பகவத்ப்ராப்தியை உண்டாக்கிக் டுக்குமதான ஸக்தியும், பகவத்விஷயத்தை அண்டைகொண்ட பூர்த்தியும், "எந்தையிராமாநுசன் வந்தெடு தனனின் றென்னை" என்கிற ப்ராப்தியும், "காரேய்கருணை" என்கிற காருணிகத்வமும், "கொண்டலனை வண்மை", "உன்னுடைய கார்கொண்டவண்மை", "உன்வண்மையென்பாலென்வளர்ந்ததுவே" என் அபேக்ஷாநிரபேக்ஷமாக உபகரிக்கும் ஔதார்யஸ்வபாவமுமாகிற ப்ரபத்த்யபேக்ஷித குணங்களெல்லாம்குண திகழ்கொண்ட விராமாநுசனிடத்திலே கண்டு அநுபவிக்கலாம்படியா யிருக்குமிறே.

இப்படி கோடித்வய குணயுக்தரான ராமாநுசனுடைய சரணங்களை உபாயமாக ஸ்வீகரிக்கும் சொல்லுகிறது-"ராமாநுஜஸ்ய சரணௌ ஸரணம் ப்ரபத்யே"என்று;குலந்தரும் நலந்தருஞ்சொல்லான நா யண என்னும் நாலெழுத்துப்போலே ஸகலபுருஷார்த்த ஸாதநமன்றிக்கே, கேவலம்மோக்ஷைகஹேதுவாக யிற்று, இந்தச் சதுரக்ஷரி இருப்பது; "[illegible]" என்றாரே இவர்தாமே. "[illegible]"; நாராயண ராமாநுஜ என்றிறே விகல்பிக்கலாயிருப் ப இத்திருநாமந்தான், யுகந்தோறுமுண்டாயிருக்குமாயிற்று; இளையபெருமாளிடத்திலும், நம்பிமூத்த ளுக்குத் தம்பியான க்ருஷ்ணனிடத்திலும், இப்போது இளையாழ்வாரான இவரிடத்திலும் பேர்பெற்ற

யிருப்பது. ஏதத்பூர்வாவதாரத்வயமும், ஸாதுபரித்ராணத்துக்கும் துஷ்க்ருத்விநாஶத்துக்கும் உடலாயிருக்கும்; இவ்வவதாரமும், வைதிகமார்க்கத்தை ஸ்தாபிக்கைக்கும், அவைதிகமார்க்கத்தை நிரோதிக்கைக்கும், ப்ரபத்திமார்க்கத்தைப் பெருக்கி வளர்க்கைக்கும் உடலாயிருக்கும். அவ்வவதாரங்களிலும் அப்படியே, ‘‘ஸக்ருதேவ ப்ரபந்நாய,’’ ‘‘ஏகம் ஶரணம் வ்ரஜ’’, ‘‘த்வமேவோபாயபூதோ மே பவ’’ என்றிறே இவர்கள் ப்ரபத்தியை வர்த்திப்பித்தது. அவர், ஸ்ரீமந்நாராயணவிஷயத்தில் ப்ரபத்தியை கத்யமுகேந வெளியிட்டார்; இவர், ராமாநுஜவிஷயத்தில் ப்ரபத்தியை இப்பத்யமுகேந வெளியிடுகிறார். அங்கு, ப்ரமேயபூதர் வெளியிட்டார்கள்; இங்கு, ப்ரமாதாவானவர் வெளியிட்டார் [ராமாநுஜஸ்யசரணௌஶரணம்ப்ரபத்யே] என்று. ‘அஸ்யராமாநுஜஸ்ய சரணௌ’ என்று ‘‘இராமாநுசன்பரன்பாதமுமென்சென்னித்தரிக்கவைத்தான்’’ என்னும்படி திருவடிகளிலே தலையைமடுத்து ஶிரஸா யாசிக்கிறார். ராமஶரணாகதி, ‘‘ஶிரஸா யாசதஸ்தஸ்ய வசநம் ந க்ருதம் மயா’’ என்று பலித்ததில்லை; ராமாநுஜஶரணாகதி அவ்யபிசரிதமாக பலிக்குமிறே. ‘‘ஸக்ருதேவ ப்ரபந்நாய’’ என்னும்படி, ‘‘ராமாநுஜஸ்ய ஶரணௌ’’ என்று - வேறு த்வயம் வேண்டாதே, அடியே த்வயமாயிருக்கை. லோகவிக்ராந்தசரணம் போலே மாறிநடப்பனவாயிறே இராமாநுசன்தன் இணையடி இருப்பது; நாராயணசரணங்களளவுஞ் செல்லவேண்டாத பூர்த்தி. விக்ரஹைகதேஶத்தைச் சொன்னது - விக்ரஹத்துக்கும் உபலக்ஷணமாக. ‘‘கையிற்கனியென்னக் கண்ணனைக்காட்டித்தரிலு முன்றன், மெய்யிற் பிறங்கிய சீரன்றி வேண்டிலன்யான்’’ என்னும்படியாயிருக்கும். [சரணௌஶரணம்] - ‘‘இராமாநுசன் நம்மை நம்வசத்தே விடுமே சரணமென்றால்’’ என்கிற உபாயாத்யவஸாயத்தைச் சொல்லுகிறது. ‘ப்ரபத்யே’ என்று - உபாயஸ்வீகாரஞ் சொல்லுகிறது. ‘‘நையும்மனமுன் குணங்களை யுன்னி யென்னாவிருந்தெம்,மைய னிராமாநுசனென் றழைக்கு மருவினையேன், கையுந்தொழும்’’, ‘‘வாசாயதீந்த்ர மநஸா வபுஷா ச யுஷ்மத் பாதாரவிந்தயுகளம் பஜதாம் குரூணாம் | கூராதிநாத’’ என்னும்படி த்ரிவிதகரணத்தாலும் பற்றுகிறார். ‘‘இராமாநுசனையுன்னுந்திண்மை’’ என்று - எல்லார்க்கும் மாநஸாத்யவஸாய மாகலாம்; இவர் பூர்ணாதிகாரியாகையாலே த்ரிவிதகரணத்தாலும் பூர்ணப்ரபத்தி பண்ணுகிறார். இந்த ஸ்வீகாரம் ப்ராப்யமாகையாலே, ‘‘ஏய்ந்தபெருங்கீர்த்தி யிராமாநுசமுனிதன், வாய்ந்தமலர்ப்பாதம் வணங்குகின்றேன்’’ என்று வர்த்தமாநமாய் நடக்கிறது.

இவர் தீர்க்கபந்துவாகையாலே, எல்லார்க்கும் தாம் பண்ணின ப்ரபத்தியே தஞ்சமாம்படி கொழுந்துவிட்டுப்படரும்படி பண்ணுகிறார்; அத்தைப்பற்றவிறே ‘‘வ்யாக்யாதா ராமாநுஜார்யேந பூர்வம் நுதோ’’ என்றது. இத்தால் - இவர் சரமகாலத்திலே பண்ணின சரமப்ரபத்தியே இவர் சரண்கூடின சரமபர்வநிஷ்டர்க்கெல்லாம் அவ்யபிசரிதமான உபாயமாய்ப் பேற்றோடே தலைக்கட்டு மென்றதாயிற்று. ‘‘ப்ரபந்நஜநகூடஸ்தரான எம்பெருமானார், தம்முடைய பெருகிப்போருகிற பெருங்கருணையாலே பெரியபெருமாள் திருமுன்பே சென்று பெரியபிராட்டியாரை முன்னிட்டு, ‘ப்ரபந்நஜநங்களான பெரியோர்களிடத்திலே பேதைகளானவர்கள் செய்யும் பெரும்பிழைக்கும் ப்ரபத்தியே இவர்சரண்கூடின சரமபர்வநிஷ்டர்க்கெல்லாம் ப்ராயஶ்சித்தமாகக்கடவது’ என்று ப்ரார்த்திக்க, புருஷகாரபலத்தாலே ‘பொறுத்தோம்’ என்ன, இந்த ப்ரார்த்தநாப்ரகாரத்தை ராமாநுசனைத்தொழும் பெரியோரான கூரத்தாழ்வான் ஏகாந்தத்திலே ஸேவித்து, அனைவர்க்கும் தஞ்சமாக ‘‘நமோஸ்து’’ இத்யாதி ஶ்லோகத்தை அருளிச்செய்தார்’’ என்று பெரியோர்கள் அருளிச்செய்வர்கள். வாதிகேஸரி அழகியமணவாளச்சீயரும், பகவந்தம் யதிவரம் ப்ரணிபத்ய யதீந்த்ராங்க்ரியாந்வயரானார்; அத்தைப்பற்றப் பின்புள்ளாரும் ‘‘வ்யாஸாதாஸ்யஸ்ய’’ என்றார்கள்; ஈட்டுக்கு ப்ரவர்த்தகரான ஈயுண்ணிமாதவப்பெருமாள் ப்ரஶிஷ்யரான நாலூர்ப்பிள்ளையும் ராமாநுஜதாஸரிறே; யதிவரபுநரவதாரமாய் யதீந்த்ரப்ரவணரான சீயரும் தம்ஶிஷ்யபுத்ரர்களுக்கு ராமாநுஜநாமத்தையுண்டாக்கி நடத்தியும், நூற்றந்தாதியை அநுகரித்து அருளிச்செய்த யதிராஜவிம்ஶதியிலே ஸ்ரீவத்ஸசிஹ்நரடியாக ‘‘வாசாமகோசர மஹாகுணதேஶிகாக்ர்ய கூராதிநாத’’ என்றும், ‘‘ஶ்ரீமத் தயாபால நாத ப்ருத்யாதிதேஶிகவர’’ என்றும், ஸ்ரீஶைலநாதரிடத்திலே ஶேகரித்தது. ஏவம்வித ஸம்பந்தயுக்தராய் குருகுலதுர்யரான பெரியசீயர்ஸம்பந்தமேயிறே ப்ரபலம்; இத்தால் - விஶிஷ்டபக்ஷத்திலே ஊன்றின ஶிஷ்டராய், அத்தாலே ஶ்ரேஷ்டருமாய், ஸர்வப்ரகாரத்தாலும் அஹங்கார ரஹிதரான ஆசார்யர்கள் ஸம்பந்தமே ஆதரணீய மென்றதாயிற்று. (௯)

ஆளவந்தார் அருளிச்செய்தது.

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூதி: ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம் |
ஆத்யஸ்ய ந: குலபதேர்வகுலாபிராமம் ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமி மூர்த்நா ||

[மாதா இத்யாதி] - இந்த ஜ்ஞாநம் அதிக்ருதாதிகாரமாயப் போகாமே ஸர்வாதிகாரமாம்படி த்ராமிடியான ப்ரஹ்மஸம்ஹிதையை "மயர்வறமதிநலம்" என்கிற பக்தியாலே வாசிகமாக்கி, "மாங்களுமிரங்கும்வகை" என்கிற தம்முடைய ஆகர்ஷகமான ஈரச்சொல்லாலே அருளிச்செய்கையாலும், பெரியமுதலியார்க்கு இந்த ஜ்ஞாநத்துக்கு உபாதாநம் ஆழ்வாராகையாலும், அவர்திருவடிகளிலே விழுகிறார். "உரலினோடிணைந்திருந்தேங்கியவெளிவெத்திறம்" என்றும், "நெய்யுண்வார்த்தையுளன்னைகோல்கொள்ள" என்றும், "எல்லாங்கண்ணன்" என்றும் பெரியமுதலியாரையும் ஸ்ரீபராஶரபகவானையும்போலே க்ருஷ்ணைகவித்தராயிருக்கிறபடியையும் நினைத்து ஆழ்வார்திருவடிகளிலே ஶரணம்புகுகிறார்.

[மாதா] - உத்பத்திக்கு முன்னே வரங்கிடந்து பெறுகைக்கு வருந்தி, பத்துமாஸம் கர்ப்பதாரணம் பண்ணி, ப்ரஸவவேதனையநுபவித்து, அஶக்திகளையும் மதியாதே பால்யதஶையில் ஆதரித்து வளர்த்து - பக்வனானால் பின்பு பருஷபாஷணம்பண்ணினாலும் அவற்றைப்பொறுத்து, அகலவிசையாதே இவன் ப்ரியத்தையே வேண்டியிருக்கும் மாதாவைப்போலே உபகாரகராயிருக்கை. [பிதா] - அவள்பாத்ரமாத்ரமென்னும்படி உத்பாதகனாய், என்றுமொக்க ஹிதைஷியான பிதா பண்ணும் உபகாரத்தைப் பண்ணுமவரென்கை. "ஶரீயாநுவ்யூஹஜ்விதா:". [யுவதய:] - இவ்விருவரையும் மறந்து விரும்பும் யுவதிகளைப்போலே நெஞ்சுக்கினியராயிருக்கை. [தநயா:] - அவர்களுடைய யௌவநத்தை அழியமாறிப்பெற்றவராய், பால்யத்தில் ஸுககராய், பக்வதஶையில் ரக்ஷகராய், நிரயநிஸ்தாரகரான புத்ரர் பண்ணும் உபகாரத்தைப் பண்ணுமவரென்கை. [விபூதி:] - விபவமில்லாதபோது இவையெல்லாம் அஸத்ஸமமாகையாலே, இவையெல்லாவற்றையும் நன்றாக்கும் ஐஶ்வர்யம்போலேஉத்தேஶ்யராயிருக்குமவரென்கை.[ஸர்வம்]-அநுக்தமான ஸர்வைஹிகங்களுமாயிருக்கை. அதாவது - மோக்ஷோபாயமும் முக்தப்ராப்யமும். [யதேவ] - அவதாரணத்தால் "சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத்தாய்தந்தையு மவரே" என்றிருக்கும் ஆழ்வார் நினைவுக்கே. [நியமேந] - என்றுமொக்க, அவர்க்கு ப்ரியமென்று போமதொழிய ப்ராமாதிகமாகவும் புறம்பு போகக்கடவதன்றிக்கே யிருக்கை. [மதந்வயாநாம்] - "வித்யாஜந்மநா:" என்கிற உபயஸந்தாநஜாதர்க்கு. [ஆத்யஸ்ய ந:] - வைஷ்ணவஸந்தாநத்துக்கு ப்ரதமாசார்ய ரென்கை. [குலபதே:] - ஸ்த்ரீக்கு பர்த்ருகுலம்போலே கோத்ரருஷியும் அவரே. [வகுலாபிராமம்] - திருமகிழ்மாலையாலே அலங்க்ருதமாயுள்ளத்தை. இத்தால் - திருவடிகளில் பரிமளத்தால் வந்த போக்யதையைச் சொல்லுகிறது. திருத்துழாயாலே அலங்க்ருதமான பகவச்சரணாரவிந்தங்களை வ்யாவர்த்திக்கிறது. "நல்லடிமேலணிநாறுதுழாய்." [ஸ்ரீமத்] - ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயோடே நித்யஸம்யுக்தமாயிருக்கை; "அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந்", "ஸ து நாகவர: ஸ்ரீமாந்" என்று - பகவத்ப்ரத்யாஸத்தியை ஐஶ்வர்யமாகச் சொல்லக்கடவதிறே. என்னுடைய ஸம்பத்துக்கு ஊற்றான ஐஶ்வர்யத்தையுடையவ ரென்னவுமாம். [ததங்க்ரியுகலம்]-அதுவென்னுமத்தனை யொழியப் பேசிமுடியவொண்ணாதென்கை. [யுகலம்]-சேர்த்தியால்வந்த அழகையுடைத்தாயிருக்கை. [ப்ரணமாமி மூர்த்நா] - ஆழ்வாருடையபடிகளை நினைத்தவாறே, நம: என்று நிற்கமாட்டாதே அவர் திருவடிகளிலே தலையைச் சேர்க்கிறார்.

(ௐ

பட்டர் அருளிச்செய்தது.

பூதம் ஸரஶ்ச மஹதாஹ்வய பட்டநாத ஸ்ரீபக்திஸார குலஶேகர யோகிவாஹாந் |
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிஶ்ராந் ஸ்ரீமத்பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம் ||

கீழ் உபகாரகரை ஆஶ்ரயித்த இத்தால் செய்ததாயிற்று - முமுக்ஷுவுக்கு உபகாரகர் ஶேஷித்வ ப்ரதிபத்திவிஷயபூதரும் ஸ்துத்யரு மென்னுமிடம் சொல்லுகிறது. ஒருவனுக்கு ஶேஷிகள் இருவருமாம்படி எங்ஙனே? என்னில்-க்ருதிஶேஷித்வம் யாகாதிகளுக்கும் புரோடாஶாதிகளுக்கும் உண்டானாற்போலே ஈஶ்வரன் ப்ரதாநஶேஷியாய் பாகவதர் த்வாரஶேஷிகளா மிடத்தில் விரோதமில்லை; அதவா, ஈஶ்வரன் நிருபாதிக ஶேஷியாய், தத்ஸம்பந்த மடியாக வந்ததாகையாலே பாகவதஶேஷத்வம் ஔபாதிக மென்றுமாம். "தமக்கு ஸ்தோத்ராரம்பஹேதுவான பக்த்யாதிகள் பிதாமஹோபாத்தநம்" என்கைக்காக முதலிலே பெரியமுதலியாருடைய ஜ்ஞாநபக்திகளுடைய ஆதிக்யஞ் சொன்னார். நான்காம்ஶ்லோகத்தாலே - இவ்வர்த்தம் த்ரைவித்யவ்ருத்தாநுமத மென்கிறது. ஐந்தாம்ஶ்லோகத்தாலே - இந்தஜ்ஞாநம் இவர்க்கு ஆழ்வார்களாலே வந்த தென்கை. "ஹ்ருத்யம் யதீந்த்ரஶிஷ்யாணாமாத்யம் வேதாந்தவேதிநாம்" என்று ஆழ்வான் அக்ரகண்யராகையாலே - "க்ஷுத்ரோ:" என்றார். அப்படிப்பட்ட பாரதந்த்ர்யத்தை "இவ்வாத்மவஸ்து அவர்க்குஶேஷமாகில் அவருடைய விநியோகப்ரகாரங் கொண்டு கார்யமென்?" என்றார்; ஏவம்விதஸ்வரூபராகையாலே, உடையவரும் "ஒருமகள்தன்னை யுடையேன்" என்றார். இப்படி ஸ்வாசார்யவிஷயத்தில் பாரதந்த்ர்யத்தாலும், "நாம் பெற்ற லோகம் நாலூரானும் பெறவேணும்" என்று ப்ரார்த்திக்கையாலும், "ஶிஷ்யாசார்யக்ரமத்துக்கு ஸீமாபூமி கூரத்தாழ்வான்" என்றார்கள்; "ஆசார்யவர்ய விஹவஸ்ய வஶிஷ்யவர்கே த்வத்ஸீமசிஹ்நிதமிவ ..." என்னக்கடவதிறே. அதைப்பற்ற, உடையவரும் "யத்ஸ்வீயநாத:" என்று ப்ரார்த்தித்தருளினார்; நூற்றந்தாதியிலும் மொழியைக்கடக்கும் பெரும்புகழா னடியாக விரும்பியருளினார். மற்றையாரான இவ்வருகிலுள்ளாரும் அல்லாவழியைக் கடப்பது அவர்களாலேயிறே; அவர்கள்தாம் யோநித்யம் த்ரைவித்யாதிகளடியாக அடியுடையராயிருப்பார்கள். "மாறனடிபணிந்துய்ந்தவன்", "ராமாநுஜாங்க்ரிஶரணோஸ்மி" இத்யாதி. மதுரகவிகளடிப்பாட்டிலே நடக்கிற க்ருபாமாத்ரப்ரஸந்நாசார்யர்கள் ஆழ்வானடியாயிருப்பார்கள்; "ஸ்ரீவத்ஸசிஹ்ந ஸம்வத:" இத்யாதி. "ஆரியர்காள்கூறும்" என்கிற எழுபத்துநாலுமுதலிகளுக்கும் உடையவரடியான ஆசார்யத்வம்; அதில் முக்யம் ஆழ்வான் ஸம்பந்தம்; பட்டரடியாகவிறே. அஷ்டஶ்லோகீமுகேந ரஹஸ்யத்ரயார்த்தஸம்பந்தம். திருவாய்மொழியும் அடியாயிருக்கும், ஒன்பதினாயிரம் பன்னீராயிரத்திலே பர்யவஸித்தது; பெரியபட்டருடைய ப்ரஶிஷ்யரான நம்பிள்ளை திருவடிகளிலேயிறே நடுவில்திருவீதிப்பிள்ளை பட்டர் ஆஶ்ரயித்தது; அவரும் ராமாநுஜநாமாவிறே; அஷ்டாக்ஷரதீபிகை அவரடியாயிருக்கும்; நம்பிள்ளை குமாரரும் ராமாநுஜனிறே; அவரும் ஸாரஸங்க்ரஹஞ் செய்தருளினார்; தத்வம்ஶ்யரும் கோயிலுடையவர்க்குச் சிறிது கைங்கர்யங்களுஞ் செய்தார்கள். வடக்குத்திருவீதிப்பிள்ளை குமாரரான பிள்ளைலோகாசார்யரும் வகுளபூஷணஶாஸ்த்ரஸாரமான வசநபூஷணாதி ரஹஸ்யப்ரபந்தகர்த்தாவாய், தம்முடைய ப்ரதாநஶிஷ்யரான எம்பெருமானார்க்கு "கூரகுலோத்தமதாஸர்" என்று திருநாமஞ்சாத்தினார்; "என்னாரியர்க்காக எம்பெருமானார்க்காக" என்றிறே அக்கோஷ்டியில் பரிமாற்றம் இருப்பது.

[பூதம்ஸரஸ்ய] - பட்டர் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்கச்செய்தே, நஞ்சீயர்புருஷகாரம் பிறக்க, அவர்க்காக ஆழ்வார்களை அநுஸந்தித்ததாயிருக்கும் இஶ்ஶ்லோகம். ஆண்டாளை "நீளா" என்று தனித்து ஶரணம்புகுகிறதாயிருக்கும் அஶ்ஶ்லோகம். ஆழ்வார்கள்தஞ்செயலை விஞ்சியிறே அவள்வைபவம் இருப்பது. [பூதம்ஸரஸ்ய இத்யாதி] - நிரவதிகபகவத்ப்ரேமயுக்தரான ஆழ்வார்கள் பதின்மரையும், அவர்களுக்குஶேஷபூதரான மதுரகவி யதிவரர்களிருவரையும் தாம் நித்யஸேவை பண்ணும்படியை அருளிச்செய்கிறார். "மேவினே னவன்பொன்னடி மெய்ம்மையே" என்னுமவராகையாலே ஆழ்வாரைச் சொன்னபோதே அதிலே அவரும் அந்தர்ப்பூதர்.

[பூதம்] - பூதத்தாராகிறார் - "மாதவன்பூதம்" என்று நிரூபிக்கும்படியான மஹத்தையையுடையராய், மாமல்லையில் மாதவீகுஸுமத்திலே அவதரிக்கையாலே "கடல்மல்லைப்பூதத்தார்" என்று நிரூபகமானவரென்கை. 'ஸரஸ்ய' என்று - "மல்லையாய் மதிட்கச்சியூராய்" என்கிறபடியே மல்லைக்குஅநந்தரபாவியாக எடுப்பதான கச்சிவெஃகாவில் பொய்கையிலே, "பூவில்நான்முகனைப்படைத்த" என்கிறபடியே பொற்றாமரைப்பூவிலே அவதரித்த பொய்கையாரென்றபடி. மஹதாஹ்வயராகிறார் - "மாடங்கள் சூழ்ந்தழகாய கச்சி" என்னும்படியான அத்தேஶத்துக்கு ஸமமாயிருப்பதான மாடமாமயிலையில் மாவல்லிக்கேணியில் செவ்வல்லிப்பூவிலே அவதரித்து, "யானுமோர்பேயன்", "பித்தரென்றே பிறர்கூற" என்று பேசும்படியான பேயார். இவர்கள் மூவரும் பரவிஷயத்தில் பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளையுடையராயிறே இருப்பது. அதில் சரமதசையான பரமபக்தியையிறே, இவர் ப்ராப்தரானது. பட்டநாதராகிறார் - "வேதாந்தவிழுப்பொருளின்மேலிருந்த விளக்கை விட்டுசித்தன் விரித்தனன்" என்கிறபடியே - வித்வத்கோஷ்டியிலே சென்று அவர்களை வென்று, பரதத்வநிர்ணயமுகேந 'பட்டர்பிரான்' என்று பேர்பெற்றவரென்கை. இவரும் "சோராதகாதல்பெருஞ்சுழிப்பால் தொல்லைமாலையொன்றும் பாராதவனைப் பல்லாண்டென்றுகாப்பிடும்" என்னும்படி நிரவதிகபகவத்ப்ரேமயுக்தராயிறே இருப்பது. பட்டநாத, ஸ்ரீ என்று - பிந்நபதமாய், லக்ஷ்மீதுல்யையான ஆண்டாளென்னுதல்; அன்றிக்கே, பட்டநாதஸ்ரீயென்று - பெரியாழ்வார்க்கு ஸ்ரீயான ஆண்டாளென்று அநுஸந்திக்கவுமாம். "திருமகள்போல வளர்த்தேன்" என்றாரிறே. மேல் 'பக்திஸார' என்கிறது; அன்றிக்கே, பட்டநாதர்க்கநந்தரம் "ஸ்ரீஸூக்திஸார" என்று சொல்லுகிறது - "பெறற்கரிய நின்னபாதபத்தியான பாசனம், பிறர்க்கரியமாயனே எனக்குநல்கவேண்டுமே" என்று ப்ரார்த்தித்து பக்தியைப் பெற்று, 'பக்திஸாரர்' என்று நிரூபகமானவரென்கையைப் பற்றவாயிற்று; "பொன்னிசூழரங்கமேய பூவைவண்ண" என்றிறே இவருடைய முடிந்த அவாவுக்கு விஷயம் இருப்பது. குலசேகரராகிறார் - "அங்கையாழியரங்கனடியிணை, தங்குசிந்தைத் தனிப்பெரும்பித்தன்" என்னும்படி பெரியபெருமாள் விஷயத்திலே நிரவதிகப்ரேமத்தை யுடையரான ஸ்ரீகுலசேகரப்பெருமாளென்கை; மாலடிமுடிமேல் கோலமாங் குலசேகரனிறே. "எம்பெருமான்தன் சரிதை செவியாற்கண்ணாற்பருகுவோ மின்னமுத மதியோமன்றே" என்றிறே பெருமாள்விஷயத்திலும் இவர் ப்ரேமம் இருப்பது. யோகிவாஹராகிறார் - முநிவாஹநரான பாண்பெருமாளென்கை. இவரும் "இலங்கைக்கிறைவன் தலைபத்துதிரவோட்டி யோர்வெங்கணையுய்த்தவ னோதவண்ணன், அரங்கத்தம்மான்" என்றும், "அணியரங்கனென்னமுதனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்றும் அவ்விஷயத்தில் அஸ்தமிதாந்யஸ்ஹாவராயிருக்கும்படி யாயிற்று. இவர்பக்தியும். பக்தாங்க்ரிரேணுவாகிறார் - "எல்லையிலடிமைத்திறத்தினிலென்றுமேவுமனத்தனும்" என்றும், "அடியார்க்கென்னையாட்படுத்தாய்" என்றுஞ் சொல்லுகிறபடியே எல்லையான ததீயஶேஷத்வமே நிலைநின்ற ஸ்வரூப மென்று அறுதியிட்டு, அதுவே நிரூபகமான தொண்டரடிப்பொடியாழ்வாரென்கை; "துளபத்தொண்டாயதொல்சீர்த்தொண்டரடிப்பொடி" என்றும், "தொடையொத்ததுளவமும் கூடையும் பொலிந்துதோன்றிய தோள் தொண்டரடிப்பொடி" என்றும் தாமேஅருளிச்செய்தாரிறே. இவர்தாம் "தன்பால் ஆதரம்பெருகவைத்த வழகன்" என்று பேசுகையாலே பகவதப்ரஸாதாயத்தபக்தியை யுடையவரென்னுமது தோற்றுகிறது. பரகாலராகிறார் - "மருவலர்தமுடல் துணிய வாள்வீசும் பரகாலன்" என்கிறபடியே - பகவத்விட்டுக்களான பாஹ்யர்கள் கேளாராகையாலே அவர்களைத் தோள்வலியாலும் நிரஸித்து அதுக்குமேலே ஶாஸ்த்ரீயமார்க்க ப்ரவர்த்தகராய் வந்த ஶத்ருக்களை ஸ்வோக்திஶஸ்த்ரங்களாலும் நிரஸித்து, "[illegible]" என்னும்படி காயிககைங்கர்யங்களையும், "அரங்கமாலைச் சொல்லினேன் தொல்லைநாமம்", "என்னுடைச்சொற்களென்னும் தூயமாமாலைகொண்டு சூட்டுவன் தொண்டனேன்" என்றும் வாசிககைங்கர்யங்களையுஞ் செய்து போந்தவரென்கை. "காம்பினார் திருவேங்கடப்பொருப்ப நின்காதலையருளெனக்கு" என்று ப்ரார்த்தித்து, "பத்திமைக்கன்புடையேனாவதே பணியாயெந்தாய்" என்னும்படி ஆசைதான் பெரியதாயிற்று; "அரங்கமென்பதிவள்தனக்காசை" என்னக்கடவதிறே. ததீயஶேஷத்வத்திலும "நின்திருவெட்டெழுத்தும் கற்று நானுற்றது முன்னடியார்க்கடிமை" என்றிறே இருப்பது.

யதீந்த்ரமிஶ்ராகிறார் - "ஸம்ஸேவித ஸம்யமிஸஹஸ்ர" என்னும்படி யதிகளாலே ஸேவிக்கப்படும் எதித்தலைநாதனான் எம்பெருமானாரென்கை. மிஶ்ரஶப்தம் - பூஜ்யவாசி; "ராமாநுஜாசார்யர்" என்னுமாபோலே. மிஶ்ராந் என்கிற பஹுவசநம் எல்லாரையுஞ் சொல்லுகிறதாய், இதிலே அநுக்த

ரான மதுரகவிகளையுங் கூட்டி அநுஸந்திக்கிறதாகவுமாம். "மதுரகவியாழ்வா ரெதிராசரா மிவர்கள்" என்றிறே சேர்த்தி இருப்பது. அன்றிக்கே, மிஶ்ரஶப்தம் - பெரியோரைச் சொல்லுகிறதாய், அத்தாலே சடகோபனைச் சிந்தையுள்ளே பெய்தற்கிசையும் பெரியவரான மதுரகவிகளைச் சொல்லுகிற தென்னுதல்; அன்றிக்கே, இவரும் பொன்னரங்கமென்னில் மயலேபெருகு மிராமாநுசனாய், ரங்கேஶகைங்கர்ய துரந்தரராயிறே இருப்பது; அச்யுதபதாம்புஜ யுக்மருக்மவ்யாமோஹம் இவர்க்கு முண்டிறே [ஸ்ரீமத்பராங்குஶமுநீந்] - "யதீந்த்ரமிஶ்ராந்" என்று - கீழ்உக்தரானவர்களெல்லாரும் ஒருதட்டும், ஸ்ரீமத்பராங்குஶமுநியென்கையாலே - ஆழ்வாரொருவரும் ஒருதட்டு மென்னுமது தோற்றுகிறது; எல்லாரையும் அவயவபூதராயுடையராயிறே ஆழ்வார்தாம் இருப்பது. ஸ்ரீமத் என்கையாலே - ஒழிவில்காலத்தில் ப்ரார்த்தித்த கைங்கர்யரூப ஸம்பத்தை யுடையவ ரென்கை. பராங்குஶ ரென்கையாலே-"மதாவலிப்தர்க்குஅங்குசமிட்டு"என்னும் படியிருக்கை; "விஷ்ணோர்தேஹாநுகாரேண*ஸர்வேஷாமேவ வாதிநாம்" என்று சொல்லப்படுகிற முக்குறும்பையறுக்கும் அங்குஶமாயிறே இவர் இருப்பது. "ஓதியுணர்ந்தவர்முன்னா வென்சவிப்பார்மனிசர்" என்றும், தத்ராஶ்ரித்யமுடையவர்களை "முழுதுணர்நீர்மையினார்" என்றும், "கொள்ளென்றுகிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாகக் கொள்ளென்று தமமூடும்" என்றும், "பெருஞ்செல்வமு மவரே" என்றும், "பரமனைப்பயிலுந் திருவுடையார்யவரேலும்" என்றும், "சண்டாளசண்டாளர்களாகிலும் வலந்தாங்குசக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்றுள்கலந்தாரடியார்தம்மடியாரெம்மடிகள்" என்றும் இப்படி ஸ்வஸூக்த்யங்குஶத்தாலே அஜ்ஞருடைய மும்மதங்களை அருளென்னுந்தண்டாலே தமித்து ஓட்டினபடி. அன்றிக்கே, பராங்குஶரென்று - நிரங்குஶஸ்வதந்த்ரனான ஈஶ்வரனை ஸ்வஸூக்த்யங்குஶத்தாலே வஶீகரிக்கவல்ல ரென்னவுமாம்;"வலக்கையாழி யிடக்கைச்சங்க மிவையுடை மால்வண்ணனை,மலக்குநாவுடையேற்கு" என்று தாமும் அருளிச்செய்தார்; "வஶீக்ருதவஶீக்ருதவசா"என்று பின்புள்ளாரும் பேசினார்கள். முநிஶப்தத்தாலே - மநநஶீலரென்கிறது. எண்ணுதனவெண்ணும் நன்முனிவ ரிறே. பரரக்ஷணமேயாயிற்று, இவர் சிந்தாமூலத்திலே சிந்தித்திருப்பது. ஸர்வேஶ்வரனுடையவும் ஸம்ஸாரிகளுடையவும் ஸம்ரக்ஷணத்திலேயாயிற்று, இவர் திருவுள்ளம் ஊற்றிருப்பது. "ஆளுமாளார்", "தனிமையும் பெரிதுனக்கு", "அவத்தங்கள்விளையுமென்சொற்கொள்" என்றும், "உலகினதியல்வே", "இவையென்னவுலகியற்கை" என்றும், இவர்கள் துர்க்கதியைக் கண்டு "மற்றொன்றில்லை சுருங்கச்சொன்னோம் மாநிலத்தெவ்வுயிர்க்கும்" என்று உபதேஶித்துத் திருத்திப்போருமவரிறே; இவரும், மதிநலம்அருளப்பெற்று ஆராதகாதலையுடையராயிறே இருப்பது. 'பரகாலயதீந்த்ரமிஶ்ராந் ஸ்ரீமத்பராங்குஶமுநிம்' என்கையாலே -"கலியுங்கெடுங் கண்டுகொண்மின்" என்று ஆழ்வாராலே இருவரும் ஸூசிதரென்னுமதுவும், "பராங்குஶபரகாலயதிவராதிகள்" என்கிற ப்ரபந்நஜநகூடஸ்தத்வமும் தோற்றுகிறது. "திரிவிக்கிரமனடியிணைமிசை"என்றும், "எந்நாளேநாம் மண்ணளந்தவிணைத்தாமரை" என்றும்நிர்த்தேஶித்து, "உன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே" என்றும், "உலகமளந்தபொன்னடியேயடைந்துய்ந்தேன்" என்றும், "லோகவிக்ராந்தசரணௌ ஶரணம் தேऽவ்ரஜம் விபோ" என்றுமிறே, இவர்கள் ப்ரபத்திபண்ணும் க்ரமம் இருப்பது. இந்தக்ரமம் ஆழ்வார்களெல்லார்க்கும் ஒக்குமிறே. "த்ரிவிக்ரமக்ரமாக்ராந்த", இவர்கள்தாம் ஸர்வேஶ்வரன்பக்கல் தாங்கள் கற்றத்தையிறே பேசி யோதச் சொல்லுகிறது. "பேசமின் திருநாமமெட்டெழுத்தும்", "மனமுடையீர் மாதவனென்றோதுமின்" என்று. "த்வயார்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தா" என்று உடையவரும் பெரிய பெருமாளிடத்திலே கேட்டு,உபதேஶித்தும், "பாருலகிலாசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்கூறும்" என்றுபேசியும் வரம்பறுத்துச் செய்தருளினாரிறே. உடையவர் தாம் த்வயத்தை ஜ்ஞாநாதிகர்க்கு ப்ரீத்யதிஶயத்தாலே புநঃபுநঃ ப்ரஸாதிக்கையும், அஜ்ஞர்க்கு அவர்களநர்த்ததர்ஶநத்தாலே அருள்விஞ்சி ப்ரஸாதிக்கையுமாகிற ஆகாரத்வயம் உண்டிறே; எட்டு மிரண்டு மறிவித்த எம்பெருமானாரிறே. "யதீந்த்ரமிஶ்ராந் ஸ்ரீமத்பராங்குஶமுநிம்" என்கையாலே திருவாய்மொழிமுதலான 'திவ்யப்ரபந்தங்களாலும் ஸ்ரீபாஷ்

* "தூதீயோஹிஜநோத்தம:" என்ற பாடம் லக்ஷணையால் பொருள் கொள்ளத் தகுந்தது.

பொதுத்தனியன்கள்.

யாதி ஸ்ரீஸூக்தியாலும் தர்ஸநத்தை நடத்திப்போருமவர்களாய், ஆழ்வாருக்கு சரணவத் பரதந்த்ரராய் "மாறனடிபணிந்துய்ந்தவன்" என்றும், "சடகோபர்தேமலர்த்தாட்கேய்ந் தினியபாதுகமா மமந்தை யிராமாநுசனை" என்றும் ஆழ்வார்திருவடிகளுக்கு அத்யந்தம் அந்தரங்கரான ஆகாரத்தைப் பற்ற, அண்மையாக அருளிச்செய்தது. ஆழ்வானும் "ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே" என்று அநந்தரஸ்லோகத்திலே "தத்வம் ஸ்ரீர்யேஷ வக்தா [illegible]" என்று ஆழ்வாரை அநுஸந்தித்தருளினர். "யதீந்த்ராய ஸம்ஸ்ருதே" என்றிறே சேர்த்தி இருப்பது.

"பூதம் ஸரஸ்ச" என்று தொடங்கி - ஆழ்வார்களோடு அவர்களையும் "யதீந்த்ரமிஸ்ராந் ஸ்ரீமத்பராங்குசமுநிம்" என்று ஸஹபடித்தது - இவர்கள் ப்ராதாந்யம் தோற்ற. "யோநித்யம்" "மாதா" என்கிற இரண்டு தனியனாலும் - விஸேஷித்து ஆசார்யர்கள் அநுஸந்தித்தார்கள், குருபரம்பரையிலும் த்வயத்திலும் எம்பெருமானை அநுஸந்திக்குமாபோலே. அதிலும் உடையவர் ப்ராதாந்யத்தாலே - யோகித்யம் மூற்பட்டிருக்கும். ஆகையால், யதிவரசரமராய் அவரோடும் தஸமரான தேஸிகர்களையும், தேஸிககுலகூடஸ்தரான ஸடாரிபுசரணங்களையும் 'ப்ரணதோஸ்மிநித்யம்' என்று நித்யஸேவைபண்ணும்படி சொல்லுகிறது. உபகாரத்துக்காகில் "தமேவ நாதம்" என்று ஒருகால் அநுஸந்திக்குமதே உள்ளது, ப்ராப்யபுத்யா ஸதாவிறே. "[illegible]", "[illegible]" என்று அங்கும் அநுவர்த்தநமுண்டாகவிறே அருளிச்செய்தது. 'ப்ரணதோஸ்மி' என்று - ததீயவிஷயத்தில "[illegible]" என்கிறபடியே த்ரிவிதகரணப்ரவணதையாலே ப்ரணாமம்பண்ணுகிறே னென்கிறார். இத்தால் - பக்திபாரவஸ்ய ப்ரபந்நரான ஆழ்வார்களும், அவர்களோடு விகல்பிக்கும்படியான ஸ்ரீபாஷ்யகாரரும், ஸர்வதாபஜநீய ரென்றதாயிற்று. "[illegible]" என்றிறே ஆழ்வார்களைத் தொடங்கி ஸேவிக்கும் க்ரமம் இருப்பது.

பிள்ளைலோகம்சீயர் திருவடிகளே சரணம்.

வ்யாக்யாந ஸஹிதங்களான

திருவாய்மொழியின் ஈட்டுத்தனியன்கள்.

திருமலையாழ்வார் அருளிச்செய்தது.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

மணவாளமாமுநிகள் அருளிச்செய்தது.

திருவருள்மால் சேனைமுதலி சடகோபன் நாதமுனி சீருயக்கொண்டார் மணக்கால் நம்பி சென்றுமாளவந்தார், குருமாலாதரர் குருகைப்பிரான்கன்பாமெதிராசர் கோவிந்தர் கூரேசர் பட்டர் வேதாந்திமுநி, இருகண்ணர்க்கன்புடையநம்பிள்ளை யிவரீடளித்தற்கேய்ந்தமாதவர் பற்பநாப ரிவரருளாளர், திருவடிபூண்றியதேவப்பெருமாள் கைக்கொண்டருளும் திருமலை யாழ்வார் பதங்கள் முன்பென்னுட்சேர்ந்தனவே.

“[illegible]” என்கிற தனியனிலும், “திருவருள்மால்” என்கிற திருநாமத்திலும், திருவாய்மொழியின் ஈட்டின் ஸம்ப்ரதாயத்தை அடியேதொடங்கித் திருவாய்மொழிப்பிள்ளை யளவும் தர்ஶிப்பித்தபடி சொல்லுகிறது. “[illegible]” என்கிறபடியே, நாதாதியாக தேவாதிப ரளவு மூண்டானவர்களை “வந்தே” என்று - குருபங்க்திநமஸ்காரத்தைச் சொல்லுகிறது, ‘நாதம்’ இத்யாதியால்.

நாதராகிறர் — “ஸ்ரீரங்கநாதர்” என்னும் நாமதேயத்தை யுடையராய், “[illegible]” என்னும்படியான ஆழ்வாரை நாதராகவுடையராய், “[illegible] । [illegible]” என்று ‘திருமாலால் அருளப்பட்ட சடகோபன் அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினன்’ என்கிறபடியே அந்த ஆழ்வாருடைய அருள்பெற்ற நாதமுநியென்கை. ஆழ்வாரைத் திருப்புளி யடியிலே மயர்வறமதிநலமருளி விஶேஷகடாக்ஷம்பண்ணினாற்போலே, அவ்விடந்தன்னிலே ஆழ்வாரும் விஶேஷகடாக்ஷஞ் செய்தருளினர்; ‘தாம் மயர்வறமதிநலமருளி பஜநத்திலே சேர்க்கிறர்’ என்னக்கடவதிறே; ஆழ்வாருடைய பக்தியோடு விகல்பிக்கலாம்படியான அகாதபகவத்பக்தியிறே இவரது. இத்தால் “முநிவரை யிடுக்கியும்” என்னும்படி ஸத்வாரகபகவத்ப்ரஸாதமடியாக நடந்துவந்த ஶாஸ்த்ரங்களிற் காட்டில், அத்வாரகபகவத்ப்ரஸாதமடியாக ஆழ்வாராலே அவதரித்த ஏற்றத்தையுடைய திருவாய்மொழியை அவர் ப்ரஸாதத்தாலே பெற்ற ஏற்றத்தைச் சொல்லுகிறது; ஶாஸ்த்ரப்ரவர்த்தநத்துக்கு அடி வ்யாஸ ப்ரஸாதமாகையாலே ஆர்ஷமூலமாயிருக்குமது; “[illegible]” என்றதிறே; “[illegible]

[illegible]'' என்று - அநுபாஸ்யராக எடுக்கப்பட்டதிறே அவர்களை. அதின் தாத்பர்யமான இதுக்கு ''திருவருள்மால்சேனைமுதலிசடகோபன்'' என்கையாலே ஸர்வேஶ்வரப்ரஸாத ஸாக்ஷாத் கருதஜ்ஞராரான ஆழ்வார் அடியாயிருக்கும்; ஆகையாலிறே,''[illegible]'', ''திருவருள்மால்'' என்று அடியிலே எடுத்தருளிற்று. நாதமுநிகள்தாம் தண்தமிழ்க் கண்ணிநுண்சிறுத்தாம்பைப் பண்டையுருவால் பன்னீராயிரமுரு உரைசெய்ய, ஒண்தமிழ்மாறன் திருவுள்ளமுகந்து திவ்யஞாநம் நாதமுனிக்கு நயந்தருள்புரிந்தாரிறே.

என்கிற அவதாரணத்தாலே ஸங்க்ருதஹேதுத்வம் வ்யாவர்த்திக்கப்படுகிறது. பாக்யத்தையுடையராய் - "விதிசூழ்ந்ததால்" என்று சொல்லப்பட்ட பகவத்க்ருபையை யுடையராய். "எங்குமபக்கம்நோக்கறியான்" என்றத்தைப்பற்ற, நிரந்தர பகவத்கடாக்ஷ பாத்ரபூதருமாய் என்றது. அத ஏவ, தத்த்வஹிதங்களில் நிபுணரா யென்று அத்யாஹரித்துக்கொள்வது. இத்தால, யுகவர்ணப்ரயுக்தஜ்ஞாநமாந்த்ய ஶங்கை பரிஹ்ருதையாயிற்று. இவ்விடத்திலே "[illegible]" என்றது அநுஸந்தேயம். த்ரைவர்ணிகர்க்கன்றோ உபதேஷ்ட்ருத்வம் என்ன, விதுர இத்யாதி. ஆதிஶப்தேந ஸுதர்மவ்யாதாதயோ விவக்ஷிதா:. விதுராதிகளில் விலக்ஷணரென்றது - சதுர்த்தவர்ணஜர்க்கும் ஜ்ஞாநயோக்யதையும் ததுபதேஶயோக்யதையும் உண்டு என்கைக்காக. "[illegible]" இத்யாதிகம் த்ரஷ்டவ்யம். உப்ப்லவ: - உபத்ரவ:, குலாதிதோஷ மென்றபடி. 'தேசாந்தரங்களிலின்றிக்கே' இத்யாத்யாக்ஷேபத்துக்கு உத்தரம் - இப்பாஷை நடையாடி இத்யாதி. பாஷாந்தரங்களிலே - பாஷாந்தரவத்தேஶேஷு; ஏதத்பாஷாரஹித தேசங்களிலே யென்றபடி. விலக்ஷணர் - லோகஸாரங்கமுநி ப்ரப்ருதிகள். நன்மை - சேதநருச்யநுகுண பலப்ரதத்வம், அர்யாபதேசருபதயா போக்யத்வம், ஸர்வலக்ஷண ஸம்பந்நத்வம் முதலானவை. அவைதிகருங்கூட இதி - வைதிக பரிக்ரஹமின்றிக்கே அவைதிகர் பரிக்ரஹித்தாலாயிற்று தோஷமாவது. வைதிகபரிக்ரஹ முண்டாயிருக்கச்செய்தே அவைதிகபரிக்ரஹ முண்டானால் ஸ்ரீராமாயணாதிகளைப்போலே ப்ரத்யுத ஶ்லாக்யதா ஹேது வென்றபடி. 'ஶ்ருதிஸ்ம்ருதி விருத்தமான காமபுருஷார்த்தத்தை' என்றதுக்கு உத்தரம் - வேதநமென்றும் இத்யாதி. "[illegible]" இத்யாதிகளில் வேதநம். "[illegible]" இத்யாதா வுபாஸநம். பக்தியை காமத்வேந சொல்லுகிறதுக்கு ப்ரயோஜநம் - உத்தமஸ்த்ரீக்கு உத்தமநாயக விஷயாநுராகம்போலே தமக்கு பகவத்ப்ராவண்யாதிஶய ஸூசநார்த்தமாகவும், குடஜிஹ்விகாந்யாயேந விஷயப்ரவணருக்கு மோக்ஷஶாஸ்த்ரத்திலே ருசிபிறக்கைக்காகவும். 'ஶ்ருதிஸ்ம்ருதிகளிலே' இத்யாதிக்கு உத்தரம் - ஐஶ்வர்ய கைவல்யங்களை இத்யாதி. வேதம் த்ரைகுண்ய விஷயமாகையாலே ஐஶ்வர்யகைவல்யங்களை விதித்ததென்றபடி. விஹிதத்வ ப்ரஶ்ந பரிஹாராநந்தரம் ஸ்வபக்ஷஸாதகமாகப் பின்னையும் சிலவைபவாதிசயங்களை அருளிச்செய்கிறார் - ப்ரதிபாத்யனான இத்யாதி. 'எம்பெருமானுடைய மாஹாத்ம்யத்தாலும்' என்றவிடத்திலே "[illegible]" இத்யாத்யநுஸந்தேயம். இத்தால், இப்ப்ரபந்தத்தில் ஏகாமஶத்திலும் அர்த்தவாதஶங்கையில்லை என்று இந்த ஹேதுவுக்கு பாவம். எம்பெருமானை ஸுஸ்பஷ்டமாக ப்ரதிபாதிக்கையாலும் என்கிறதுக்கு - அவிஶம்பேந ப்ரதீதி ஜநகத்வ மர்த்தம். பக்திக்கு உத்பாதகங்கள் என்றது - 'இப்பத்தால் பத்தராவர்' என்றத்தைப்பற்ற. "உருளாநிற்பன்

க்கு உத்பாதகங்களாகையாலும், உத்பந்நையான ஸக்திக்கு வர்த்தகங்களாகையாலும், ஸ்ரவணாதிகளில் அப்போதே நிரதிஸயப்ரீதிஜநகங்களாகையாலும், இவற்றிற்சொல்லுகிற அர்த்தங்களுக்கு வேதத்தில் பலவிடங்களிலும் ஸாக்ஷியாகச் சொல்லுகையாலும், ப்ரஹ்மகாரணவாதத்தாலும், ப்ரஹ்மஜ்ஞாநாந் மோக்ஷத்தைச் சொல்லுகையாலும் புருஷார்த்தவிஷயமான ப்ரபந்தங்களெல்லாவற்றிலும் இப்ப்ரபந்தங்களை த்ருடதரப்ரமாணங்களாக உபபாதித்து வைதிககோஷ்டியில் அபியுக்தரானவர்கள் பரிஹரித்தார்கள்.

ஸகவத்ப்ரஸாதத்தாலே அவனை அநுபவித்துப் பரிபூர்ணராயிருக்கிற இவர்க்கு எம்பெருமானைப் பிரிகையும், பிரிவாலே நோவுபட்டுக்கூப்பிடுகையுங் கூடினபடி எங்ஙனேயென்னில்; - ஓரோகுணத்தை அநுபவித்தால் அநுபூதகுணங்களிலுண்டான ப்ரியத்வப்ரகர்ஷம் க்ஷுத்ரவிஷயங்களில் வைராக்யத்தைப் பிறப்பித்து குணாந்தரங்களிலே ஸ்ப்ருஹையைப் பிறப்பிக்கும், "வைராக்³ய [illegible]" என்றும், *"மாற்பான்மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு" என்றும் சொல்லுகிறபடியே; பின்னை அக்குணங்களில் க்ரமப்ராப்தி பற்றாது; யாதொருபோது ஆசைமிக்கது, அப்போது ஆசைப்பட்ட பொருள் கிடையாமையாலும், பகவதநுபவவிரோதியான ப்ரக்ருதிஸம்பந்த ஸ்மரணாதிகளாலுமாக ஸகவத்விஷயத்தில் அநுபவித்த அம்ஸத்தையும் இழந்து † "எந்நாள யானுன்னை யினிவந்துகூடுவன்" என்றும், ‡"பலநீகாட்டிப் படுப்பாயோ" என்றும், $"போரவைத்தாய்புறமே" என்றும், §"கூவிக்கொள்ளுங்கால மின்னாயே" என்றத்தைப்பற்ற.

உத்பந்நையான இத்யாதி - இந்த ஹேதுத்வயமும் பரம்பரயா புருஷார்த்த பர்யவஸாயித்வபரம். 'ஸ்ரவணாதிகளில்' இதி - ஆதிசப்தேநோச்சாரணாதி ரப்தீயதே. இவ்விடத்திலே ஸ்ரவணாதி வேளையிலேதானே கரதலாமலகவத் ஸ்பஷ்டார்த்தபோதஜநகத்வாரா ப்ரீதிஜநகத்வம் விவக்ஷிதம். இத்தால், ஜடிதிப்ரமாஜநகத்வரூப ப்ராமாண்யாதிசயம் சொல்லுகிறது. "கேட்டாரார்," "இன்பம்பயக்கும்" என்றத்தைப்பற்ற, 'நிரதிசயப்ரீதிஜநகங்கள்' என்றது. வேதத்தில் - வேதத்தை. யத்வா, இவற்றில் சொல்லுகிற அர்த்தங்களுக்கு ஸாக்ஷியாக வேதத்தில் பலவிடங்களிலும் சொல்லுகையாலுமித்யந்வய꞉. அதாவது - "சுடர்மிகுசுருதியுள்" "முதுவேதமுதல்வன்" "வேதநீரன்" இத்யாதியை நினைக்கிறது. 'ப்ரஹ்மகாரணவாதம்' என்றது - "தானோருருவே தனிவித்தாய்", "வேர்முதலாய் வித்தாய்" இத்யாதியை நினைத்து. ப்ரஹ்மஜ்ஞாநாந் மோக்ஷமென்றது - "சிந்தித்துய்மினோ" "சிந்திப்பேயமையும்" இத்யாதியைப்பற்ற. √ பூர்வோக்த மஹாவாக்யத்திலே 'எதிர்சூழல்புக்கு' இத்யாத்யம்ஸத்தை அவலம்பித்து ஸங்கிக்கிறார் - 'பகவத்ப்ரஸாதத்தாலே' இத்யாதி; விஸத விஸததர விஸததமமாக அநுபவித்துப் பரிபூர்ணரான இவர்க்கு என்றபடி. இத்தால், இவருக்கு ஸம்ஸ்லேஷமாவது - மாநஸாநுபவமேயிறே. இது கர்மமடியாக வந்ததன்றிக்கே பகவத்ப்ரஸாதமடியாக வந்ததாகையாலே விச்சேதங்கூடாதென்று ஸங்காதாத்பர்யம். 'ஓரோகுணத்தை' இதி - ஸமுதாயேந அநுபவித்தவளவன்றிக்கே தனித்தனியே அநுபவித்தாலென்றபடி. ஸ்ப்ருஹையை - ஸ்ப்ருஹையையும். உக்தத்துக்கு ப்ரமாணம் - 'பரமாத்மநி', 'மாற்பால்' இத்யாதி. "[illegible]" இத்யுத்தரார்த்தம். இதம் பார்ஹஸ்பத்ய ஸ்ம்ருதௌ. அபரமாத்மநி - பகவத்வ்யதிரிக்த க்ஷுத்ரவிஷயே. 'மாற்பால்' இத்யாதி: ஸர்வேஸ்வரன் பக்கலிலே ஹ்ருதயம் ப்ரவணமாக ஸ்த்ரீகளுடைய தோளிணைகளில் நசையற்று இத்யர்த்த꞉. சுழிப்பவென்று - குணாந்தர ஸ்ப்ருஹாஜநகத்வமும் ஸூசிதம். ஸ்ப்ருஹாமாத்ரமொழிய அநுபவமில்லையோ? என்ன, 'பின்னை' இத்யாதி. 'ப்ரக்ருதிஸம்பந்த ஸ்மரணாதிகளாலும்' இதி: அத்ர ஆதிஸப்தேந ஸம்ஸார ஸ்மரணம் விஷயஸ்மரணம் தொடக்கமானவற்றைச் சொல்லுகிறது. இவ்விடத்திலே "[illegible]" என்கிறது அநுஸந்தேயம். ப்ரக்ருதி ஸம்பந்த ஸ்மரணத்துக்கும், விஷயஸ்மரணத்துக்கும், ஸம்ஸார ஸ்மரணத்துக்கும் பகவத்வைலக்ஷண்யத்தை ஸ்மரித்து அது கிடையாமையால் வந்த ஆர்த்திக்கும் அடைவே நாலுசந்தை 'எந்நாள்' இத்யாதி. 'நான் உன்னை இனிவந்து கிட்டுவது எந்நாள்? பலவிஷயங்களை நீ காட்டி முடிக்கப் பார்க்கிறாயோ? உனக்குப் புறம்பான விஷயப்ரசுர ஸம்ஸாரத்திலே போரவிட்டுவைத்தாய். என்னை யழைத்துக்கொள்ளுங்காலம் இன்னம் ஸமீபியாதோ' இத்

* மூன்றாந்திருவந்தாதி-கச. † திருவாய்மொழி-ரு, உ, க. ‡ ஷை ச, கூ, கூ. $ ஷை [illegible]

னங்குறுகாதோ" என்றும் கூப்பிடாநிற்பர் அவனை அநுபவிக்கப்புக்கால் * "அடியேனடைந்தேன் முதன்முன்னமே" என்றும், † "பருகிக்களித்தேனே" என்றும், ‡ "உண்டுகளித்தேற்கும்பரென்குறை" என்றும். § "தொண்டீரேல்லீரும்வாரீர் தொழுதுதொழுதுநின்றார்த்தும்" என்றும், ¶ "எமர்கீழ்மேலேழுபிறப்பு மாசதிர்துபெற்று நம்முடைய வாழ்வுவாய்க்கின்றவா" என்றும் தாமும் தம்முடைய ஸம்பந்தி ஸம்பந்திகளுமாய்க் கூடக் களிப்பர். இப்படி பஹுசதுரனான எம்பெருமான்பக்கலிலே நிரதிசயபக்திமான்களாய், தத்ஸம்ச்லேஷ விச்லேஷைகஸுகதுக்கராய், அவனை யல்லது அறியாதபடியாய் பகவதநுபவஸுகம் மிக்கபோது இதரபதார்த்தங்களுமெல்லாம் தம்மைப் போலே எம்பெருமானைப் பெற்று ஸுகிக்கிறனவாகவும், விச்லேஷமென்று ஒருவகையுண்டென்றும் அறியாதே லோகயாத்ரையோடொக்க மறந்து, விச்லேஷவ்யஸநம் மிக்கால் ஸம்ச்லேஷ ரஸமுண்டென்றும் அறியாதே இதரபதார்த்தங்களுமெல்லாம் தம்மைப்போலே எம்பெருமானைப் பிரிந்து நோவுபடுகிறனவாகக் கொண்டு "நீயுந்திருமாலானெஞ்சங்கோட்பட்டாயே" இத்யாதியாலே அவற்றுக்குமாகத் தாம் நோவுபடாநிற்பர். இவர்க்கு ப்ரியாப்ரியங்கள் ஒருகாலும் முடியாதே பர்யாயேண உண்டாயிருக்கையாலே இவர்க்கு சிந்தயந்திப்படி நித்யமாய்ச் செல்லுகையாலே இவரை தீர்க்கசிந்தயந்தி யென்றாயிற்று நம்முதலிகள அருளிச்செய்வது. ஆனால், சேதநர்க்கு ஸ்த்ரியந்நபாநாதிகளே தாரகபோஷகபோக்யங்களாய்ச் செல்லாநிற்க, இவரை பகவத்குணைகதாரகரென்னக்கூடுமோ? என்னில்; – திருவயோத்யையிலும் கோஸலஜநபதத்திலுமுள்ள ஸ்தாவர ஜங்கமங்களுடைய ராமகுணைகதாரகங்களாயிருக்கும்படியை அநுஸந்தித்து இதுவும் கூடுமென்று

யர்த்தம். விச்லேஷ ப்ரஸங்காத் ப்ரஸ்துதம் ஸம்ச்லேஷமாஹ – 'அவனை யநுபவிக்க' இத்யாதி. அடியேனித்யாதிக்கு – சேஷபூதனான நான் முதல்முன்னமே – ப்ரப்ரதமமே யடைந்தேன். பருகி – [illegible] த்து. களித்தேன் – நிரதிசயாநந்தத்தைப் பெற்றேன். உண்டுகளித்தேற்கு – நித்யாநுபவம்பண்ணி ஆநந்தித்த எனக்கு. உம்பர் – மேலொருதேசவிசேஷத்திலே போய்ப் பண்ணும் அநுபவத்தில். என்குறை குறைகிடந்ததேது? தொண்டீர் – பகவத்பாகவத விஷயத்தில் சபலரானவர்களே! எல்லீரும் வாரீர் – இப்போகத்தை இழவாதே எல்லாரும் வாருங்கோள். தொழுது தொழுது நின்று – ப்ரீதிபரவசராய்க் கொண்டு நிரந்தர பகவதநுகூல வ்ருத்திகளைப் பண்ணிநின்று. ஆர்த்தும் – ஸஹர்ஷகோலாஹலம் பண்ணுவோம். எமர் இத்யாதி – கீழேழு, மேலேழு, அர்த்தாத் மத்யேயேழு: ஆக, இருபத்தொரு ஜந்மங்களிலும், எமர் – மதீயரானவர்கள், கேசவன் தமரானார்கள்: இது, மாசதிர் பெற்று – நிர்ஹேதுக பகவத்ஸ்வீகாரமாகிற இந்த மஹாதிசயத்தைப் பெற்று. நம்முடையவாழ்வு – நம்முடைய ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயானது, வாய்க்கின்றவா – வளருகிறபடி என்? என்று பொருள். உக்தஸம்ச்லேஷவிச்லேஷங்களினுடைய சமாப்தியை அருளிச்செய்துகொண்டு நிகமிக்கிறார் – 'இப்படி' இத்யாதி. 'பக்திமான்களாய்' என்ற அநந்தரம் "அபூவ" என்று அத்யாஹார்யம். 'அவனை யல்லதறியாத படியாய்' என்ற அநந்தரம் 'இருக்கிற இவர்' என்று அத்யாஹார்யம். விச்லேஷதசையில் 'நீயுந் திருமாலால் நெஞ்சங்கோட்பட்டாயே" என்றிருக்கையாலே ஸம்ச்லேஷ தசையிலும் 'தம்மைப்போலே எம்பெருமானைப்பெற்று ஸுகிக்கிறனவாக' என்று அர்த்தாத் ஸித்தமாதல்; யத்வா, "மாயக்கூத்தனில்" – "நன்றுமே" என்றதிக்கு 'எம்பெருமானை யநுபவிக்கிறநாடுகாண்; இல்லையாகில் கூப்பிடார்களோ?' என்ற பிள்ளான்நிர்வாஹத்தைப் பற்ற முக்யமாகவுமாம். 'ஸுகிக்கிறனவாகவும்' என்ற அநந்தரம் 'நினைத்தும்' என்று அத்யாஹாரம். 'நீயுந் திருமாலால்' இதி: நீயும் ஸ்ரீய:பதியாலே நெஞ்சுபறித்துக்கொள்ளப்பட்டாயோ? என்றபடி. சிந்தயந்தியில் வ்யாவ்ருத்தி – இவர்க்கு இத்யாதி. 'தத்ஸம்ச்லேஷ விச்லேஷைக ஸுகதுக்கராய் அவனை யல்லது அறியாதபடி யிருக்கிற' என்று பகவத்குணைகதாரகத்வஞ் சொல்லிற்று, "[illegible]" என்கிறபோலே லோகத்ருஷ்டாகார விருத்தமாக பகவத்குணைகதாரகரென்னக்கூடுமோ? என்கிற அபிப்ராயத்தாலே சங்கிக்கிறார் – 'ஆனால்' இத்யாதி. "நஹி த்ருஷ்டேऽநுபபந்நம் நாம" இத்யபிப்ராயேண பரிஹாரதி – 'திருவயோத்யையிலும்' இதி: ஸ்தாவரஜங்கமங்களிலே இந்த ஆகாரம் கண்டால் ஆழ்வார்க்கு கிமுத என்று கருத்து. 'ராமகுணைகதாரகங்கள்' என்கிறவிடத்திலே "அபி வ்ருக்ஷா: பரிம்லாநா:"

* திருவாய்மொழி – ௨, ௩, ௬. † ஷை ஷை ௯. ‡ ஷை ௧௦, ௮, ௭. § ஷை ௫, ௨, ௨. ¶ ஷை ௨, ௭, ௧.

கோள்வது. இப்படியிருக்கிற இவர்க்கு எம்பெருமானோடு ஸம்ஶ்லேஷமாவது - ப்ரத்யக்ஷஸமாநாகாரமான ஜ்ஞாநஸாக்ஷாத்காரம். விஶ்லேஷமாவது - பாஹ்யஸம்ஶ்லேஷாபேக்ஷை பண்ணி அதுபெறாமையாலே மாநஸாநுபவத்துக்கு வந்த கலக்கம். ஸர்வஜ்ஞனாய் ஸர்வஶக்த்யாய் ஸர்வநியந்தாவாய் நிரவதிக க்ருபாவானாயிருந்த எம்பெருமான் இவருடைய அநுபவத்தை முடியநடத்தாதே இவ்வநுபவத்தை விச்சேதித்ததுக்கு ப்ரயோஜநமேன்? என்னில்; - திருவயோத்யையிலும் திருக்குரவையிலும் பிரிந்த பிரிவுபோலே இவர்க்கு அநுபூதகுணங்கள் ஸாத்மிக்கைக்காகவும்; மேன்மேலென த்ருஷ்ணைபிறக்கைக்காகவும். எம்பெருமான்பக்கல் பிறந்த ஆசை முதிர்ந்து நினைத்தபடி பெறுவிட்டவாறே ஶோகமோஹங்கள் பிறக்கும் இப்படியுள்ள கலவியாலும் பிரிவாலும் ஆழ்வார்க்கு வந்த தசை அந்யாபதேசப்பேச்சைப் பேசுவிக்கும்.

இப்ப்ரபந்தங்களில் ஸூக்திகள் ப்ராப்யனான எம்பெருமானுடைய ஸ்வரூபப்ரதிபாதநபரமாயிருக்கும் சில; ப்ராப்தாவான ப்ரத்யகாத்மவிஷயமாயிருக்கும் சில; ப்ராப்த்யுபாயத்தைச் சொல்லும் சில; பலத்தைச் சொல்லும் சில; ப்ராப்திவிரோதியைச் சொல்லும் சில; அவஶிஷ்ட

[illegible] ஶாநாம்' இத்யாத்யநுஸந்தேயம். குணாநுபவம் - ஸம்ஶ்லேஷம், குணாந்தராநுபவாலாபம் - விஶ்லேஷமென்று. 'தூரோகுணத்தை' இத்யாதி வாக்யத்தாலே கீழ் அருளிச்செய்தபடி யன்றிக்கே மாநஸாநுபவம் - ஸம்ஶ்லேஷம், பாஹ்ய ஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து அது பெறாமையாலே மாநஸாநுபவத்துக்கு வந்த கலக்கம் - விஶ்லேஷமென்று ப்ரகாராந்தரேண விக்ரஹ ப்ரயுக்த ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களை அருளிச்செய்கிறார் - 'இப்படி யிருக்கிற' இத்யாதி. இப்படியிருக்கிற இவர்க்கு - பகவத்குணைகதாரகராயிருக்கிற இவர்க்கு 'ஸர்வஜ்ஞனாய்' இத்யாதி விஶேஷணங்களுக்குக கருத்து-அஜ்ஞத்வாஶக்தத்வ பாரதந்த்ர்யத்வ நிர்தயத்வ நிஸ்ஸம்பந்தத்வாதிகளன்றோ விச்சேதஹேதுக்க ளென்று, கீழ் ஶங்கைக்கு இரண்டுவகையாக உத்தரம் அருளிச்செய்கிறார் - திருவயோத்யையிலும் இத்யாதி. 'அநுபூதகுணங்கள் ஸாத்மிக்கைக்காகவும்' என்றது - "ஆற்றநல்லவகை காட்டுமம்மானை" என்றத்தைப் பற்ற. "காதல் கடல்புரையவிளைவித்த" இத்யாதியைப் பற்ற, 'மேன்மேலென த்ருஷ்ணை பிறக்கைக்காகவும்' என்றது. 'பிறக்கைக்காகவும்' என்ற அநந்தரம் "விச்சேதிப்பித்தான்" என்று கூட்டுவது. இப்படி ஹிதபுத்யா செய்தானாகில் ஶோகமோஹங்களுண்டாகிறபடி எங்ஙனே? என்ன, 'எம்பெருமான்பக்கல்' இத்யாதி. இவ்வாக்யத்தின் அடியிலே, 'ஆகையாலே' என்று கூட்டுவது. இந்த ஸம்ஶ்லேஷ விஶ்லேஷங்களே அந்யாபதேஶப்பேச்சுக்கும் ஹேதுவென்கிறார், 'இப்படியுள்ள' இத்யாதி. கலவியில் அந்யாபதேஶம் - "கருமாணிக்கமலையும்," "மெய்மருதோளிணையும்." "அஞ்சிறையமடநாரை" தொடக்கமானவை - பிரிவில் அந்யாபதேஶம். ஆக, 'இப்படிபகவத்ஸ்வரூபரூபகுண விபூதிகளை' இத்யாதி வாக்யம் தொடங்கி இவ்வளவாலே ப்ரபந்தவைலக்ஷண்யத்தைப் ப்ரஸ்தாவித்து, ப்ரஸ்துதமான வைலக்ஷண்யத்தை ஆக்ஷேப ஸமாதாநமுகேந த்ருடீகரித்து, அநந்தரம் விஶ்லேஷாபத்தி, தத்கார்யாக்ரோஶப்ரகாரம், தத்ப்ரதிகோடித்வேநோபஸ்தித ஸம்ஶ்லேஷஹர்ஷம், தத்பயசரமாவதி, தத்பயாநுவ்ருத்யாபதநாமவிசேஷம், ஸம்ஶ்லேஷவிஶ்லேஷ ஸ்வரூபம், தத்பரிப்ரவ்ருத்த ஶங்காபரிஹாரங்களுமெல்லாம் அருளிச்செய்து நிகமித்தார்.

இனிமேல் இப்ப்ரபந்தங்கள் அர்த்தபஞ்சகத்தையும் ப்ரதிபாதிக்கிறனவென்று ப்ரதிபாத்ய வைலக்ஷண்யங்களை யருளிச்செய்கிறார் - 'இப்ப்ரபந்தங்களில்' இத்யாதி. "சில, சில" என்றது - "உயர் திணை அணையென்று" இத்யாத்யாசார்யஹ்ருதயோக்தியிலே விஶதம். அதாவது - உயர்வற திண்ணன் வீடு அணைவது ஒன்றுந்தேவும் ஆகிற நாலுதிருவாய்மொழிகளும் - ப்ராப்ய பகவத்ஸ்வரூபப்ரதிபாதநபரம்; பயிலுஞ்சுடர் எருளும் கண்கள் கருமாணிக்கம் ஆகிற நாலும் - ப்ரத்யகாத்மவிஷயம்; நோற்றநோன்பு ஆராவமுது மானேய்நோக்கு பிறந்தவாறுகளாகிற நாலும் - உபாயபரம்; எம்மாவீடு ஒழிவில்காலம் நெடுமால் வேய்மரு என்கிற நாலும் - பலப்ரதிபாதகம்; வீடுமின் சொன்னால் ஒருநாயகம் கொண்டபெண்டிர் என்கிற நாலும் - விரோதி ஸ்வரூப பரமென்றபடி; மற்ற எண்பது திருவாய்மொழியும் இவ்வர்த்தபஞ்சக

மானவை இவற்றுக்கு உபபாதகங்களாயிருக்கும். இவற்றில் உத்தேஶ்யம் - பலம்; ததர்த்தமாக மற்றுள்ள நாலர்த்தமும் சொல்லுகிறது.

இவற்றில் ப்ரதமப்ரபந்தமான திருவிருத்தத்தில் - த்வதநுபவவிரோதியான ஸம்ஸார ஸம்பந்தத்தை யறுத்துத் தந்தருளவேணுமென்று எம்பெருமானை யர்த்திக்கிறார்; திருவாசிரியத்தில் - நிவ்ருத்தஸம்ஸாரர்க்குபோக்யமான தன்னுடையவடிவழகைக் கலம்பகன்மாலையைப் பணியாக எடுத்துக்காட்டுமாபோலே காட்டிக்கொடுக்கக்கண்டு அநுபவித்தார் பூர்ணமாக; பெரியதிருவந்தாதியில் - நிரதிஶயபோக்யனை எம்பெருமானை அநுபவிக்கையாலே ததநுகுணமாக த்ருஷ்ணை பிறந்து த்ருஷ்ணாநுகுணமாகப் பேசியும் நினைத்தும் தரிக்கிறார்; திருவாய்மொழியில் - இவருடைய த்ருஷ்ணாநுகுணமாக ஶ்ரிய:பதியாய் ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய்த் தனக்குத்தகுதியான திவ்யதேஹத்தையுடையனுமாய் திவ்யபூஷணபூஷிதனுமாய ஶங்கசக்ராதித்வ்யாயுததரனுமாய்ப் பரமவ்யோமத்திலே ஆநந்தமயமான திவ்யாஸ்தாநரத்நமண்டபத்திலே பெரியபிராட்டியாரும் தானும் பிராட்டிமாருங் கூட திவ்யஸிம்ஹாஸநத்திலே ஏழுலகுந் தனிக்கோல் செல்ல வீற்றிருந்தருளி அஸ்த்ராபரணாபிமாநிகளான அயர்வறுமமரர்களாலே அநவரதபரிசர்யமாண சரணநளினனாய்க்கொண்டு, அங்கு அங்ஙனே செல்லாநிற்க ஸ்வஸங்கல்பாயத்த ஸ்வரூபஸ்த்திதி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகமான ஸ்வேதரஸமஸ்தத்தையும் தனக்குஶரீரதயா ஶேஷமாகவுடையனாய் அந்தராத்ம

த்தினுடைய விஸ்தரமாகையாலே 'அவஶிஷ்டமானவை இவற்றுக்கு உபபாதகங்கள்' என்கிறார். புருஷார்த்த ப்ரதிபாதகம் என்று கீழே சொல்லிவைத்து இங்கே அர்த்தபஞ்சக ப்ரதிபாதகமென்றால் வ்யாஹதமன்றோ? என்ன, 'இவற்றில் உத்தேஶ்யம்' இத்யாதி. உத்தேஶ்யம் - ஆகாங்க்ஷிதம். 'ததர்த்தமாக' இதி. கைங்கர்யத்துக்கு ஆஶ்ரயபூத ப்ரத்யகாத்ம ஸ்வரூபம் சொல்லவேணும்; கைங்கர்ய விஷயபூத [illegible]ஸ்வரூபம் சொல்லவேணும்; கைங்கர்யாவாப்தௌ ததநுரூபோபாயஸ்வரூபம் சொல்லவேணும்; ஏதத்ப்ருஶமைங்கர்யத்தின் விரோதி ஸ்வரூபம் சொல்லவேணும்; ஆகையாலே, மற்ற நாலர்த்தமும் ஏதநுபயுக்ததயா வந்ததென்றபடி.

இப்ப்ரபந்தங்களுக்கு ப்ரத்யேகம் ப்ரதிபாத்யார்த்தம் ஏது? என்ன, 'இவற்றில் ப்ரதம ப்ரபந்தமான' இத்யாதி. "உபக்ரமோபஸம்ஹாராவப்யாஸோऽபூர்வதா பலம் | அர்த்தவாதோபபத்தீ ச லிங்கம் தாத்பர்யநிர்ணயே" என்கிறபடியே "இனியாமுறாமை" "அழுந்தார்" என்று உபக்ரமோபஸம்ஹாரங்களிரண்டிலும் ப்ரக்ருதிஸம்பந்த நிவ்ருத்தியைச் சொல்லுகையாலே இதுவே திருவிருத்தத்துக்கு ப்ரதானதாத்பர்யம். 'த்வதநுபவ விரோதியான' என்றது - கைவல்யவ்யாவ்ருத்யர்த்தமாக. 'வடிவழகை' என்கிற விடத்தில் - அவயவ ஸௌந்தர்யமும் ஆபரண ஸௌந்தர்யமும் சொல்லுகிறது, "செக்கர்மாமுகிலுடுத்து" இத்யாதியைப்பற்ற. கலம்பகன்மாலை - நாநாவர்ணங்களான புஷ்பங்களைத் தொடுத்த மாலை. பணியாக - வகுப்பாக; போக்யமாக வென்றபடி. "நற்பூவைப்பூவீன்றவண்ணன்" இத்யாதியைப்பற்ற, 'நிரதிசய போக்யனை' என்றது. எம்பெருமானையநுபவிக்கையாலே, அநுபவித்துப் பிரிகையாலே என்றபடி.. 'த்ருஷ்ணைபிறந்து' என்றது-"அன்பேபெருகமிகும்"என்றத்தைப்பற்ற. "நாவின்தொடை கிளவியுட்பொதிவோம் இயற்றுவா யெம்மொடுகூடி" "ஏத்தமுயல்" "நீகதியாய் நெஞ்சேநினை" இத்யாதியைப்பற்ற - 'பேசியும் நினைத்தும்' என்றது. 'திருவாய்மொழியில்' இதி: 'இவருடைய த்ருஷ்ணாநுகுணமாக' என்றதுக்கு - 'நிர்ஹேதுகமாகக் காட்டியருளக் கண்டு' என்கிறத்தோடு அந்வயம். 'ஶ்ரிய:பதியாய்' என்றது-"உளன்சுடர் மிகுசுருதியுள்" என்றத்தைப் பற்ற. "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" இத்யாத்யுக்தமான ஶ்ரிய:பதித்வத்தை நினைத்து, 'உளன்சுடர்மிகுசுருதியுள்' என்றது என்று [illegible] ஆறாயிரத்திலே பிள்ளான். "நலமுடையவன்" என்றத்தைப்பற்ற, 'ஸமஸ்த கல்யாணகுணாத்மகனாய்' என்றது. "சுடரடி" என்றத்தைப் பற்ற, 'திவ்யதேஹத்தையுடையனாய்' என்றது. "சுடரடி" என்ற விக்ரஹயோகத்திலே திவ்ய பூஷணாயுதங்கள் அந்தர்ப்பூதங்கள். யத்வா, "அந்தாமத்தன்பு" இத்யாதியைப்பற்ற, 'திவ்யபூஷண' இதி. "சங்குவில்வாள்தண்டுசக்கரக்கையற்கு" "ஒண்சங்கதை" இத்யாதியைப்பற்ற, 'சங்கசக்ர' இதி ஆதல். பரமவ்யோம நிலயத்வமும் திவ்யமஹிஷீ விஶிஷ்டத்வமும் "அயர்வறுமமரர்கள்" என்றத்திலே ஸித்தம். தனிக்கோல்-ஏகாஜ்ஞை. 'அமரர்களாலே' என்றது - 'மற்றமரராட்செய்வார்" இத்யாதியைப் பற்ற. ஸ்வஸங்கல்பாயத்த இதி : ஸ்வரூபாதிகளினுடைய ஸங்கல்பாயத்தத்வம் நாலாம்பாட்டுத் தொடங்கி மூன்று பாட்டிலே கண்டுகொள்வது. 'ஶரீரதயாஶேஷம்' என்

தயா சேதநாசேதநங்களை வ்யாபித்துத் தத்கததோஷாஸம்ஸ்ப்ருஷ்டனாய் நாராயணாதிநாமங்களைத் தனக்கு வாசகமாகவுடையனாய்; ஏவம்விதனாக 'உளன்சுடர்மிகுசுருதியுள்'' என்கிறபடியே உபநிஷத்ஸித்தனுமாய் இப்படி விஸஜாதீயனுமா யிருந்துவைத்து ஆஶ்ரிதவாத்ஸல்யத்தாலே தேவமநுஷ்யாதி ஸஜாதீயனாய்வந்து தன்னுடைய பரமக்ருபையாலே திருவவதாரம்பண்ணும் ஸ்வபாவனுமாய்த் தன்னுடைய அவதாரங்களிலும் உதவப்பெறாத ஶர்ஹநிர்ஹாக்யர்க்கும் இழக்கவேண்டாதபடி ஸர்வாபராதஸஹனாய் பத்ரபுஷ்பாதிகளாலே ஸ்வாராதனாய்க்கொண்டு ஆஶ்ரிதர்க்கு அத்யந்தபரதந்த்ரனாய் அவர்களுடைய இச்சாநுகுணமான போஜநஶயநாதிகளையுடையனாய் ஸமஸ்தகல்யாணகுணபரிபூர்ணனான தானே ஆஶ்ரிதஸுலபத்வார்த்தமாகக் கோயில்களிலே வந்து நின்றருளியும், இப்படியுள்ள ஸர்வேஶ்வரத்வத்துக்கும் ஆஶ்ரிதாநுக்ரஹத்துக்கும் ஏகாந்தமான படிகளால் பரிபூர்ணனான எம்பெருமான் தன்னை நிர்ஹேதுகமாகக் காட்டியருளக் கண்டு அநுபவித்துத் தம்முடைய ப்ரக்ருதிஸம்பந்தமாகிற ப்ரதிபந்தகமற்று எம்பெருமானைப்பெற்று முடிக்கிறார். இனிச் சொல்லவேண்டுமவையெல்லாம் அவ்வவதிருவாய்மொழிகள் தோறும் சொல்லக் கண்டுகொள்வது.

முதல் திருவாய்மொழியிற் சொல்லிற்றுவது - நாநாரத்நபரிபூர்ணமாய் அபரிச்சேத்யமான கடலை முந்துறத் திரளக் கண்டாற்போலே ஸ்வரூபரூபகுணவிபூதிகளாலே பரிபூர்ணனாய் எல்லாப்படியாலும் எல்லாரிலும் மேற்பட்டு ஸர்வேஶ்வரனாய் ஸ்ரியபதியாக அபௌருஷேய

றது ''உடன்மிசையுயிரென'' என்றத்தைப்பற்ற. வ்யாப்தியும் தோஷாஸ்பர்ஶமும் - ''புலனொடுபுலனலன்'' என்றத்தைப்பற்ற. நாராயணாதிநாமவாச்யத்வம் - ''வண்புகழ் நாரணன்'' என்றத்தைப்பற்ற. 'ஏவம்விதன்' என்றது, கீழேயும் மேலேயும் கடாக்ஷித்து. சுடர்மிகு சுருதியு ளுளன் - காந்திமிக்க ஶ்ருதியிலே உளனானவ னென்றபடி. ''அளிவொறையாய் நின்ற பரன்'' என்றதைப்பற்ற - 'இப்படி விஸஜாதீயனுமாய்' என்றது. கீழ்ப் பரத்வத்தைச்சொல்லி மேல் விபவத்தைச் சொல்லுகிறது: ''ஆஶ்ரிதவாத்ஸல்யத்தாலேயும் தன்னுடைய பரமக்ருபையாலேயும் தேவமநுஷ்யாதிஸஜாதீயனாய் வந்து திருவவதாரம்பண்ணும் ஸ்வபாவனுமாய்' இத்யந்வய. ''பத்துடையடியவரில்'' ப்ரமேயம் - 'திருவவதாரம்பண்ணும் ஸ்வபாவனுமாய்' என்றது. இனி ''அஞ்சிறையமடநாரை'' தொடக்கமான திருவாய்மொழிகளின் அர்த்தஞ் சொல்லிக்கொண்டுபோகச்செய்தே அர்ச்சாவதாரத்தையுஞ் சொல்லுகிறது, 'தன்னுடைய அவதாரங்களிலும்' என்று தொடங்கி. 'கர்ப்பநிர்ப்பாக்யர்' என்றது-''கருவிலேதிருவிலாதீர்'' என்கிறபடியே கர்ப்பப்ரப்ருதிநிர்ப்பாக்ய ரென்னுதல், அவதார காலத்திலே கர்ப்பஸ்தரையாகிற பாக்யமில்லாதவர்க ளென்னுதல். 'இழக்கவேண்டாத படி' என்றதுக்கு - ''வந்து நின்றருளியும்'' என்றத்தோடு அந்வயம். அபராதஸஹதை ''அஞ்சிறையமடநாரையிலும்'' ஸ்வாராததை, ''பரிவதிலீசனிலும்'', அத்யந்த பாரதந்த்ரயம்.- ''ஒழிவில்காலத்திலும்'', அவஶிஷ்டங்கள் ''பொருமாநீள்படை''யில் ''நம்பியைத் தென்குறுங்குடிநின்ற'' என்றதிலுங் கண்டுகொள்வது. ஆக, ஆயிரத்துக்கும் ஸங்க்ரஹமான முதற்பத்தில் அர்த்தத்தை அருளிச்செய்து ''அவாவற்றுவீடுபெற்ற'' என்றத்தோடேசேர்த்து நிகமிக்கிறார், 'இப்படியுள்ள' இத்யாதி.''ஸ்ரியபதியாய்''என்று தொடங்கி ''இப்படி விஸஜாதீயனாயிருந்துவைத்து'' என்னுமளவும் ஸர்வேஶ்வரத்வத்துக்கு - ஏகாந்தமான படிகள் சொல்லிற்று. ''ஆஶ்ரிதவாத்ஸல்யத்தாலே'' என்று தொடங்கி ''கோயில்களிலே வந்து நின்றருளியும்'' என்னுமளவும் - ஆஶ்ரிதாநுக்ரஹத்துக்கு ஏகாந்தமான படிகள் சொல்லிற்று. ''வரவாறொன்றில்லையால்'' ''வெறிதேயருள்செய்வர்'', ''என்னவாவறச்சூழ்ந்தாய்'' இத்யாதியைப் பற்ற, 'நிர்ஹேதுகமாக' இத்யாதி. 'முடிக்கிறார்' - தலைக்கட்டுகிறார். முதற்பத்தில் ப்ரமேயகதநம் போருமோ? மற்ற திருவாய்மொழிக்கு அர்த்தம் ஏது? என்ன, 'இனிச்சொல்ல' இத்யாதி.

முதல்திருவாய்மொழி எல்லாத்துக்கும் ஸங்க்ரஹமென்று விவக்ஷித்து, ததநுகுணமாக த்ருஷ்டாந்தமும் தார்ஷ்டாந்திகமும் அருளிச்செய்கிறார்- 'முதல் திருவாய்மொழியில்' இத்யாதி. திரள-ஸமுதாயாகாரேண.முதற்பாட்டில் ப்ரமேயம்-'ஸ்வரூபரூபகுண இத்யாதி. ''யவன்'' என்று ஸ்வரூபமும், ''சுடரடி'' என்று ரூபமும், 'உயர்வற'' இத்யாதியாலே குணங்களும்,''அயர்வறுமமரர்களதிபதி'' என்றுவிபூதியும் சொல்லுகிறது.''மிகுநரையிலன்'' என்றத்தைப்பற்ற, 'எல்லாப்படியாலும் எல்லாரிலும் மேற்பட்டு' என்கிறது. மூன்றாம்பாட்டுத்தொடங்கி நாலுபாட்டிலும்ஸகலவஸ்துக்களினுடையவும் ஸ்வரூபஸ்தித்யாதிகள் பகவததீந

மான ஸூத்ருடப்ரமாணஶ்ருதிகளாலே ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள எம்பெருமானை வாஹ்யகுத்ருஷ்டிகளால் அவிசால்யமாம்படி அவன்பரஸாதத்தாலே ஸாக்ஷாத்கரித்து அநுபவித்து; அவ்வநுபவஜநித ப்ரீதி உள்ளடங்காமை அநுபவித்தபடியே ஸவிபூதிகனான எம்பெருமானைப் பேசி எவம்விதனானவன்திருவடிகளிலே அடிமைசெய்து உஜ்ஜீவியென்று தந்திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்கிறார்; கடலைத் திரளக்கண்டானொருவன் அதிலுண்டான முத்துமாணிக்காதிகளையும் தனித்தனியே காணுமாபோலே முதல் திருவாய்மொழியிலே திரள அநுபவிக்கப்பட்ட எம்பெருமானுடைய குணங்களை ஓரோவகைகளிலே ஓரோதிருவாய்மொழியாய்ச் செல்லுகிறது இரண்டாந்திருவாய்மொழி தொடங்கி மேலெல்லாம் இப்படிசெய்தார் இவரேயல்லர்; பாரதராமாயணாதிகளைப் பண்ணின வ்யாஸாதிகளும் ஸங்க்ஷேபவிஸ்தரங்களாலே தங்கள்ப்ரபந்தங்களை ப்ரபந்தீகரித்தார்கள்.

பரஸ்வரூபம் அகிலஹேயப்ரத்யநீகத்வத்தாலும் கல்யாணைகதாநத்வத்தாலும் ஸ்வேதரஸமஸ்தவஸ்துவிலக்ஷணமாய, விபுத்வாத்தேஶதஃபரிச்சேதரஹிதமாய் நித்யத்வாத் காலத:

மென்கையாலே 'ஸர்வேஶ்வரனாய்' எனகிறது, 'உளன்சுடர்மிகுசுருதியுள்' என்கையாலே 'ஶ்ருதிப்ரபத்தியாக' இத்யாதி. "சுரரறிவருநிலை" "உளனெனிலுளன்" என்கிற இரண்டுபாட்டையும் பற்ற, 'பாஹ்யகுத்ருஷ்டிகளால் அவிசால்யமாம்படி' என்றது. வ்யாப்திஸௌகர்ய ப்ரதிபாதகமான பத்தாம்பாட்டில் ப்ரமேயமும் 'ஸர்வேஶ்வரனாய்' என்றத்திலே ஸூசிதம். "அளிபொறையாய் நின்றபரன்" என்றதைப்பற்ற, 'ஸவிபூதிகனான' இத்யாதி. 'எவம்விதனானவன் திருவடிகளிலே அடிமைசெய்து உஜ்ஜீவியென்று தம்திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்கிறார்' என்கையாலே, 'பாட்டுக்களுக்கெல்லாம் முதற்பாட்டில் க்ரியையோடே அந்வயமென்று தோற்றுகிறது' என்று அருளிச்செய்வர். ஸ்வரூப ரூபாதிகளை முதல்திருவாய்மொழியிலே தானேசொன்னால் குறைத்திருவாய்மொழிகளுக்கு விஷயமேது? என்ன, 'கடலை' இத்யாதி. 'ஓரோவகைகளிலே' என்றது - பரத்வம், பஜநீயதை, ஸௌலப்ய மென்கிற வகைகளிலே யென்றபடி. இப்படி ஸங்க்ரஹ விஸ்தர ரூபேண சொல்லுவானென்" என்ன, 'இப்படி செய்தார்' இத்யாதி. இது சிஷ்டாசார ஸித்தமென்று கருத்து. 'ப்ரபந்தீகரித்தார்கள்' - பண்ணினார்கள். ஸங்க்ரஹவிஸ்தர ரூபேண ப்ரபந்தீகரணம் ஶ்ரோத்ரு புத்தி ஸமாதாநார்த்தம்; இவ்விடத்தில் "விஸ்தரேண்ருஷய: ப்ராஹ: ஸம்க்ஷிப்ய வ்யாஸவர்ஜிதா: । இஷ்டம் ஹி விதுஷாம் லோகே ஸமாஸவ்யாஸதாரணம்" என்கிறது அநுஸந்தேயம்.

முன்பு ஸங்க்ரஹேண சொன்ன தத்வத்ரயத்தையும் புநஶ்ச விவரிக்கக்கோலி, முன்பு பரஸ்வரூபத்தை விஶதமாக அருளிச்செய்யாமையால் அதலைத முந்துற அருளிச்செய்கிறார், 'பரஸ்வரூபம்' இத்யாதி. கத்யத்திலே "அகிலஹேயப்ரத்யநீக" இத்யாதி சூர்ணையை ஸ்ருதீகரித்து அருளிச்செய்கிறார் - 'ஜ்ஞாநாநந்தமயமாய்' என்னுமளவும். அகிலமென்று - தன்னை ஆஶ்ரயித்தவர்களைச் சொல்லி. அவர்கள் ஹேயங்களுக்கு ப்ரத்யநீகன் - நிராஸகனென்று, பாத்யபாதக பாவலக்ஷண விரோதஞ் சொல்லுதல்; அகிலமான ஹேயமென்று, த்ரிவிதாசேதநகத ஸ்வரூப விகாரம். த்ரிவிதசேதநகத ஜ்ஞாநஸங்கோசஸுகித்வதுஃகித்வங்கள், சேறுதோய்ந்து கழுவின ஆகாரம், அணுத்வபாரதந்த்ர்யங்களாகிற இவற்றைச் சொல்லி, எதத்ப்ரத்யநீகனென்று ஸஹாநவஸ்தாநலக்ஷண விரோதத்தைச் சொல்லுதல். பாரதந்த்ர்யம் ஆத்மாலங்காரமாகிலும் ஸ்த்ரீக்கும் புருஷனுக்கும் ஶமஶ்ருஸ்தநோத்பேதங்களைப்போலே ஸ்வதந்த்ரேஶ்வராபேக்ஷயா ஹேயமாகலாமிறே. கல்யாணைகதாநத்வமாவது - கல்யாணகுணாநாம் எகாஸ்பதத்வ மென்னுதல்; யத்வா, பாவப்ரதாந நிர்தேஶமாய், கல்யாணத்வஸ்ய - ஆநந்தத்வஸ்யைகாஶ்ரய மென்னுதல்; கல்யாணஶப்தத்தாலே - கல்யாணப்ரதத்வத்தை விலக்ஷித்து, 'ஆஶ்ரிதர்க்குக் கல்யாணப்ரதத்வத்தில் ஜாகரூகனென்னுதல்; 'ஆஶ்ரிதாநாம் கல்யாணப்ரதத்வே ஜாகரூக:' இதி கத்ய வ்யாக்யாநத்தில் ஶ்ருதப்ரகாஶிகாகாரர் அருளிச்செய்தார். ஜாகரூக: - எகாக்ர:. "ஸதைகரூபரூபாய" இத்யாதி.... இத்யமர:. "நித்யம் விபும் ஸர்வகதம்" என்கிற ஶ்ருதிப்ரக்ரியையாலே அநந்தசப்தார்த்தமான த்ரிவிதபரிச்சேதராஹித்யத்தை அருளிச்செய்கிறார், 'விபுத்வாத்' இத்யாதி. வஸ்து பரிச்சேதராஹித்யமாவது - ஸத்ருஶவஸ்த்வந்தராராஹித்யமும் ஸர்வவஸ்து ஸாமாநாதிகரண்யார்ஹத்வமுமாகையாலே உபயத்தையும் தந்த்ரேண அருளிச்செய்கிறார், 'ஸர்வமும்' இத்யாதி. ஜ்ஞாநாநந்தமயத்வமாவது - ஆநந்தரூபஜ்ஞாந

பரிச்சேத ரஹிதமாய் ஸர்வமும் தனக்கு ப்ரகாரமாகத் தான் ப்ரகாரியாய்த் தனக்கு ஒரு ப்ரகாராந்தரமில்லாமையாலே வஸ்துபரிச்சேதரஹிதமுமாய் ஜ்ஞாநாநந்தமயமாய் ஜ்ஞாநபலைஶ்வர்ய ஶீலாத்யநந்த கல்யாணகுணகணமஹோததியாய் ஸ்ரீயப்பதியாய ஸ்வேதரஸமஸ்தத்தையும் வ்யாபிக்குமிடத்தில் அப்ராக்ருதமாய் ஶுத்தஸத்வமயமாய ஸ்வாஸாதாரணமாய் புஷ்பஹாஸஸுகுமாரமாய் புண்யகந்தவாஸிதாநந்ததிகந்தராளமாய் ஸர்வாபாஶ்ரயமாயிருந்துள்ள திவ்யவிக்ரஹம்போலே வ்யாபித்து தரித்து நியமித்து, இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் ரக்ஷகமாயக்கொண்டு ஶேஷியாயிருக்கும்; ப்ரக்ருதிஸ்வரூபம் மஹதாதிவிகாரங்களையுடைத்தாய் நித்யமாய் த்ரிகுணாத்மிகையாய் ஶுக்லக்ருஷ்ணரக்தவர்ணையாய் அநேகப்ரஜைகளுக்கு ப்ரஜநபூதையாய எம்பெருமானுக்கு ஶரீரதயா ஶேஷமாய் சேதநர் கர்மாநுகுணமாக ஆச்சிக்க இந்த இச்சாநுகுணமாக பகவத்ஸங்கல்பத்தாலே சதுர்விம்ஶதிதத்வமாய்க்கொண்டு விகரிக்கக்கடவதாய் இப்படி எம்பெருமானுக்கு இஷ்டவிநியோகார்ஹமாயிருக்கும்; ஆத்மஸ்வரூபம் அணுபரிமாணமாய்த்

ஸ்வரூபத்வம்; அநந்யாதீந ப்ரகாரஶ்த்வாஹலாதகாதஸ்வரூப ஜ்ஞாநத்வத்தையே ஸ்வரூபமாக வுடைத்தானவனென்றபடி. கீழ் 'கல்யாணைகதாந' என்றது - ஸாவப்ரதாநநிர்தேஶமானபோது ஜ்ஞாநாநந்தமயமாயென்றது; தத்விவரணமாதல்; ஸ்வபராபேக்ஷயா அநுகூலத்வபரமாக விஷயவிபாகம் பண்ணுதல். கல்யாணகுணபரமானபோது ஜ்ஞாநபல இத்யாதி தத்விவரணம். கீழ்ச்சொன்ன ஆகாரம் காட்டிலெறித்த நிலாவாகாமைக்காக தத்போக்த்ரியைச் சொல்லுகிறது, ஸ்ரீயப்பதியாய் இதி. அப்ராக்ருதமாய் - அத ஏவ ஶுத்தஸத்வமயமாய் என்றபடி. "ந தஸ்ய ப்ராக்ருதா மூர்த்தி:" இத்யாதிப் ப்ரமாணஸித்தமிஷ்டவ்யம். ஸ்வாஸாதாரணமாய் - ஏதாத்ருஶவிக்ரஹம் ஒருவர்க்குமில்லை யென்றபடி. புஷ்பஹாஸஸுகுமாரமாய்: புஷ்பஹாஸமாவது - புஷ்பத்தினுடைய விகாஸம். அது புஷ்பத்திற்காட்டில் ஸௌகுமார்யம்; ஆக, புஷ்பத்தினுடைய விகாஸம்போலே ஸுகுமாரமாயென்னுதல். யத்வா - புஷ்பஹாஸஶப்தம் விகாஸாஶ்ரயத்வத்தாலே புஷ்பத்தினுடைய பர்யந்தத்தி லுண்டான அவயவபரமாய், அவைகள்போலே ஸுகுமாரமென்றபடி. இவ்விடத்தில் "ஸம்ஹநநவிரோசநவத்ஸ்நாத்" இத்யாத்யநுஸந்தேயம். "ஸர்வகந்த:" இத்யாதியைப் பற்ற, புண்யகந்த இத்யாதி. ஸர்வாபாஶ்ரயமாய் என்றது - "வஸந்தி யஸ்மிந் ஸர்வாணி ப்ரஜாநாம் ஶுபாஶ்ரயம்" இத்யாதியைப் பற்றவாதல்; அஸ்த்ரபூஷணாதிமுகேந வாதல். விக்ரஹம்போலே - விக்ரஹத்தைப்போலே யென்றபடி. "யோ லோகத்ரயமாவிஶ்ய" இத்யாதி ப்ரகாரேண - 'வ்யாபித்து தரித்து நியமித்து' இதி. ஶேஷியாயிருக்கும் - இப்படி ஶரீரத்வேந ஶேஷியாயிருக்கு மென்றபடி. அநந்தரம் ப்ரக்ருதி ஸ்வரூபத்தை அருளிச்செய்கிறார் - ப்ரக்ருதி இதி; ஆதி ஶப்தத்தாலே அஹங்கார தந்மாத்ராதிகள் விவக்ஷிதங்கள். "அஜாம்" இத்யாதியைப்பற்ற, நித்யமாய் இத்யாதி. அத ஏவ, ஶுக்லக்ருஷ்ணரக்தவர்ணமாய். விவரணம் - 'ஶுக்லக்ருஷ்ண' இத்யாதி ஆதல். "பஹ்வீம் ப்ரஜாம் ஜநயந்தீம்" இத்யாதியைப் பற்ற 'அநேக ப்ரஜைகளுக்கு' இதி. மஹதாதி விகாரங்களை யுடைத்தாய் இதி ஸமஷ்டிஸ்ருஷ்டி:; அநேக ப்ரஜைகளுக்கு இத்யாதிநா வ்யஷ்டிஸ்ருஷ்டி:. "யஸ்யாவ்யக்தம் ஶரீரம் யஸ்யாக்ஷரம் ஶரீரம்" இத்யாதியைப்பற்ற, 'ஶரீரதயாசேஷமாய்' என்றது. சேதநர் கர்மாநுகுணமாக இதி - சேதநருடைய கர்மாநுகுணமாகப் புருஷார்த்தோபயோகி கரணகளேபராதிக ளுண்டாயிருக்கவென்று, ஈஶ்வரன் ஸ்வயம் இச்சியாநின்றுகொண்டு, தாத்ருஶேச்சாநுகுணமாக ஸ்வயமேவ "பஹு ஸ்யாம்" என்று ஸங்கல்பிக்க, அந்த ஸங்கல்பத்தாலே சதுர்விம்ஶதி தத்த்வமாய்க்கொண்டு விகரிக்கக்கடவதாயிருக்கு மென்றபடி. "ப்ரயோஜநாநபேக்ஷத்வாத்" "ஜகத்ஸர்வம் ஶரீரம் தே" இத்யாதியைப்பற்ற, இஷ்டவிநியோகார்ஹமாயிருக்கும் என்றது. அநந்தரமாத்மஸ்வரூபமாஹ - ஆத்ம இதி. 'அணுபரிமாணமாய்' இதி: முன்புத்தையில் லக்ஷணவாக்யத்திலே 'அணுவாய்' என்றுவைத்து, இங்கே 'அணுபரிமாணமாய்' என்றது - "ஸ்வாத்மநா சோத்தரயோ:" என்கிற ஸூத்ரஸித்தமான "உத்க்ராந்திகத்யாகதீநாம்" என்கிற ஸ்வஶப்தமும், உத்க்ருத்யமாநம் - உந்மாநமென்றும் "வாலாக்ரஶதபாகஸ்ய" "ஆராக்ரமாத்ர:" இத்யாத்யுக்தமான உந்மாநமுமாகிற அணுத்வஸாதக ஹேதுத்வயத்தைப் பற்ற. வாலாக்ரம் - வால்நெல்லின் நுனி.

தேஜோத்ரவ்யமாய் ஜ்ஞாதாவாய் ஜ்ஞாநாநந்தகுணகமாய் நித்யமாகையாலே காலபரிச்சேதரஹிதமாய் ஜ்ஞாநத்ரவ்யமாகையாலே வஸ்துபரிச்சேதரஹிதமாய் அப்ருதக்ஸித்யர்ஹ ப்ருதங்நிர்தேஶாநர்ஹ அநந்யார்ஹஶேஷமுமாய் பரஶேஷைகரஸமுமாய் அத்யந்தபரதந்த்ரமுமாயிருக்கும் எம்பெருமானுக்கு; இத்தை உள்ளபடியறிவாரில் தலைவராயிற்று இவர்.

இவ்வாழ்வார் திருவாய்மொழி ப்ரபந்தத்தால் செய்ததாயற்ற அர்த்தம் ஏதேன்னில்;-- முதல் திருவாய்மொழியிலே "உயர்வற வுயர்நலமுடையவன்" என்று தோடங்கி "உணர்முழுநலம் மிகுநரையிலன்", "நிலனிடைவிசும்பிடையுருவினனருவினன்"; "ஆமவையாயவையாய்நின்றவவர்" என்று சோல்லிக்கோண்டு போந்து "கரவிசும்பேரிவளி நீர்நிலமிவைமிசைவரனவில்திறல்வலியளிபோறையாய் நின்ற பரன்" என்று தலைக்கட்டுகையாலே நாராயணனே பரதத்த்வமேன்கைக்காக நாராயணஶப்தார்த்தத்தை அருளிச் செய்தார்; ஸர்வாதிகத்வமும் ஸமஸ்தகல்யாண குணாத்மகத்வமும் உபயவிபூதிநாதத்வமுமிறே நாராயணஶப்தார்த்தம்; இதினுடைய ஶேஷமிறே

ஆராக்ரம் - ஆயுதாக்ரம். தேஜோத்ரவ்யமாய் என்று ஜ்ஞாநஸ்வரூபத்வம் சொன்னபடி. "[illegible] பராஸ்ஸ்வயம்ஜ்யோதிர்பவதி" இத்யாதி. ஜ்ஞாதாவாய் - ஜ்ஞாநகுணகனாய்; "விஜ்ஞாதாரமரே [illegible] நவிஜாநீயாத்" இத்யாதி. ஜ்ஞாநாநந்த குணகனாய் - கீழ் 'ஜ்ஞாதாவாய்' என்று ஜ்ஞாந குணகத்வமாத்ரத்தைச் சொல்லுகையாலே ஆநந்தகுணகத்வமும் சொல்லுகைக்குத் திரியட்டும் அநுவதிக்கிறு ரென்றபடி; ஆகையாலே, புநருக்தியில்லை. 'ஜ்ஞாநத்ரவ்யமாகையாலே' ஜடவஸ்துக்களில் வ்யாவ்ருத்த மென்றபடி. இத்தால், சித்தென்றபடி. திருமந்த்ரத்தில் பதத்ரயார்த்தத்தையும் வ்யுத்க்ரமமாக அருளிச்செய்கிறார் - அப்ருதக்ஸித்யர்ஹ இத்யாதி. அநந்யார்ஹ ஶேஷமுமாய் என்று - ப்ரணவார்த்தம். பரஶேஷைகரஸமுமாய் என்று - சரமபதார்த்தம். அத்யந்தபரதந்த்ரமுமாய் என்று நமஶ்ஶப்தார்த்தம். அப்ருதக்ஸித்யர்ஹமாவது - பிரிக்கைக்கு யோக்யமன்றியிலே யிருக்கை. ப்ருதங்நிர்த்தேஶாநர்ஹமாகையாவது - பிரியச்சொல்லுகைக்கு யோக்யமன்றியிலேயிருக்கை. ஶேஷைகரஸத்வம் - கைங்கர்யபோகத்வம். ஶேஷதா - கைங்கர்யம். தத்த்வப்ரஸங்காத் தத் விஷயஜ்ஞாநாதிக்யரூப வக்த்ருவைலக்ஷண்யத்தை ஸ்மரிப்பிக்கிறார் - இத்தை [illegible] படி இத்யாதி. இத்தை - தத்வத்ரயத்தை.

"ஸம்க்ஷிப்தஸ்ய விஸ்தாரோ விஸ்தரஸ்ய ஸங்க்ரஹ:" என்கிற ந்யாயத்தாலே கீழ் வாக்யத்வயோக்தமான அர்த்தபஞ்சகத்தை விஸ்தரிக்கிறார் - இவ்வாழ்வார் இத்யாதியால். செய்ததாயற்ற அர்த்தம் - ப்ரதிபாதிதமாய்த் தீர்ந்த பொருள். அதில் முதல் பரஸ்வரூபத்தைநிரூபிக்கக்கோலி அந்தப்பரனுகிறான் நாராயணனென்கைக்காக நாராயணஶப்தார்த்தத்தை முதல்திருவாய்மொழியாலே அருளிச்செய்தாரென்றுகாட்டுகிறார் - முதல்திருவாய்மொழியிலே என்று தொடங்கி. 'உயர் திண் அணை' இத்யாதியாலே ஆசார்யஹ்ருதயத்திலே வகையிட்டு அருளிச்செய்கதுக்கும் அடி இதுவாயிற்று. உணர்முழுநலம் - முழுவுணர்வும் முழுநலமுமான. மிகுநரையிலன் - மிக்காரையுடையனல்லன்; நிலனிடை - பூமியிலும், விசும்பிடை - ஸ்வர்க்கலோகத்திலுமுண்டான, உருவினன் அருவினன் - ரூபவத்தான அசித்தையும் ரூபரஹிதமான சித்தையுமுடையவன். ஆமவையாயவையாய்நின்றவவர் - ஆகாமிகளாயும் அதீதமாயுமுள்ள வஸ்துக்களுந் தாமேயாய்நின்றவர். கரவிசும்பு இத்யாதி - ஸூக்ஷ்மமாகையாலே கரத்தலையுடைய ஆகாஶம் அக்நி வாயு ஜலம் பூமி இவற்றின்மேலேயுண்டாய் இவற்றுக்கு ஸ்வபாவமான ஶப்தஸ்பர்ஶம், தாஹகத்வ ஶக்தி பலம் குளிர்ச்சி தாரகத்வம் இத்தர்மங்களோடு தர்மிகளோடு வாசியறத் தனக்கு ப்ரகாரமாம்படி நின்ற ஸர்வஸ்மாத்பரனென்று பொருள். இவை நாராயணஶப்தார்த்தமானபடி என்? என்ன, ஸர்வாதிகத்வம் இத்யாதி. 'மிகுநரையிலன்' இத்யாதியாலே ஸர்வாதிகத்வமும், 'உயர்வற வுயர்நலமுடையவன்' இத்யாதியாலே ஸமஸ்தகல்யாண குணாத்மகத்வமும், 'ஆமவையாயவையாய்' இத்யாதியாலும் 'கரவிசும்பெரிவளி' இத்யாதியாலும் 'அயர்வறு மமரர்களதிபதி' என்கிறத்தாலும், உபயவிபூதி நாதத்வமுஞ் சொல்லிற்றிறே. 'திண்ணன் வீட்டிலும் ஒன்றுந்தேவிலும் பரத்வஞ்சொல்லுகிறதே' என்ன, இதினுடைய இத்யாதி. 'திண்ணன்வீடு' என்

"ஒன்றுந்தேவும்","திண்ணன்வீடும்". அநந்தரத்திருவாய்மொழியிலே இவ்வர்த்தத்துக்குவாசகமான திருநாமந்தன்னை *"வண்புகழ்நாரணன்" என்று அருளிச்செய்தார்; வ்யாபகாந்தரங்களிலும் இவ் வர்த்தத்தை அறியலா யிருக்குமே; அங்ஙனன்றிக்கே, இதுவே வாசக மென்று தம்திருவுள்ளத்திலே அறுதியிட்ட ஆகாரம் தோற்ற,†"செல்வநாரணன்";‡"திருநாரணன்", $"நாரணன் முழுவேழுலகுக்குந்நாதன்",¶"காராயினகாளநன்மேனியன் நாராயணன்", §"திண்ணம்நாரணம்" என்று ஆதரித்துக்கொண்டு போந்து**"வாழ்புகழ்நாரணன்"என்று வழிப்போக்கில் வார்த்தையும் இதுவேயாய்த் தலைக்கட்டுகையாலே இதுவே வாசகமென்கிற நிர்ப்பந்தத்தை அருளிச்செய்தார; இனி, ††"மலர்மகள்விரும்பும்நமரும்பெறலடிகள்"என்று தொடங்கி‡‡"திருவுடையடிகள்"என்றும்;$$"மையகண்ணாள்மலர்மேலுறைவாளுறைமார்பினன்" என்றும்;¶¶"நமக்கும்பூவின்மிசைநங்கைக்குமின்பன்" என்றும், §§"கோலத்திருமாமகளோடுன்னைக்கூடாதே" என்றும் சோல்லிக்கோண்டு போந்து, ***"திருவாணை" என்றும், †††"கோலமலர்ப்பாவைக்கன்பாகிய வென்னன்பே" என்றும் தலைக்கட்டுகையாலே ஸ்ரீமானான நாராயணனே பரதத்த்வமென்றும் சோல்லிற்று. இத்தால்;நம் ஆசார்யர்கள் ரஹஸ்யத்திற் பதத்வயத்தாலும்அருளிச்செய்துகோண்டுபோரும் அர்த்தத்துக்கு அடி இவ்வாழ்வாராயிருக்கு மென்றதாயிற்று; ஆஶ்ரயணவேளையிலே "மலர்மகள்விரும்பும்நமரும்பெறலடிகள்" என்று தொடங்கி, ஹோமவேளையிலே ‡‡‡"கோலமலாப்பாவைக்கன்பாகியவென்னன்பே" என்று சொல்லுகையாலே, ஆஶ்ரயணவேளையோடு ஹோமவேளையோடு வாசியற ஒருமிதுநமே உத்தேஶ்ய

றது 'அணைவ தரவணை' க்கும் உபலக்ஷணம். இவ்வர்த்தத்துக்கு - ஸர்வாதிகத்வாத்யர்த்தத்துக்கு. வண் புகழ் நாரணன் - அழகிய குணங்களை யுடைய நாரணன், அர்த்தகதநம் போராதோ? வாசகஶப்தமும் சொல்லவேணுமோ? என்ன, வ்யாபகாந்தரங்களிலும் இத்யாதி. வ்யாபகாந்தரங்கள் - வாஸுதேவ விஷ்ணு நாமங்கள். இதுவே யென்கிற அவதாரணம் - ப்ராதாந்யபரம். அஸக்ருதுக்தி ஆதரகார்யமென்று தோற்றுகைக்காகப் பலசந்தைகளையும் எடுக்கிறார், செல்வ நாரணன் இத்யாதி. செல்வ நாரணன், திருநாரணன் - ஸ்ரீமானான நாராயணன். நாரணன் முழுவேழுலகுக்கு நாதன் - நாராயணஶப்தவாச்யன் ஸமஸ்தமான ஏழுலகுக்கும் நாதனானவன். காராயின இத்யாதி - காளமேகம்போலே ஶ்யாமலமாய் அப்ராக்ருதமான திவ்யவிக்ரஹத்தை யுடையனான நாராயணன். திண்ணம் நாரணம் - நிஶ்சிதமாகத் திருநாமமான நாராயணஶப்தமே எண்ணுங்கோள். வாழ் இதி - ஆநந்தாவஹமான குணங்களை யுடைய நாராயணன். வழி - அர்ச்சிராதிமார்க்கம். தலைக்கட்டுகையாலே என்கிறதுக்கு - "உபக்ரமோபஸம்ஹாரௌ" இத்யாதியிலே நோக்கு. இனி-இதுக்குமேலே. வஸ்துவுக்குப் பரத்வம் சொல்லுமளவில் ஶ்ரிய:பதித்வமும் அதுக்கு உடலாகச்சொல்லவேண்டுகையாலே அத்தை அருளிச்செய்கிறார், மலர்மகள் இத்யாதி. இப்பாசுரங்களுக்கு அர்த்தம் - தாமரைப்பூவிற் பிறந்த பிராட்டி விரும்பும்படியான பெறுதற்கரிய நம் ஸ்வாமியானவன். திருவுடையடிகள் - ஸ்ரீமானான ஸ்வாமியினுடைய. மைய இத்யாதி - மையணிந்த கண்ணை யுடையவளாய்த் தாமரைப்பூவில் வஸிக்குமவளான பிராட்டி நித்யவாஸம்பண்ணுகிற மார்பையுடையவன். நமக்கும் இத்யாதி - நித்யஸம்ஸாரியான நமக்கும், பத்மவாஸினியான பிராட்டிக்கும் ஆநந்தஜநகனானவனே. கோல இத்யாதி - அழகிய பிராட்டியோடே கூடியிருக்கிற உன்னைக் கிட்டாதே. திருவாணை - பிராட்டியுடைய ஆணை. கோலமலர் இத்யாதி - அழகிய பத்மவாஸினியான பிராட்டிக்கு அன்பனாய், அத்தாலே என்பக்கலிலும் அன்பையுடையவனே. இத்தால் நம் ஆசார்யர்கள் இத்யாதி:- ரஹஸ்யத்தில்-த்வயத்தில். பதத்வயத்தாலும் - பூர்வோத்தரகண்டாதியில் 'ஸ்ரீமத், ஸ்ரீமதே' என்கிற பதத்வயத்தாலு மென்றபடி. அருளிச்செய்து கோண்டு போரும் அர்த்தம் - புருஷகாரத்வ ப்ராப்யத்வங்கள். உக்தவிவரணம் - ஆஶ்ரயணவேளையிலே இத்யாதி. ஶ்ரோத்ருபுத்தி ஸமாதாநார்த்தமாகவும், ஸங்கதி ஸ்புரணார்த்தமாகவும் வ்ருத்தத்தை நிகமியா

---

* திருவாய்மொழி க-உ-கo. † ஷை க-கo-அ. ‡ ஷை ச-க-க. $ ஷை உ-எ-உ.
¶ ஷை கூ-ரு-க. § ஷை கo-டு-க. ** ஷை கo-கூ-எ. †† ஷை க-ரு-க.
‡‡ ஷை க-ரு-கூ. $$ ஷை ச-டு-உ. ¶¶ ஷை ச-டு-அ. §§ ஷை சா-ரு-சு.
*** ஷை கo-கo-உ. ††† ஷை கo-கo-எ. ‡‡‡ ஷை க-க-எ.

மேன்னுமிடம் சொல்லிற்றாயிற்று; இப்படி பரஸ்வரூபம் நிர்ணீதமாயிற்று. பரஸ்வரூபப்ரதிஸம்பந்தியானஸ்வஸ்வரூபம் இருக்கும்படிஎன்? என்னில்;— * "உடன்மிசையுயிரெனக்கரந்தெங்கும்பரந்து" என்று ஶரீராத்மஸாவத்தைத் தாம் அநுஸந்தித்துப் பிறர்க்கு உபதேசிக்கிறவிடத்திலே †"உம்முயிர்வீடுடையானிடை" என்று அந்த ஶரீராத்மஸாவந்தன்னையே உபதேசித்து, இந்த ஶரீராத்மஸாவத்தால் பலிக்கிறது அநந்யார்ஹஶேஷத்வ மேன்னுமிடத்தை ‡"தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்றும்$"அடியேனுள்ளானுடலுள்ளான்" என்றும் சொல்லி இது தச்சேஷத்வத்தளவிலே நிற்பதொன்றல்ல, ததீயஶேஷத்வபர்யந்தமானலாயிற்று தச்சேஷத்வஸித்தி யென்னுமிடத்தை, "பயிலுஞ்சுடரொளி" "நெடுமாற்கடிமை" யிலே பரக்க அருளிச்செய்து, ¶"அடியார்கள் குழாங்களையுடன்கூடுவதென்றுகொலோ" என்று ப்ரார்த்தித்து, ப்ரார்த்தித்தபடியே §"அடியரோடிருந்தமை" என்று தலைக்கட்டுகையாலே ஸாமவதஶேஷத்வபர்யந்தமான பகவச்சேஷத்வமே ஸ்வருபமேன்னுமிடம் சொல்லிற்று. ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தம் இருக்கும்படி யென்? என்னில்;-|"தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே" என்று தொடங்கி, **"வழுவிலாவடிமைசெய்யவேண்டும் நாம்" என்றும்††"பணிமானம்பிழையாமே யடியேனைப் பணிகொண்ட" என்றும்‡‡"முகப்பேகூவிப்பணிகொள்ளாய்" என்றும் இப்படிகளாலே அடிமையே புருஷார்த்தமேன்னுமிடத்தை நிர்ணயித்து 'இதுதான் ஶாஸ்த்ரவிஹிதமேன்று செய்யுமளவல்ல: ஸ்வரூபப்ராப்தமேன்று செய்யுமளவல்ல: ராகப்ராப்தம்' என்று சொல்லுகைக்காக அடியிலே "உயர்வறவுயர்நலமுடையவன்" என்று கொண்டு ப்ராப்யமான குணங்களைச் சொல்லி, $$"சுவையன்திருவின்மணாளன்" என்றும் §§"தூயவமுதைப்பருகிப்பருகி" என்றும் குணவிஶிஷ்டவஸ்துவினுடைய போக்யதையையுஞ் சொல்லி, ¶¶"அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதம்" என்றும் ***"ஆராவமுதே" என்றும் †††"ஆராவ

நின்றுகொண்டு, வர்த்திஷ்யமாணகாங்க்ஷையை உத்க்ஷேபிக்கிறார் - இப்படிபரஸ்வரூபம் இத்யாதி வாக்யத்வயத்தாலே. 'ஸ்வஸ்வரூபமிருக்கும்படி என்னேன்னில் என்றது - ஸ்வஸ்வரூபமிருக்கும்படியைச் சொன்னபடி எங்ஙனே யென்னி லென்றபடி. உடல்மிசை இத்யாதி - ஶரீரத்தில் ஆத்மா வ்யாபிக்குமாபோலே மறைந்து எங்கும் வ்யாபதனாய். முதல்திருவாய்மொழி ஸ்வாநுபவரூப மாகையாலே, தாம்அநுஸந்தித்து என்றது. உம்முயிர் இத்யாதி - உங்களுடைய ஆத்மாவை வீடாகவுடையவன். தனக்கே இத்யாதி - எனக்கும் தனக்கும் பொதுவாகை யன்றிக்கே தனக்கே பரதந்த்ரமாம்படி என்னை அங்கீகரிக்குமதுவே. அடியேன் இத்யாதி - ஶேஷத்வைக நிரூபணீயமான என்ஆத்மாவிடத்திலும் அந்தராத்மாவாய் நில்லாநின்றான்; ஹேயமான ஶரீரத்தினுடைய ஹ்ருதயாம்பரத்திலேயும் வர்த்தியாநின்றான். அடியார் இத்யாதி - நித்ய தாஸ்யைக நிரூபணீயரான ஸூரிகளுடைய ஸங்காதங்களை ஒருசேரம்படி உடன்கூடுவ தென்றோ? அடியரோ டிருந்தமை - நித்யஸூரிகளோடு கூடியிருந்த ப்ரகாரத்தை. மேல் புருஷார்த்த ஸ்வரூபமாஹ - ஸ்வரூபாநுரூப இதி. புருஷார்த்தம் இருக்கும்படி என்னென்னில் - புருஷார்த்தம் இருக்கும்படியை அருளிசசெய்தபடி எங்ஙனேயென்னி லென்றபடி. பணிமானம் இத்யாதி - அடிமையில் நாளவுந் தப்பாதபடி அடியேனை அடிமைகொண்டு. முகப்பே இத்யாதி - திருமுன்பே அழைத்து அடிமைகொண்டருளவேணும். ஶாஸ்த்ரவிஹிதமேன்ற விடத்திலே-"யொமொஹாஉயவா஽வஸ்ராஉக்ஸு தாஜெயதாருநம் | ஸஜெக்ஷயாதிநரகாநுகெஜெஷவிஜாயதெ" என்றது அநுஸந்தேயம். ப்ராப்யமான - போக்யமான. சுவையன் இத்யாதி - ரஸிகனான லக்ஷ்மீபதியானவன். தூய இத்யாதி - பரிசுத்தமான அம்ருதமானவனை, நிரந்தரமாக அநுபவித்து. ஆராவமுதானாய் - த்ருப்திபிறவாத அம்ருதமா

* திருவாய்மொழி க-உ-க. † ஷை உ-கூ-ச. $ ஷை அ-அ-உ. ¶ ஷை உ-ங-க0, § ஷை ங-ங-க. ** ஷை ச-அ-உ. †† ஷை அ-ரு-எ. ‡‡ ஷை க-கூ-க. $$ ஷை க-எ-ங. ¶¶ ஷை உ-ரு-ச. §§ ஷை ரு-அ-க. *** ஷை க0 க0-ரு. ††† ஷை க0-அ-க0.

முதாறுயே'' என்றும் இந்த ஹோமத்தினுடைய நித்யாபூர்வதையைச் சொல்லி, *''உகந்துபணி செய்துனபாதம்பெற்றேன்'' என்று குணுநுபவஜநித ப்ரீதிகாரிதகைங்கர்யமே புருஷார்த்தமென்னு மிடத்தைச் சொல்லி, இதுதான் யாவதாத்மபாவியான புருஷார்த்த மென்கைக்காக †''ஈதே யின்னம்வேண்டுவதெந்தாய்'' என்றுதலைக்கட்டுகையாலே பகவத்குணுநுபவஜநிதப்ரீதிகாரிதகைங்கர்யமே புருஷார்த்தமென்று அருளிச்செய்தார்; இப்புருஷார்த்தத்துக்கு இடைச்சுவரான விரோதி வேஷத்தை இரண்டாந்திருவாய்மொழியிலே ''வீடுமின்முற்றவும்'' என்று கட்டடங்கச் சொல்லி அதுதன்னையே மேல் மூன்று திருவாய்மொழியாலே விஸ்தரித்து அருளிச்செய்தார்; அவை எவை யென்னில்;—அஸேவ்யஸேவை த்யாஜ்ய மென்றார், ''சொன்னால் விரோத''த்திலே; ஐஸ்வர்ய கைவல்யங்கள் த்யாஜ்ய மென்றார், ''ஒருநாயகத்''திலே; ஶரீரஸம்பந்தநிபந்தநமாக வரும் பரிக்ர ஹங்கள் த்யாஜ்யமென்றார், ''கொண்டபெண்டி''ரிலே; அங்ஙனே சொல்லலாமோ? ஶாஸ்த்ரஸித்த மான ஐஸ்வர்யகைவல்யங்கள் புருஷார்த்தமாகத் தட்டென்? என்னில்; - பரம புருஷார்த்த லக்ஷணமோக்ஷத்திலே அதிகரித்தவனுக்கு ஐங்கருவிகண்ட வின்ப மாகையாலும், தெரிவரிதாய் அளவிறந்து இருந்ததேயாகிலும் பகவதநுபவத்தைப் பற்றச் சிற்றின்பமாகையாலும், முமுக்ஷு வுக்கு இவை த்யாஜ்யமென்றார்; ஆக த்யாஜ்யவேஷத்தை அருளிச்செய்தார். த்யாகப்ரகாரமிருக் கும்படியென்? என்னில்,—த்யாஜ்யமென்றால் விடுமத்தனையன்றோ; த்யாகப்ரகாரமிருக்கும்படி அறியவேணுமோ? என்னில், - வேணும்; விஷயங்களினின்றும் தான் கடக்க வர்த்திக்கவோ? அன்றியே, விஷயங்களை நஶிப்பித்து வர்த்திக்கவோ? என்றால்;— இரண்டும் ஒண்ணுது; கடக்க வர்த்திக்கவென்று நினைத்தால் லீலாவிபூதிக்கு அவ்வருகே போகவேணும்; நஶிப்பித்து வர்த்திக் கவோவென்றால் பகவத்விபூதியை அழிக்கையாய்விடும்; இரண்டுமொழிய விஷயஸந்நிதியினின் றும் நிர்மாநுஷமான காட்டிலே வர்த்தித்தாலோ? என்றால்,— ஸர்வத்தையும் விட்டுக் காட்டிலே யிருந்த ஆதிபரதனுக்கு மானின்பக்கலிலே ஸங்கமுண்டாய் ஜந்மப்ரஸம் பிறந்தது; ஸௌபரி நீருக்குள்ளே முழுகிக்கிடக்கச்செய்தே அங்கே சிலமத்ஸ்யஸஞ்சாரத்தைக் கண்டு விஷயப்ரவண ஞனன்; ஆகையாலே, த்யாகப்ரகாரம் இவையல்ல; ஆனல் ஏதாவதென்னில், - ‡''நீர்நுமதென் றிவை வேர்முதல்மாய்த்திறைசேர்மின்'' என்று தேஹத்தில் ஆத்மபுத்தியையும், தேஹாநுபந்திக ளான பதார்த்தங்களில் மமதாபுத்தியையுந் தவிருகை த்யாகப்ரகாரமென்று பிறர்க்கு உபதேசித் தார்;₰''யானேயென்னையறியகிலாதே யானேயென்தனதேயென்றிருந்தேன்'' என்று தாமும் அநுஸந்

ஞய். உகந்து இத்யாதி - ப்ரீதிப்ரேரிதனுய்க்கொண்டு அடிமைசெய்து உன்திருவடி பெற்றேன். ஈதே இத் யாதி - இவ்வடிமையே இவ்வாத்மாவுள்ளதனையும் அபேக்ஷிதம், எனக்கு நிருபாதிக பந்துவானவனே. விரோதி ஸ்வரூபமாஹ - இப்புருஷார்த்தத்துக்கு இத்யாதி. இடைச்சுவர் - மத்யகுட்யம்; ப்ரதிபந்தக மென்றபடி. கட்டடங்க - ஸாகல்யேந. ஐஶ்வர்ய கைவல்யங்களை க்ரமேண அருளிச்செய்கிறார் - ஐங்கருவி இத்யாதி. ஐங்கருவி பஞ்சேந்த்ரியம். அளவிறந்தது - அபரிச்சிந்நம். ஐங்கருவிகண்ட வின்பம் என்றது - பஞ்சேந்திரியங்களாலே அநுபவிக்கப்பட்ட ஐஹிக ஸுக மென்றபடி. ஜிஜ்ஞாஸாப்ரஶ்நம் - த்யாகப்ர காரமித்யாதி. தடஸ்த்த ப்ரஶ்நம் - த்யாஜ்யமென்றல் இத்யாதி. விவரணம் - விஷயங்களில்நின்றும் இத் யாதி. ஜந்மப்ரஸம் பிறந்த தென்றவிடத்திலே-''யம் யம் வாபி ஸ்மரந் பாவம் த்யஜத்யந்தே களேவரம் | தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவபாவித:'' என்றது அநுஸந்தேயம். விஷயப்ரவண ஞனன் என்றது - ''நிரீக்ஷ்ய ஸ கத்வா ஸ்த்ரீ நமேத்ருக் க்ருத்யம் ஸ்வய ஸம்போக விஹாரிண:'' என்றத்தைப்பற்ற. நீர்நுமது இத்யாதி - நீங்கள் உங்களது என்கிற அஹங்காரமமகாரங்களாகிற இவற் றை வேரோடே முதலறுத்து. யானே இத்யாதி - நான்தானே என்னுடைய யாதாத்ம்யத்தை அறியமாட்

* திருவாய்மொழி க-அ-கo. † ஷை ஷை. ‡ ஷை க-உ-ங. ₰ ஷை உ-க-க.

தித்தார்; "நிவ்ருத்தராகஸ்ய க்ருஹம் தபோவநம்" (நிவ்ருத்தராகஸ்யக்ருஹம் தபோவநம்) என்று நிவ்ருத்தராகனுயிருக்குமவனுக்குத் தானிருந்த தேசமே தபஸ்ஸுக்கு ஏகாந்தஸ்த்தலமென்றதாயிற்று; இப்படி எங்கேகண்டோம்? என்னில், - ஸ்ரீஜநகராஜன்பக்கலிலும் ஸ்ரீகுலசேகரப்பெருமாள்பக்கலிலும் கண்டுகோள்வது; ஆகையாலே, புத்தித்யாகமே த்யாகமென்றபடி. இவ்விரோதி நிவ்ருத்திக்கும் புருஷார்த்தஸித்திக்கும் உபாயம் எது? என்னில்,— த்ரைவர்ணிகாதிகாரமான பக்தியும் அகிஞ்சநாதிகாரமான ப்ரபத்தியும் என்று இரண்டிறே வேதாந்தஸித்தமான உபாயம்; இதில் ப்ரபத்தியே உபாயமென்று தமக்கு ஸித்தாந்தமென்னும் ஆகாரம் தோற்ற உபாயவேஷத்தை அருளிச்செய்தார், *"நோற்றநோன்பிலேன்" என்று தொடங்கி †"ஆறெனக்குநின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்" என்றும், ‡"உழலையென்பிற் பேய்ச்சிமுலையூடவளையுயிருண்டான்கழல்களவையேசரணாகக்கொண்ட" என்றும், $"நாமங்களாயிரமுடைய நம்பெருமானடிமேற்சேமங்கோள் தேன்குருகூர்ச்சடகோபன்" என்றும், ¶"நாகணைமிசைநம்பிரான்சரணேசரணமக்கு" என்றும் சொல்லிக்கொண்டுபோந்து. §"ஆவிக்கோர்பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன்" என்று தலைக்கட்டுகையாலே திருவடிகளே உபாயமென்று அருளிச்செய்தார்; இத்தைப் பிறர்க்கு உபதே

டாதே 'நான்' 'என்னது' என்று அஹங்காரமமகாரங்களைப் பண்ணி அநர்த்தாவஹமாம்படி யிருந்தேன். நிவ்ருத்தாஹங்கார மமகாரனுக்கு வஸ்தவ்யதேசநியமாஹாவத்தை அருளிச்செய்கிறார் - நிவ்ருத்தராகஸ்ய இத்யாதி. இதிஹாஸஸமுச்சயே த்ரயோதசாத்யாயே இதம்வசநம். "வநேபி தோஷா: ப்ரபவந்தி ராகிணாம் க்ருஹேபி பஞ்சேந்த்ரியநிக்ரஹஸ்தப: । அகுத்ஸிதே கர்மணி ய: ப்ரவர்த்ததே"

இதி பூர்வார்த்தம். ஸ்ரீஜநகராஜன் பக்கலிலும் என்கிற விடத்திலே "மிதிலாயாம் ப்ரதீப்தாயாம் ந மே கிஞ்சித் ப்ரதஹ்யதே" என்றத்தைக் கண்டுகொள்வது. ஸ்ரீகுலசேகரப்பெருமாள் பக்கலிலும் என்றது - "ஊனேறு செல்வத்துடற்பிறவி" இத்யாதிகளைப் பற்ற. அகிஞ்சநாதிகாரமான ப்ரபத்தியும் - இவ்விடத்திலே "ப்ரபத்யே" "ஸ்ரீமந்நாராயணசரணௌ சரணம் ப்ரபத்யே", "ப்ரஹ்மகத்வி ஸஸ்ய அகிஞ்சநஸ்ய ... தப: । ஸர்வஸ்ய ... தாரணம் ப்ரபத்தம்" இத்யாத்யநுஸந்தேயம். - ப்ரபத்யாணி: - உபாயாந்தரஸ்பர்சராஹித்யாத் விசுத்தஹஸ்த இத்யர்த்த:. இரண்டிறே என்றவிடத்திலே - "ஸைஷா ... தேவாவதாநாம் ... ப்ராப்நோதி" இத்யாத்யநுஸந்தேயம். வேதாந்தஸித்தமான என்றது - "நித்யோ ..." "... ஸாதோ ..." "ஸர்வஸ்ய சரணம் ப்ரபத்யே" இத்யாதியைப்பற்ற. அதில் ப்ரபத்தியே உபாய மென்று தமக்கு ஸித்தாந்தமென்கையாலே பக்தி உபாயமன்றென்றபடி. ப்ரபத்தி - ஈச்வர:. "ந்யாஸ இதி ப்ரஹ்ம" என்று இருக்கையாலே. நோற்ற இத்யாதி - பலவ்யாப்தமாம்படி அநுஷ்டித கர்மயோகமுடையேனல்லேனென்றபடி. ஆறெனக்கு இத்யாதி - எனக்கு உபாயம் தருமிடத்தில் உன்திருவடிகளையே உபாயமாகத் தந்துவிட்டாய். உழலை இத்யாதி - உழலைத்தடிகோத்தாற்போலே யிருக்கிற எலும்புகளை யுடைய பேய்ச்சிமுலையின் அகவாயில் அவள் ப்ராணங்களை யுண்ட க்ருஷ்ணனுடைய அந்தத்திருவடிகளையே உபாயமாகப் புத்திபண்ணிக்கொண்ட. நாமங்கள் இத்யாதி - நாமஸஹஸ்ரத்தையுமுடைய நம்முடைய ஸ்வாமியான ஸர்வேச்வரனுடைய திருவடிகளின்மேலே க்ஷேமகரத்வபுத்திருபவ்யவஸாயத்தையுமுடையராய், அழகிய திருநகரிக்கு நிர்வாஹகரான ஆழ்வார். நாகணை இத்யாதி - திருவநந்தாழ்வானாகிற படுக்கையின்மேலே கண்வளர்ந்தருளின நம்முடைய ஸ்வாமியுடைய திருவடிகளே உபாயம் நமக்கு. ஆவிக்கோர் இத்யாதி - என்னுத்மாவுக்கு அபாச்ரயமாயிருப்பதொரு உபக்ரம் உன்னையொழிய நான் அறியேன். தாம் சதுர்த்தவர்ணத்திலே அவதரிக்கையாலே பக்தியில் அதிகாரமில்லாமல் ப்ரபத்தி நிஷ்ட்டரானால், அத்தாலே பக்தி உபாயமன்று, ப்ரபத்தியே உபாயமென்று தோன்றுமோ? என்ன, இத்தைப்

* திருவாய்மொழி ரு-எ-க. † ஷை ரு-எ-க0. ‡ ஷை ரு-அ-கக. $ ஷை ரு-கூ-கக.
¶ ஷை ரு-க0-கக. § ஷை க0-க0-ரு.

சிக்கிறவிடத்திலும் *"திருநாரணன்தாள் காலம்பெறச்சிந்தித்துய்ம்மினோ" என்றார். "ஆறெனக்கு நின்பாதமே" என்றும், "கழல்களவையே" என்றும், "சரணேசரணமக்கு" என்றும் அவயாரிக்கை யாலே உபாயபூர்த்தியை அருளிச்செய்தார். இவ்வுபாயத்துக்கு அதிகாரிகளாவார் ஆர்? என்னில்;- †"மயர்வறமதிநலமருளினன்"என்ற விடத்தில் எனக்கருளினனென்கைக்குத் தம்மைக்காணாமை யாலே ஆகிஞ்சந்யத்தையே புரஸ்கரித்து, உபாயநிர்ணயவேளையிலே "நோற்றநோன்பிலேனுண் ணறிவிலேன்" என்று த்ரைவர்ணிகாதிகாரமான உபாயாந்தரங்களில் அநந்வயமுகத்தாலே ஆகிஞ் சந்யத்தைப் பேசி, ஆஶ்ரயணவேளையிலே ‡"புகலொன்றில்லாவடியேன்" என்றுசொல்லி ஹோம வேளையில் தமக்கு உண்டானது அடங்க பகவத்ப்ரஸாதலப்த மென்கைக்காக $"நீசனேன் நிறை யொன்றுமிலேன்" என்று கருந்தரையைப் பேசி, ¶"ஒப்பிலாத்தீவினையேனையுய்யக்கொண்டு" என்று ஸாபராதஜந்துக்களுக்கும் புகுரலாமென்று தோற்றுகையாலே ஸர்வாதிகார மென்றதா யிற்று. அதிகாரியைப்பெற்றாலும், உபாயம் ஸித்தமானாலும், ஸ்வீகாரமில்லாதபோது ஜீவிக்கையா காமையாலே அந்தஸ்வீகாரவேஷத்தை §"கழல்களவையேசரணாகக்கொண்ட" என்றும்; இதினு டைய ஸாங்காநுஷ்டாநவேளையிலே *"அடிக்கீழமர்ந்துபுகுந்தேன்" என்றும் அருளிச்செய்தார்; இந்த ஸ்வீகாரஸித்திதானும் அவனாலே யென்னுமிடத்தை **"நின்பாதமேசரணாகத் தந்தொழிந் தாய்" என்றும், (§)"அதுவுமவனதின்னருளே" என்றும் அருளிச்செய்தார்; இந்த ஸ்வீகர்த்தாவினு டையஅத்யவஸாயவேஷத்தை (||)"களைவாய்துன்பங்களையாதொழிவாய களைகண்மற்றிலேன்" என் றும்; $$"நாடோறு மேகசிந்தையனாய்" என்றும் அருளிச்செய்தார். இவ்வுபாயத்தைப் பிறர்க்கு உப தேசிக்கிற விடத்திலே ¶¶"சிற்றவேண்டாசிந்திப்பேயமையும்" என்று உபாயஸௌகர்யத்தை அரு ளிச்செய்து, இதுதன்னை ஸப்ரகாரமாக அருளிச்செய்கிறவிடத்திலே "இது பக்த்யங்கமன்று; ஸ்வ

பிறர்க்கு இத்யாதி. திருநாரணன் இத்யாதி-ஸ்ரீமானான நாராயணனுடைய திருவடிகளைக் காலவிளம்பம் பிற வாமல் சடக்கென அநுஸந்தித்து உஜ்ஜீவியுங்கோள். அவயாரிக்கையாலே-அவதாரணமாக அருளிச்செய்கை யாலே. உபாயபூர்த்தி யென்றது - ஏகஸப்தார்த்தத்தைக் கடாக்ஷித்து. உபாயபூதனான ஈஶ்வரனுடைய ஸஹாயாந்தர ஸம்ஸர்க்காஸஹத்வரூப பூர்த்தியை யென்றபடி. கீழே 'அகிஞ்சநாதிகாரமான ப்ரபத்தியும்' என்கையாலே இங்கே 'இவ்வுபாயத்துக்கு அதிகாரிகளாவார்ஆர்? என்னில்' என்கிற ஶங்கைக்கு உத்திதி யில் லையென்னில்;—அங்கு ஶாஸ்த்ரார்த்தத்தை அவலம்பித்து தத்ஸ்வரூபகதநம் பண்ணினபடி; இந்தஶங்கை திருவாய்மொழியை அவலம்பித்து உண்டானது; ஆகையாலே, ஶங்கிக்கலாம். ஆகிஞ்சந்யமாவது-உபாயாந்தர ஶூந்யதையும் கத்யந்தரஶூந்யத்தையு மென்று விவக்ஷித்து உபயத்தையும் க்ரமேண அருளிச்செய்கி றார் - உபாயநிர்ணயவேளையிலே இத்யாதி. புகலொன்றில்லாவடியேன் - கத்யந்தரமொன்றுமில்லாத தாஸபூதனான நான். நீசனேன் நிறையொன்றுமிலேன் - அத்யந்தநீசனான நான் குணபூர்த்தியொன்று மில்லாதவன். கருந்தரை - பாழ்நிலம்; ஶூந்யதை யென்றபடி. ஒப்பிலா இத்யாதி - ஒப்பற்றிருக்கிற க்ரூரபாபத்தையுடைய என்னை உஜ்ஜீவிக்கும்படி கைக்கொண்டு. இது ஸர்வாதிகாரமாயிருக்க, உபாயம் ஸித்தோபாயமாயிருக்க, ஸர்வர்க்கும் முக்தி வரவேண்டாவோ? என்ன, அதிகாரியை இத்யாதி. ஸ்வீகார மில்லாதபோது என்ற விடத்திலே - "ஸர்வஜ்ஞோபி ஹி விஶ்வேஶ: ஸதா காருணிகோபி ஸந் । ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே" என்றது அநுஸந்தேயம். ஜீவிக்கை யாகாமையாலே-ஜீவநஹேதுவாகாமையாலே. அமர்ந்து-அநந்யப்ரயோஜநனாய்ப் பொருந்தி. இப்படியானால் நிர்ஹேதுகத்வபங்கம் வாராதோ? என்ன, இந்தஸ்வீகாரஸித்தி இத்யாதி. அதுவும் அவனதின்னருளே - அந்த இச்சைதானும் அவனுடைய நிர்ஹேதுகக்ருபையடியாக உண்டானதே. களைவாய் இத்யாதி - துக்கத்தைப் போக்குவாய், போக்காதொழிவாய், கத்யந்தரம் வேறில்லாதவனா யிருந்தேன். நாடோறும் ஏகசிந்தையனாய் - நாள்தோறும் ஏக ப்ரகாரமான சிந்தையுடையனாய். சிற்றவேண்டா இத்யாதி - பரக்க ஆயாஸிக்கவேண்டா; சிந்தாமாத்ரமே அமையும். ஸப்ரகாரமாக - "அடைந்தார்க்கெல்லாம்" என்று ஸர்

---

* திருவாய்மொழி ச-க-க. † ஷை க-க-உ. ‡ ஷை கூ-கo-கo. $ ஷை ங-ங-ச.
¶ ஷை எ-கூ-ச. § ஷை ரு-அ-கக. ** ஷை ரு-எ-கo. (§) ஷை அ-அ-ங. (||) ஷை ரு-அ-அ.
$$ ஷை ரு-கo-கக-கக. ¶¶ ஷை கூ-க-எ.


தந்த்ரோபாயம் என்கைக்காக *“சரணமாகும்” என்று தொடங்கி “மரணமானால் வைகுந்தங் கொடுக்கும்பிரான்” என்று ப்ராப்திபர்யந்தமாக முடியநடத்துமென்று அருளிச்செய்தார். இவ்வுபாயாத்யவஸாயம் பண்ணியிருக்குமவனுக்குக் காலக்ஷேபப்ரகாரம் இருக்கும்படி யென்? என்னில்;- †“தொண்டர்க்கமுதுண்ணச்சொன்மாலைகள்சொன்னேன்” என்று திருவாய்மொழிதானே காலக்ஷேபப்ரகார மென்று அருளிச்செய்தார். இப்படி உபாயத்தை ஸ்வீகரித்து இதுவே போதுபோக்காகத்திரியும் அதிகாரிக்கு பலவேஷமிருக்கும்படியென்? என்னில்; - ஜிதேந்த்ரியத்வம் ப்ரதமமாய் கைங்கர்யஸித்தி சரமமாயிருக்கு மித்தனையும் உபாயபலமென்னுமிடத்தை அருளிச்செய்தார். ப்ரதமத்திலே இழியும்போது ஜிதேந்த்ரியனாய்க்கொண்டு இழியவேணும் உபாஸகனுக்கு; ஜிதேந்த்ரியத்வமும் உபாயபலம் இவ்வதிகாரிக்கு. எங்ஙனேயென்னில், - ‡“என்னைத்தீமனங்கெடுத்தாய்” $“மருவித்தொழும்மனமேதந்தாய்”என்று ஜிதேந்த்ரியத்வம்அவனாலேயென்னுமிடத்தைச்சொல்லி ஜிதேந்த்ரியனானவாறே ஸ்வபவதநுபவத்துக்கு உபகரணமான ஸக்த்யாதியாதிகள் தனக்குத்தானே உண்டாகிறதோ? என்னில், - “மயர்வறமதிநலமருளினன்” என்று ஸக்திரூபாபந்நஜ்ஞாநத்தையுந் தானே தந்தா னென்கையாலே ஸக்த்யுத்பத்தியும் அவனாலே யென்னுமிடமும் சொல்லிநின்றது. ஆனால், உத்பந்நையான பக்திக்கு வர்த்தகர்ஆர்? என்னில், - ¶“காதல்கடல்புரையவிளைவித்தகாரமர்மேனிநங்கண்ணன்” என்று அவனே வர்த்தக னென்னுமிடஞ் சொல்லி, வ்ருத்திக்கு எல்லை ஏதென்னில், §“அதனிற்பெரியவென்னவா” என்று தத்த்வத்ரயங்களையும் விளாக்

வாதிகாரத்வப்ரகார ஸஹிதமாக. சரணமாகும் இத்யாதி - தன் திருவடிகளை அடைந்தவர்களெல்லாம் உபாயமாம்; அவர்களுக்கு மரணமானால் பரமபதத்தைக் கொடுக்கும். இவ்வுபாயாத்யவஸாயம் இதி - கைங்கர்யமே புருஷார்த்தமென்றும், அதுக்கு உபாயம் அவன் திருவடிகளே யென்றும் அருளிச்செய்தாரகையாலே இத்திருவாய்மொழி எதுக்காக வென்று இப்ஸங்காவாக்யத்துக்குத் தாத்பர்யம். காலக்ஷேப ப்ரகாரம் - காலக்ஷேபஸாதநம். தொண்டர்க்கு இத்யாதி - அவனடியார்க்கு உகந்து அநுபவிக்கலாம்படி ஸப்தஸந்தர்ப்பரூபமானவற்றைச் சொன்னேன். உபாயத்தை - ஸித்தஸாதநத்தை. இதுவே - இத்திருவாய்மொழியே. போதுபோக்காக - காலக்ஷேபஸாதநமாக. ‘ப்ரீதிகாரிதகைங்கர்யமே புருஷார்த்தம்’ என்று கீழே அருளிச்செய்து ‘பலவேஷமிருக்கும்படி என்னென்னில்’ என்றால் வ்யாஹதமன்றோ? என்னில்;—பலத்தினுடைய ப்ரதமசரமாவதியை தர்சிப்பிக்கிறார் - பலவேஷம் இத்யாதி. அவாந்தர ப்ரதாந பல வேஷ மிருக்கும்படி யென்? என்னி லென்றபடி. யத்வா, கீழே பலஸ்வரூபம் சொல்லியிருக்க மீளவும் பலப்ரஸ்நம் உபாஸகரிற்காட்டில் ப்ரபந்நனுக்கு வாசிசொல்லுகைக்காக. அத்தை ஸங்காபூர்வகமாக அருளிச்செய்கிறார், பலவேஷம் இத்யாதி என்னவுமாம். ஜிதேந்த்ரியத்வம் - ப்ரதமாவதி, கைங்கர்யம் - சரமாவதி. இவனுக்கு விசேஷம் எது? என்ன, ஜிதேந்த்ரியத்வம் இத்யாதி. ஜிதேந்த்ரியத்வம் உபாயபலமென்றத்தைக்காட்டுவாராக ஜிஜ்ஞாஸாப்ரஸ்நத்தை உத்ப்ரேக்ஷிக்கிறார், எங்ஙனே இத்யாதி. எங்ஙனே- எங்ஙனே அருளிச்செய்தா ரென்றபடி. என்னைத்தீமனங்கெடுத்தாய் - என்னுடைய துஷ்டமான மநஸ்ஸைப் போக்கினாய். மருவி இத்யாதி - அநந்ய ப்ரயோஜநமாய்ப் பொருந்தி அடிமை செய்யும் நெஞ்சைத் தந்தாய். காதல் இத்யாதி - அபிநிவேசத்தைக் கடல்போலே ஸம்ருத்தமாய் விளையும்படி பண்ணின வர்ஷுகவலாஹகஸ்வபாவத்தை யுடைய திருமேனியை யுடைய நம்முடைய க்ருஷ்ணன். அதனிற்பெரிய

* திருவாய்மொழி ௩-௧௦-௫. † ஷை ௯-௪-௯. ‡ ஷை ௨-௭-௮. $ ஷை ௨-௭-௭.
¶ ஷை ௫-௩-௪. § ஷை ௧௦-௧௦-௧௦.

குலேகோள்ளும்படி பெருகினபடி சொல்லி, "என்னவாவறச் சூழ்ந்தாய்" என்று தம்திருவாயாலே அருளிச்செய்கையாலே ஶரீரஸம்பந்தத்தை யறுத்து தேஶவிஶேஷத்திலே கொண்டுபோய் ஸம்ஶ்லேஷித்துத் தலைக்கட்டினு னென்றதாயிற்று. ஆக, இவ்வைந்தர்த்தமுமே திருவாய்மொழியால் ப்ரதிபாதிக்கிறது; அல்லாதவை ஆநுஷங்கிகஸித்தமாய் வந்தது இத்தனை; எங்ஙனேயென்னில், – பரதத்த்வம் ஸ்ரீமந்நாராயணனென்றும், அநந்யார்ஹஶேஷத்வமே ஸ்வரூபமென்றும்; குணநுபவஜநித ப்ரீதிகாரிதகைங்கர்யமே புருஷார்த்தமென்றும், அஹங்கார மமகாரங்கள் தத்விரோதியேன்றும், தந்நிவ்ருத்திக்கும் கைங்கர்யஸித்திக்கும் ஸர்வஸுலபனுன ஸர்வேஶ்வரன் திருவடிகளே உபாய மேன்றும், ஜிதேந்த்ரியத்வம் தோடக்கமாகக் கைங்கர்யபர்யந்தமாக உபாய பலமென்றும் சொல்லிநின்றது. "𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌰𑍂𑌪𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍁𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌨𑌃। 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌯𑌂 𑌫𑌲𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇𑌸𑍍𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌿 𑌚 ॥ 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌸𑌕𑌲𑌾 𑌵𑍇𑌦𑌾𑌃 𑌸𑍇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌕𑌾𑌃। 𑌮𑍁𑌨𑌯𑌶𑍍𑌚 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍋 𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌵𑍇𑌦𑌿𑌨𑌃" (ப்ராப்யஸ்யப்ரஹ்மணோரூபம் ப்ராப்துஶ்சப்ரத்யகாத்மந:। ப்ராப்த்யுபாயம்பலம்ப்ராப்தேஸ்ததாப்ராப்திவிரோதிச। வதந்திஸகலாவேதாஸ்ஸேதிஹாஸபுராணகா:। முநயஶ்சமஹாத்மாநோ வேதவேதார்த்தவேதிந:) என்று ஸகல வேததாத்பர்யம் இவ்வர்த்தபஞ்சகமேன்னுமிடத்தைப் பேரியவங்கிப்புரத்துநம்பி திருவாய்மோழிக்கு வாக்யார்த்தமாக அருளிச்செய்தார்.

என்னவா, அவா - அபிநிவேசம். அதிற்காட்டில் பெரிய என் அபிநிவேசம். விளாக்குலேகொள்ளுகை - தன்னிலே அந்தர்ப்பவிக்கும்படி பண்ணுகை. உக்தார்த்த நிகமநம் - ஆக இத்யாதி. "பரிஹாஸ்ய த உந்மத்த்ய உந்மத்த வத் இதி" இதிப்ரகாரேண பரமதநிரஸநாஹேரப்யத்ர தர்ஶநாத் இதரநிஷேதம் எப்படி பண்ணுகிறது? என்ன, அல்லாதவை இத்யாதி. ஆநுஷங்கிக ஸித்தமாய் - அநுஷங்கஸித்தமாய். புத்திஸௌகர்யார்த்தம் விஸ்த்ருதம் ஸங்க்ருஹ்ணுதி - எங்ஙனேயேன்னில் இத்யாதி. அர்த்த பஞ்சகஸ்வரூப மிருக்கும்படி யெங்ஙனே? என்னி லென்றபடி. உக்தார்த்தத்துக்கு வங்கிப்புரத்து நம்பி யோஜனையை ஸம்வாதமாக அருளிச்செய்கிறார், ப்ராப்யஸ்ய இத்யாதி. 'இந்த ப்ரமாணம் வங்கிப்புரத்து நம்பி அருளிச்செய்தது' என்று அரும்பதத்திலே யிருக்கிறது. "ஹாரீத ஸம்ஹிதாயாம் தத்வத்ரயாதி ஜ்ஞாநம் ப்ரதிபாதநம்" இதி ப்ரமாணத் திரட்டி லிருக்கிறது. ஸகலவேத தாத்பர்யம்-இவ்வர்த்தபஞ்சக மென்னுமிடத்தை ப்ரதிபாதிக்கிற வழியாலே பெரியவங்கிப்புரத்துநம்பி திருவாய் மொழிக்கு வாக்யார்த்தமாக அருளிச்செய்தா ரென்று க்ரமேண அந்வயமாகவுமாம்; ஸகலவேததாத்பர்யம் இவ்வர்த்த பஞ்சகமென்னு மிடத்தையும், இவ்வர்த்த பஞ்சகமே திருவாய்மொழிக்கு வாக்யார்த்தமாகவும் வங்கிப்புரத்துநம்பி அருளிச்செய்தாரென்று யோஜிக்கவுமாம்.



ஶ்ரிய:பதியாய் அவாப்தஸமஸ்தகாமனாய் ஸமஸ்தகல்யாணகுணாத்மகனான ஸர்வேஶ்வரன், *"மாறிமாறிப்பலபிறப்பும்பிறந்து" என்கிறபடியே ஜந்மபரம்பரைகளிலே தோள்மாறித்திரிகிற இவரை இவ்வர்த்தபஞ்சகத்தையும் விஶததமமாக அறியவல்லராம்படி முதலடியிலே நிர்ஹேதுகமாக விஶேஷகடாக்ஷம்பண்ணியருளினான். நம்மாழ்வார் திருவாய்மொழி ப்ரபந்தத்தாலே த்வயவிவரணம் பண்ணுகிறார். இதில் முதலிட்டு மூன்றுபத்தாலே உத்தரார்த்தத்தை விவரிக்கிறார்; மேலிட்டு மூன்றுபத்தாலே பூர்வார்த்தத்தை விவரிக்கிறார்; மேலிட்டு மூன்றுபத்தாலே உபாயோபயோகியான குணங்களையும், ஆத்மாத்மீயங்களில் தமக்கு நசையற்றபடியையும், அவனோடு தமக்கு உண்டான நிருபாதிக ஸம்பந்தத்தையும் அருளிச்செய்தார்; மேலிற்பத்தாலே தாம் ப்ரார்த்தித்தபடியே பெற்றபடியைச் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

இதில் முதற்பத்தாலே "உயர்வறவுயர்நலமுடையவன் - அயர்வறுமமரர்களதிபதியவனவன் - துயரறுசுடரடிதொழுதெழென்மனனே" என்று ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய், ஸூரிபோக்யனானவன் திருவடிகளில் கைங்கர்யமே புருஷார்த்தமென்று நிர்ணயித்து, உக்தமான அர்த்தத்துக்கும் வக்ஷ்யமாணமான அர்த்தத்துக்கும் ப்ரமாணம் "உளன்சுடர்மிகுசுருதியுள்" என்று நிர்த்தோஷமான ஶ்ருதியே ப்ரமாணமென்றும், ஏவம்விதனானவன் ஆர்? என்ன, "வண்புகழ்நாரணன்" என்றும், "திருவுடையடிகள்" என்றும், "செல்வநாரணன்"

இப்படி திருமந்த்ரவிவரணத்வாநுகுணமஹாவாக்யார்த்தத்தை அருளிச்செய்தார் கீழ்; மேல் த்வயவிவரணரூபத்வாநுகுணமஹாவாக்யார்த்தத்தை அருளிச்செய்வாராக தாத்ருஶப்ரபந்த நிர்மாணஸாமர்த்ய ஹேதுத்வேந வக்தாவினுடைய ஜ்ஞாநாதிக்யத்தை மீளவும் அருளிச்செய்கிறார் - ஶ்ரிய:பதியாய் இத்யாதி. ஶ்ரீவிஷ்ணுபுராண ஶ்ரீராமாயண ஶ்ரீபாஞ்சராத்ரசாஸ்த்ரப்ரக்ரியயா க்ரமேணார்த்தபஞ்சகப்ரபத்தி பக்தி ப்ரயோஜநத்ரயாபிப்ராயேண ஶ்ரிய:பதித்ரயமென்றும் சொல்லுவர்கள்; அதவா, ஶ்ரிய:பதீத்யாதி வாக்யத்ரயம் அருளிச்செய்தது-மத்யேமத்யே வந்த ஶ்ரீவைஷ்ணவர்களுக்காகவாதல், மஹாபாஷ்யத்தில் பூர்வதிவஸோபந்யஸ்தாநுவாத பூர்வகமாக் திவஸத்ரயம் உபந்யஸிக்கையாகிற ஆஹ்நிக த்ரயப்ரக்ரியையாலேயாதல். திருவிருத்தம் திருவாசிரியம் திருவந்தாதியாகிற மூன்றும் திருமந்த்ரத்தினுடையவும் சரமஶ்லோகத்தினுடையவும் அர்த்த மென்னுமத்தை ஹ்ருதீகரித்துக்கொண்டு, திருவாய்மொழி த்வயத்தினுடைய அர்த்தமாயிருக்கிறதென்கிறார் - நம்மாழ்வார் இத்யாதி. யத்வா, கீழ் அர்த்தபஞ்சக யோஜனையை அருளிச்செய்து த்வயயோஜனையும் அருளிச்செய்கிறார் - நம்மாழ்வார் இத்யாதி என்னவுமாம். முதலிட்டிதி-த்வயார்த்தத்தை க்ரமத்திலே அருளிச் செய்யாதே உத்தரவாக்யார்த்தம் முன்னாக அருளிச் செய்தது - அநுஷ்டாநதசையில்போலே உபாயம் முற்பட்டு, பலம் பிற்படுகையன்றிக்கே வ்யுத்பத்தி தசையில் "ப்ரயோஜநஜ்ஞாநஸ்ய ப்ரவ்ருத்திஹேதுத்வாத்" இதிந்யாயேந பலம் முற்பட்டு உபாயம் பிற்படவேண்டுகையாலே; "ஸர்வஸ்யைவ ஹி ஶாஸ்த்ரஸ்ய கர்மணோ வாபி கஸ்யசித் । யாவத் ப்ரயோஜநம் நோக்தம் தாவத் தத் கேந க்ருஹ்யதே" என்னக் கடவதிறே. "கடல்ஞாலங்காக்கின்ற, மின்னு நேமியினாய்" என்றத்தைப்பற்ற, உபாயோபயோகியான குணங்களை என்றது." உன் கணோடெங்களிடையில்லை" என்றத்தைப்பற்ற, ஆத்மாத்மீயங்களில் தமக்கு நசையற்றபடி என்றது. "நாராயணன் நங்கள்பிரானவன்" என்றதைப்பற்ற, அவனோடு தமக்குஉண்டான இதி. தாம் ப்ரார்த்தித்தபடியே இத்யாதி - "தொழுதெழு" என்று ப்ரார்த்தித்தபடியே, "அவாவற்றுவீடுபெற்ற" என்று பெற்றபடியைச் சொல்லித் தலைக்கட்டுகிறா ரென்றபடி.

உக்தவிவரணம் - இதில் முதற்பத்தாலே இத்யாதி. அயர்ப்பிலன் இத்யாதி - அநந்யப்ரயோஜநனாய்ப் பொருந்தி மறப்பில்லாதவனாய் அக்ரமமாக குணங்களைச் சொல்லுவன், ஸம்ஶ்லேஷிப்பன், தலையாலே வணங்குவன்; இப்படி கரணத்ரயத்தாலும் அநுபவிப்பன். முதற்பத்தாலே பகவத்கைங்கர்யமே புருஷார்த்த மென்று அறுதியிட்டா ரென்றது -"உபக்ரமோபஸம்ஹாராவப்யாஸோபூர்வதா

---

* திருவாய்மொழி உ-கூ-அ.

என்றும் விசேஷித்து, "தொழுதெழென்மனனே" என்று உபக்ரமித்து *"அயர்ப்பிலனலற்று வன் தழுவுவன் வணங்குவனமர்ந்தே" என்று த்ரிவிதகரணங்களாலும் அடிமைசெய்து தலைக் கட்டுகையாலே பகவத்கைங்கர்யமே புருஷார்த்த மென்று அறுதியிட்டார். இரண்டாம்பத்தால் இந்தக் கைங்கர்யத்துக்கு விரோதியான ப்ரக்ருதிஸம்பந்தத்தையுங் கழித்து, †'ஒளிக்கொண்ட சோதியமாய் இக்கைங்கர்யத்துக்கு தேசிகரான அடியார்கள் குழாங்களை உடன்கூடுவது என்றுகொலோ?' என்று தாமும் ப்ரார்த்தித்து, ‡"நலமந்தமில்லதோர்நாடுபுகுவீர்" என்று பிறர்க்கும் உபதேசிக்கையாலே 'இவர்க்குப் பரமபதத்திலே நோக்காயிருந்தது' என்று ஈச்வரன் பரமபதத்தைக் கொடுக்கப் புக, $' "எம்மாவீட்டுத்திறமும்செப்பம்" என்று - எனக்கு அதில் ஒரு நிர்ப்பந்தமில்லை; ¶"தனக்கேயாகவெனைக்கொள்ளுமீதே" என்று - உனக்கேயாயிருக்கும் இருப்பே எனக்கு வேண்டுவது' என்று இப்புருஷார்த்தத்தை ஓடவைத்தார். மூன்றாம்பத்தால் இவர்க்குக் கைங்கர்யத்திலுண்டான ருசியையும் த்வரையையும் கண்ட ஈச்வரன் கைங்கர்யத்துக்கு ஏகாந்தமான திருமலையில்நிலையைக் காட்டிக்கொடுக்கக் கண்டு §"வழுவிலாவடிமை செய்யவேண்டும்நாம்" என்று பாரித்து, பாரித்தபடியே சரமவதசேஷத்வபர்யந்தமாக வாசிகமாக அடிமைசெய்து தலைக்கட்டுகிறார். நாலாம்பத்தால் இப்புருஷார்த்தத்துக்கு உபாயம் திருநாரணன் தாளென்றும், விரோதி **"குடிமன்னுமின்சுவர்க்கம்","எல்லாம் விட்டவிறுகலிறப்பு"என்று ஐச்வர்யகைவல்யங்களே விரோதி யென்றும் பிறர்க்கு உபதேசித்து, ††"ஐங்கருவிகண்டவின்பம் தெரிவரியவளவில்லாச்சிற்றின்பம்" என்று தாமும் அநுஸந்தித்தார். அஞ்சாம்பத்தால் இந்த இஷ்ட ப்ராப்திக்கும் அநிஷ்டநிவ்ருத்திக்கும் ‡‡"ஆறெனக்குநின்பாதமே சரணாகத்தந்தொழிந்தாய்"என்று தன்திருவடிகளையே உபாயமாகத் தந்தா னென்றார். அவன்தந்த உபாயத்தை வடகரை முன்

ஃபலம் | அர்த்தவாதோபபத்தீ ச லிங்கம் தாத்பர்யநிர்ணயே" என்கிறபடியே "தொழுதெழு" என்று உபக்ரமித்து "சொல்பணிசெயாயிரம்" என்று உபஸம்ஹரிக்கையாலும், "அயர்ப்பிலன்" இத்யாத்யப்யாஸத்தாலும், இந்தஅர்த்தம் ப்ரத்யக்ஷாதி ப்ரமாணாப்ராப்தத்வேந அபூர்வமாகையாலும், "தொழுதெழு" என்கிற இத்தால் பலார்த்தவாதங்கள் ஸித்திக்கையாலும், "தொழுதெழு" என்கிற இந்தவிதேயார்த்தத்திலே "உயர்வற வுயர்நலம்" இத்யாதிகள் ஹேதுகர்ப்பவிசேஷண மாகையாலே உபபத்தி யுண்டாகையாலும், முதற்பத்து பகவத்கைங்கர்யமே புருஷார்த்த மென்னு மிடத்தை ப்ரதிபாதிக்கிறத்திலே தத்பர மென்றபடி. இரண்டாம்பத்தால் இதி - ப்ரக்ருதிஸம்பந்தத்தையுங் கழித்து என்றது - "களிப்புங்கவர்வுமற்று" இத்யாதியைப்பற்ற. ஒளிக்கொண்ட சோதியமாய் - தேஜோரூபமான விக்ரஹத்தை யுடையோமாய். நலமந்தம் இத்யாதி-நன்மைக்கு முடிவின்றிக்கே யிருக்கிற நாட்டிலே புகவேண்டியிருப்பீர். ஓடவைத்தார் - நிஷ்கர்ஷித்தார். மூன்றாம்பத்தால் இதி - "ஈதேயானுன்னைக்கொள்வது" என்றத்தைப்பற்ற ருசி. "ஒல்லை" என்று த்வரை. நாலாம்பத்தால் இதி - குடிமன்னும் இத்யாதி - குடியிருப்புடைய ஸுகோத்தரமான ஸ்வர்க்கம். எல்லாம் இதி - ஆத்மவ்யதிரிக்தங்களையெல்லாம் விட்டவனாய் ஆத்மமாத்ரத்திலே பர்யவஸித்த மோக்ஷம். இறுகல் - ஸங்கோசம். இறப்பு - மோக்ஷம். ஐங்கருவி இத்யாதி - ஐந்து இந்த்ரியங்களும் பரிச்சேதித்தநுபவித்த ஐச்வர்யஸுகமும், இந்த இந்த்ரியங்களுக்கு க்ரஹித்து அநுபவிக்க அரிதாய் இந்த ஐச்வர்யஸுகத்திற்காட்டில் நித்யத்வாதிகளாலே அபரிச்சிந்நமாய் பகவதநுபவாபேக்ஷயா அத்யல்பமான ஆத்மாநுபவஸுகமும். வடகரைமுன்னிட்டு என்றது - "வைகல்" "பொன்னுலகாளீர்"

---

* திருவாய்மொழி க-ங-கo. † டை உ-ங-கo. ‡ டை உ-அ-ச. $ டை உ-கூ-க.
¶ டை உ-கூ-ச. § டை ங-ங-க. ** டை ச-க-கூ. †† டை ச-கூ-கo. ‡‡ டை ரு-எ-கo.

ளிட்டுப் பெரியபிராட்டியார் புருஷகாரமாக *“அலர்மேல்மங்கையுறைமார்பா! உன்னடிக்கீழ்மர்ந்துபுகுந்தேன்” என்று ஸ்வீகரித்தார் ஆறும்பத்தால். ஏழாம்பத்தால் இப்படி ஸித்தோபாயஸ்வீகாரம் பண்ணியிருக்கச்செய்தேயும் சடக்கெனப் பலியாமையாலே விஷண்ணராய் †“கடல்ஞாலங்காக்கின்றமின்னுநேமியினாய்” என்றுதொடங்கி உபாயோபயோகியான குணங்களைச் சொல்லிக் கூப்பிட ‡“கூராராழி வெண்சங்கேந்திவாராய்” என்று இவர் ஆசைப்பட்டபடியே வெள்ளைச்சுரி சங்கொடாழியேந்தி வந்தஇது மாநஸாநுபவமாத்ரமாய் பாஹ்யஸம்ஶ்லேஷம் கிடையாமையாலே விஶ்லேஷித்தபடியை அருளிச்செய்தார். எட்டாம்பத்தால் கீழ்ப்பிறந்த ஸம்ஶ்லேஷம் பாஹ்யஸம்ஶ்லேஷயோக்யமல்லாமையாலே $“உமருகந்துகந்தவுருவநின்னுருவமாகி உன்றனக்கன்பரானாரவருகந்தமர்ந்தசெய்கையுன்மாயை” என்று - இப்படி ஆஶ்ரிதாயீந ஸ்வரூபஸ்த்தித்யாதிகளையுடையவன் நமக்குத் தன்னைக்காட்டி மறைக்கைக்கு அடி ஆத்மாத்மீயங்களில் ஏதேனும் நசையுண்டாகவேணுமென்று அதிஶங்கைபண்ணி, அவற்றில் நசையற்றபடியை அருளிச்செய்தார்; ஒன்பதாம்பத்தால் “நீரென்றியஅதிஶங்கைபண்ணிப்படுகிறீர்இப்படி” என்று தன்னுடைய நிருபாதிகபந்தத்தையுங் காட்டி, “நான் நாராயணன்: ஸர்வஶக்தியுக்தன்: உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களையும் செய்து தலைக்கட்டுகிறோம்” என்று அருளிச்செய்ய, ¶“சீலமேல்லையிலான்” என்று அவனுடைய சீலகுணங்களிலே ஆழங்கால்பட்டார். பத்தாம்பத்தால் ஆழ்வாருடைய ஆற்றாமையைக் கண்டு திருமோகூரிலே தங்குவேட்டையாக வந்துதங்கி, இவருக்கு அர்ச்சிராதி கதியையுங் காட்டிக்கொடுத்து, இவர் ப்ரார்த்தித்தபடியே “என்னவாவறச்சூழ்ந்தாயே” என்று இவர் திருவாயாலே அருளிச்செய்யும்படி பேற்றைப்பண்ணிக்கொடுத்தபடியை அருளிச்செய்கிறார்.

களில் தூதப்ரேஷணமுகேந ஆசார்யர்களை முன்னிட்டு என்றபடி. விஷண்ணராய் என்றது - “உண்ணிலாவி”யில் ப்ரமேயம். கடல் இத்யாதி - கடல்சூழ்ந்த பூமியை ரக்ஷித்த உஜ்ஜ்வலமான திருவாழியையுடையயாய். கூரார் இத்யாதி - கூர்மைமிக்க திருவாழியையும் வெளுத்த சங்கத்தையும் ஏந்திக்கொண்டவராய். வெள்ளை இத்யாதி - வெளுத்த நிறத்தையும் சுரியையுமுடைய சங்கோடே திருவாழியையும் தரித்து. விஶ்லேஷித்தபடி என்றது-‘பாமருமூவுலகு’’ “ஏழையராவி”களைப் பற்ற. கீழ்ப்பிறந்த ஸம்ஶ்லேஷமென்றது - “ஆழியெழச் சங்கு” “கற்பாரிராமபிரான்”களைப் பற்ற. உமருகந்து இத்யாதி - உனக்கு ஶேஷபூதரானவர்கள் எப்போதும் உகந்த ரூபமே உனக்கு ரூபமாய் உன்னளவிலே அன்பையுடையரானவர்கள் ஆகரித்து அநந்ய ப்ரயோஜநமாக அடிமை செய்கைக்கு ஈடாயிருக்கிற உன்னுடைய சேஷ்டிதங்களை. அவற்றில் நசையற்றபடியை என்றது - “உங்களோடெங்களிடையில்லை” என்றத்தைப் பற்ற. ஒன்பதாம்பத்துக்கு, ஓராயிரத்திலே நோக்கு. என்றிய - எதுக்காக. திருமோகூர் இத்யாதிக்கு - தாளதாமரையிலே நோக்கு. அர்ச்சிராதி இத்யாதிக்கு - சூழ்விசும்பிலே நோக்கு. என்னவாவறச்சூழ்ந்தாய் - என் அபிநிவேஶங்கெடும்படி ஸம்ஶ்லேஷித்தாய்.

ஆக, முதற்பத்தாலே உத்தரவாக்யகத ப்ரதம த்விதீயபதார்த்தம் சொல்லப்படுகிறது; இரண்டாம்பத்தால் நமஶ்ஶப்தார்த்தம்; மூன்றாம்பத்தால் இந்தக் கைங்கர்யம் பாகவதஶேஷத்வபர்யந்தமென்று நிஷ்கர்ஷித்து நிஷ்க்ருஷ்டார்த்தாநுகுணமாக ஸ்வாநுஷ்டாநம் சொல்லுகிறது; ஆக, கீழ் மூன்றுபத்தும் உத்தரகண்டார்த்தம். நாலாம்பத்தால் பூர்வகண்டஸ்த்த பதத்வயார்த்தமும், ஐந்தாம்பத்தால் க்ரியாபதார்த்தமும், ஆறாம்பத்தால் உபாயத்தினுடைய ஸாங்கஸ்வாநுஷ்டாநமும் சொல்லுகையாலே, மேல் மூன்றுபத்தாலும் பூர்வகண்டார்த்தம்; மேல் நாலுபத்தும் இதுக்கு ஶேஷமென்றபடி.



* திருவாய்மொழி ௬-௰-௰. † ஷை ௭-௧-௨. ‡ ஷை ௬-௯-௧. $ ஷை ௮-௧-௬. ¶ ஷை ௯-௩-௧௧.

ஈடு—மஹாப்ரவேஶம் - மூன்றும் ஶ்ரியஃபதி.

ஶ்ரியஃபதியாய், அவாப்தஸமஸ்தகாமனுய், ஸமஸ்தகல்யாணகுணுத்மகனுன ஸர்வேஶ்வரன், "மாறிமாறிப்பலபிறப்பும்பிறந்து" என்கிறபடியே ஜந்மபரம்பரைகளிலே தோள்மாறி நித்ய ஸம்ஸாரியாய்ப்போந்த இவரை *"அடியையடைந்துள்ளந்தேறி யீறிலின்பத்திருவெள்ளம்யான் மூழ்கினன்" என்று தம்திருவாயாலே அருளிச்செய்யலாம்படி முதலடியிலே விஶேஷகடாக்ஷத்தைப்பண்ணியருளினுன். முதல்தன்னிலே சித்ஸ்வரூபமாதல் அசித்ஸ்வரூபமாதல் ஈஶ்வரஸ்வரூபமாதல் அறியாதே யிருக்கிற இவர்க்கு அசிதம்ஶம் த்யாஜ்யமென்னுமிடத்தையும், சேதநன் உபாதேயனென்னுமிடத்தையும், தான் உபாதேயதம னென்னுமிடத்தையும் அவன்தானே காட்டிக்கொடுக்கக் கண்டு, அவனேட்டை யநுபவத்துக்கு இத்தேஹஸம்பந்தம் விரோதியாயிருக்கையாலே, த்வதநுபவவிரோதியான இத்தேஹஸம்பந்தத்தை யறுத்துத் தந்தருளவேணு மென்று அர்த்தித்தார் திருவிருத்தத்தில்; ஸம்ஸாரஸம்பந்தமற்று ஒருதேஶவிஶேஷத்திலே போனுல் அநுபவிக்கக்கடவ தன்னுடைய மேன்மையையும் நீர்மையையும் வடிவழகையும் பரப்பற ஏழுபாட்டாலே அநுபவிக்கலாம்படி இங்கேயிருக்கச்செய்தே ஒருதஶாவைஶத்யத்தைப் பண்ணிக்கொடுக்க அவ்வழகை யநுபவித்தார் திருவாசிரியத்தில்; இப்படி அநுபவித்த விஷயத்திலே விஷயாநுரூபமான ஆசை கரைபுரண்டபடியைச் சொன்னுர் திருவந்தாதியில்; ஆமத்தையறுத்துப் பசியைமிகுத்துச் சோறிடுவோரைப்போலே தமக்கு ருசியைப்பிறப்பித்த படியையும், அந்த ருசி தான் பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளாய்க்கொண்டு பக்வமான படியையும், பின்பு ப்ரக்ருதி ஸம்பந்தமும் அற்றுப் பேற்றோடே தலைக்கட்டின படியையும் சொல்லுகிறுர் திருவாய்மொழியில். கைங்கர்யமநோரதம்பண்ணிக்கொண்டு வரக் கொள்ளக் கைகேயி "ராஜ்ஞ" "ராஜந்" என்ற சொற்கேட்டு ஸ்ரீபரதாழ்வான் பட்டபாடுபோலே யிருக்கிறதாயிற்று, திருவிருத்தத்தில் நிலை; அவன் திருச்சித்திரகூடத்திலே பெருமாள் எழுந்தருளியிருந்தா ரென்று கேட்டு "ஸஹிஸ்ருஸுஷீவெஷாரும்" (ஏபிஶ்சஸசிவைஸ்ஸார்த்தம்) என்கிறபடியே என்னுேருவன்கண்ணில் கண்ணீர் பொறுக்கமாட்டாதவர் இத்தனைபேர்ஆற்றுமைகண்டால் மீளாதொழிவரோ? "ஶிரஸாயாசிதோமயா" (ஶிரஸாயாசிதோமயா)-என் அபிமதம் தந்தலையாலே யிரந்துசெய்யக்கடவஅவர், நான்

ஸ்ரீபரதாழ்வானை த்ருஷ்டாந்தீகரிக்கைக்காகப் புநஶ்ச ப்ரபந்த சதுஷ்டயத்துக்கும் அர்த்தம் அருளிச்செய்வாராக மீளவும் வக்த்ருவைலக்ஷண்யத்தை அருளிச்செய்கிறுர் - 'ஶ்ரியஃபதியாய்' இத்யாதி. யத்வா, இப்ப்ரபந்த சதுஷ்டயத்திலும் இவர்க்கு உண்டான தசைக்கு ஸ்ரீபரதாழ்வானுடைய தசையை த்ருஷ்டாந்தீகரிக்கிற முகேந திருவாய்மொழியினுடைய பக்தியோக ப்ரதிபாதகபரத்வத்தை அருளிச்செய்வாராகத் தாத்ருஶ ப்ரபந்தநிர்மாண ஸாமர்த்ய ஹேதுத்வேந மீளவும் வக்தாவினுடைய ஜ்ஞாநாதிக்யரூப வைலக்ஷண்யத்தை அருளிச்செய்கிறுர் - ஶ்ரியஃபதியாய் இத்யாதி என்னுதல். சேதநனுக்கு உபாதேயத்வம் - 'அடியேன்' என்றதைப் பற்ற. தன்னுடையமேன்மை இத்யாதிக்கு - முதற்பாட்டிலே நோக்கு. பரப்பற - ஸங்க்ரஹமாக. "ஆமத்தையறுத்து" என்றுதொடங்கிச் சொன்ன த்ருஷ்டாந்தத்ரயத்துக்கும் அடைவே தார்ஷ்டாந்திக த்ரயத்தைக் காட்டுகிறுர், தமக்கு ருசியை என்று தொடங்கி. ஆமத்தையறுத்து என்றதுக்கு - தார்ஷ்டாந்திகம் மயர்வறமதிநலமருளுகை யென்று கண்டுகொள்வது. இப்ப்ரபந்த சதுஷ்டயத்திலும் இவர்க்கு உண்டான அவஸ்த்தைகள் ஸ்ரீபரதாழ்வானுடைய அவஸ்த்தைகள்போலே யென்கிறுர், கைங்கர்ய மநோரதம் இத்யாதி. "ராஜந்" என்ற சொற்கேட்டு -

---

** திருவாய்மொழி உ-கூ-அ.*

என்தலையாலேஇரந்த கார்யத்தை மறுப்பரோ? "ப்ராதுஃ" (ப்ராதுஃ) - நான் தம்பின்பிறந்தவனல்லேனோ? "ஶிஷ்யஸ்ய" - (சிஷ்யஸ்ய) பின்பிறந்தவனென்று கூறுகோள்ள இருக்கிறேனோ? மந்த்ரஸம்பந்தமும் தம்மோடேயன்றோ? "தாஸஸ்ய" (தாஸஸ்ய) - ஶிஷ்யனாய் க்ரயவிக்ரயார்ஹனன்றிக்கே இருக்கிறேனோ? "ப்ரஸாதம் கர்த்துமர்ஹதி" (ப்ரஸாதம் கர்த்துமர்ஹதி) - ஆனபின் என்பக்கல் ப்ரஸாதத்தைப்பண்ணியருளாரோ? என்று மநோரதித்துக்கொண்டு போகிறபோதைதரிப்புப்போலே,திருவாசிரியத்தில்நிலை; ஸ்ரீநந்திக்ராமத்திலே "ராமாகமநகாங்க்ஷயா" (ராமாகமநகாங்க்ஷயா) என்கிறபடியே பதினாலாண்டும் ஆசைவளர்த்துக்கொண்டிருந்தாற்போலே யிருக்கிறது, திருவந்தாதியில்; மீண்டெழுந்தருளித் திருவபிஷேகம் பண்ணியருளி, அவனும் ஸ்வரூபாநுரூபமான பேறு பெற்றாற்போலேயிருக்கிறது; இவர்க்குத் திருவாய்மொழியில் பேறு.

திருவாய்மொழிக்காக ஸங்க்ரஹம் முதல்திருவாய்மொழி; முதல்திருவாய்மொழியினுடைய ஸங்க்ரஹம் - முதல் மூன்றுபாட்டு; முதல்மூன்றுபாட்டினுடைய ஸங்க்ரஹம் - முதற்பாட்டு; முதற்பாட்டினுடைய ஸங்க்ரஹம் - முதலடி; என்போலேன்னில்; - "ருசோ யஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநி ச । ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்த்தம் யச்சாந்யதபி வாங்மயம்" (ருசோயஜூம்ஷிஸாமாநி ததைவாதர்வாணநிச | ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்த்தம் யச்சாங்யதபிவாங்மயம்) என்கிறபடியே ஸகலவேதஸங்க்ரஹம் திருமந்த்ரமாய் அதினுடையஸங்க்ரஹம் ப்ரணவமாய் அதினுடைய ஸங்க்ரஹம் அகாரமானாற்போலே. மற்றும் பாரதராமாயணாதிகளையும் ஸங்க்ஷேப விஸ்தரங்களாலே செய்தார்களிறே.

"உத்திஷ்ட்டோத்திஷ்ட்ட கிம் ஶேஷே ராஜந் ப்ராதுர்மஹாயஶஃ । தஸ்யா நஹி ஶோசஸி வீரஸ்ய ...ஶா" என்கிற சொல்லைக் கேட்டு. அயம் ஶ்லோகோऽயோத்யாகாண்டே மாதுலகுலாதாகதம் பரதம்ப்ரதி கைகேய்யுக்திஃ. மறுப்பரோ - திரஸ்கரிப்பரோ. கூறு - பாகம். மந்த்ரஸம்பந்தமும் தம்மோடேயன்றோ இதி-அத்ர வஸிஷ்ட்டர் பெருமாளுக்கு மந்த்ரங்களை உபதேஶித்தார், பெருமாள் கநிஷ்டர்களுக்கு உபதேஶித்தா ரென்று கண்டுகொள்வது. ஏபிஸ்சேத்யாதி - அயம்ஶ்லோகோऽயோத்யாகாண்டே. இது பெருமாள் ஸமக்ஷத்திலே விண்ணப்பம் செய்ததே யாகிலும் வழியிலும் நினைவு இதுவாகையாலே மநோரதரூபமாக வ்யாக்யாநம் உபபந்நம். "ஜடிலம் சீரவஸநம் ப்ராஞ்ஜலிம் பதிதம் புவி । நந்திக்ராமேऽவஸத்வீரோ ராமாகமநகாங்க்ஷயா" இதி ஸங்க்ஷேபே. அவனும் - ஸ்ரீபரதாழ்வானும்.

முதற்பாட்டுக்கு முதலடி ஸங்க்ரஹமாம்போது விக்ரஹவிபூதிகள் எங்கே சொல்லுகிறது? என்ன, விக்ரஹவிபூதிகள் ஆநந்தாவஹங்களாகையாலே 'நலம்' என்று ஆநந்தம் சொன்னபோதே விக்ரஹவிபூதிகளும் அர்த்தாத்ஸித்தங்கள்.



திருவாய்மொழியின் ஓரோதசகார்த்த ஸங்க்ரஹமாகப் பெருமாள்கோயில்
அழகியமணவாளச்சீயர் அருளிச்செய்த

த்ரவிடோபநிஷத் ஸங்கதியின் உபோத்காதம்.

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

வேதாந்ததேசிகன் அருளிச்செய்த

த்ரவிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவலியின் உபோத்காதம்.

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ॥

[illegible] ||

[illegible] ||

[illegible] ||

ஸ்ரீமந் மணவாளமாமுனிகள் அருளிச்செய்த
திருவாய்மொழி நூற்றந்தாதியின் தனியன்கள்.

அல்லும்பகலும் அனுபவிப்பார்தங்களுக்குச்
சொல்லும்பொருளும் தொகுத்துரைத்தான் — நல்ல
மணவாளமாமுனிவன் மாறன்மறைக்குத்
துணையா நூற்றந்தாதிதான்.

மன்னுபுகழ்சேர் மணவாளமாமுனிவன்
தன்னருளால் உட்பொருள்கள்தம்முடனே — சொன்ன
திருவாய்மொழி நூற்றந்தாதியாம் தேனை
ஒருவாதருந்து நெஞ்சே! உற்று.



ஸ்ரீ

திருவாய்மொழி.

முதற்பத்து.

முதல்திருவாய்மொழி—உயர்வற.

முதற்பாட்டு.

உயர்வறவுயர்நலமுடையவன் யவனவன்
மயர்வறமதிநலமருளினன் யவனவன்
அயர்வறுமமரர்களதிபதி யவனவன்
துயரறுசுடரடி தொழுதெழென்மனனே.

ஆறாயிரப்படி.

(உயர்வறவுயர்நலம்.) அப்ராக்ருதஸ்வாஸாதாரண திவ்யரூபபூஷணாயுத மஹிஷீபரிஜந ஸ்தாந விஶிஷ்டனாய், நிகிலஜகதுதயவிபவாதிலீலனாயிருந்த பரமபுருஷனை உள்ளபடியே ஆழ்வார் தாம் தம்முடைய திருவுள்ளத்தாலே அநுபவித்து அவ்வநுபவஜநிதமான நிரவதிகப்ரீதியாலே அவனை அநுபவித்தபடியே பேசுகிறார்.

அஶேஷதோஷப்ரத்யநீகமாய், "தேயேஶதம்" இத்யநுக்ரமத்தினாலே நிரதிஶயதஶாஶிரஸ்கமான: அப்யஸ்யமாநமாயிருந்த ஆநந்தாத்யஸங்க்யேய கல்யாணகுண மஹோததியாய், இந்த ஆநந்தாதி கல்யாணகுணங்களையுடையனான தான் மேலே பொன்னுமாய் நாறினாற்போலே நிர்ஹேதுகமாக எனக்குத் தன்திறத்தில் அஜ்ஞாநகந்தமில்லாததொருபடி தன்னை உள்ளபடி அறிவித்துத் தன்திருவடிகளிலே நிரவதிகபக்தியையுண்டாக்கின இம்மஹாகுணத்தை யுடையனாய், இந்தக்கல்யாணகுணங்களையுடையனான தன்னை ஸ்வபாவதஏவ நிரஸ்த ஸமஸ்த தோஷராய் அஸ்கலிதஜ்ஞாநராயிருந்துள்ள ஶேஷ ஶேஷாஶந வைநதேய ப்ரப்ருத்யஸங்க்யேய திவ்யபுருஷர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிற பரமௌதார்யத்தை யுடையனாயிருந்த எம்பெருமானுடைய ஆஶ்ரிதஜநஸமஸ்தது:காபநோதந ஸ்வபாவமான திருவடிமலர்களிலே ஸர்வதேஶ ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வஶேஷவ்ருத்தியையும் பண்ணி உஜ்ஜீவியென்று தம்முடைய திருவுள்ளத்தைக்குறித்து அருளிச்செய்கிறார்.

ஒன்பதினாயிரப்படி.

முதற்பாட்டுக்குக் கருத்து – அகிலஹேயப்ரத்யநீக கல்யாணகுணனாய், குணங்களுக்கு நிறங்கொடுக்க வற்றான திவ்யதேஹயுக்தனாய், ஶ்ரிய:பதியாய், ஸௌந்தர்யாதிகளுக்கு போக்தாக்களான அயர்வறு மமரர்க ளதிபதியா யிருந்துவைத்துத் தன்னுடைய நிரவதிகக்ருபையாலே என்னுடைய தோஷாகரதையைப்பாராதே என்னுடைய அஜ்ஞாநமெல்லாம் நீங்கும்படி ஸ்வவிஷய

பக்திரூபஜ்ஞாநத்தை நிர்ஹேதுகமாக ஸாதரனாய்க்கொண்டு தந்தருளினான்; ஆனபின்பு, அவன் திருவடிகளிலே அடிமைசெய்து உஜ்ஜீவிப்போமென்று திருவுள்ளத்தோடே கூட எம்பெருமானுக்கு அடிமைசெய்கையிலே ப்ரவ்ருத்தராகிறார். இத்தால், ப்ரபந்தாரம்பத்திலே வஸ்துநிர்த்தேச நமஸ்காரங்களும் பண்ணப்பட்டனவாய் விழுந்தது.

[உயர்வற வுயர்நலமுடையவன்] - ஆநந்தவல்லியிற் சொல்லுகிறபடியாலே ஓரோ குணத்தின் ஸந்நிதியிலே வ்யதிரிக்த ஸகலார்த்தகதமான எல்லாப்படியாலுமுள்ள எல்லாவுயர்த்தியும் ஆதித்ய ஸந்நிதியில் நக்ஷத்ராதிகளைப்போலே யுண்டாய், அவற்றை இல்லையென்னலாம்படியாய், அவைதனக்கு அவதியுண்டாயிருக்கை யன்றியே காலதத்த்வமுள்ளதனையும் அபிவ்ருத்தியாநின்றாலும் மேன்மேலென உயர்ந்து காட்டாநிற்பனவான கல்யாணகுணங்களை யுடையான். நலமென்றவிடத்தில், ஏகவசநம் - குணஜாதிபரம். நலமாவது - குண விபூத்யாதிகளை அநுபவிக்கையாலே வந்த ஆநந்தகுணமாகவுமாம்; ஆநந்தமென்று ஆநந்தஶ்ருதிகளில் ப்ரஸித்தம். குணநிரபேக்ஷமாகத் தானே விலக்ஷணமாய், தன்னைப்பற்றிக் குணங்கள் சிறம்பெறும்படியான திவ்யாத்மஸ்வரூபத்தினுடைய உபநிஷத்ப்ரஸித்தியைச் சொல்லிற்றாகவுமாம். [அவன்]-முன்பு சொன்ன நன்மைகளிற்காட்டில் மேற்பட்டதொரு நன்மை சொல்லுகைக்காக அவனென்று நிர்த்தேசிக்கிறது. இப்படியே மேல் யவனவன்களுக்கும் பொருள். 'அவன்' என்று பலகால் சொல்லுகிறதுக்குக் கருத்து - இப்பாட்டில் ப்ரதிபாதிக்கிற குணங்கள் தனித்தனி ஸர்வாதிக்யஸாதகங்களென்று தோற்றுகைக்காக. [மயர்வற]—ஸ்வவிஷயத்திலே எனக்கு அநாதியாயிருக்கிற அஜ்ஞாநமெல்லாம் போம்படி. [மதிநலம்] - பக்திரூபாபந்நஜ்ஞாநம். [அருளினன்] - இத்தலை நன்மை தீமைபாராதே நிர்ஹேதுகமாகத் தன்க்ருபையாலே தந்தருளினான். எனக்குத் தந்தருளினானென்னாதொழிவானென்? என்னில்;— "ஸுஸஞெளவஸஹவதீ" என்று சொல்லுகிறகணக்காலே பகவத்விஷயீகாரத்துக்குமுன்பு தம்மை அஸத்கல்பராக நினைத்திருக்கையாலே. [அயர்வறு மமரர்களதிபதி] - பகவத்ஜ்ஞாநத்துக்கு விச்சேதமில்லாமை ஸ்வபாவமாய், அவ்வநுபவத்துக்கு ஒருநாளும் விச்சேதமின்றிக்கே யிருக்கிற நித்யஸூரிகளுக்கு ஸ்வாமி. 'அமரர்கள்' என்கிற பஹுவசநத்துக்கு முக்யார்த்தத்வம் ப்ராப்தமாகையால் அவர்கள் தங்களுக்கு எண்ணில்லை யென்கிறது. [துயரறுசுடரடி] - துயரறும் ஸ்வபாவமாய், அப்ராக்ருத தேஜோரூபமான திருவடிகளை. திருவடிகளுக்குத் துயருண்டோ? என்னில்;— ஆஶ்ரிதருடைய துயர் திருவடிகளுக்குத துயர். அவனைத் தொழுதெழென்னாதே திருவடிகளைத் தொழுதெழு என்பானென்? என்னில்;— ஸ்தநந்த்யப்ரஜை முலையிலே வாய்வைக்குமாபோலே அடியானவனுக்குத் திருவடிகளிலே தலைமடுக்கை முறைமையாகையாலே. [தொழுதெழு] - அடிமையாலல்லது செல்லாத தன்மையா யிருக்கச்செய்தே அநாதிகாலம் அடிமையிழந்து உருவி இல்லாதார்கணக்காயிருக்கிற நீயே எம்பெருமானுடைய திருவடிகளிலே அடிமைசெய்து உஜ்ஜீவி. எம்பெருமானோடு ப்ரத்யாஸந்நமான திருவுள்ளத்தோடே தமக்கு ஸம்பந்தத்தை ஆசைப்பட்டு, 'என்மனனே' என்கிறார்.

'ஸந்மாத்ரமே வஸ்து'என்கிற வாதமும், 'ஜீவபரர்களுடைய பேதம் ஔபாதிகம்; மோக்ஷதசையில் எல்லாம் ஒன்று' என்கிற வாதமும் இவர்க்கு ஸித்தாந்த மன்றென்னுமிடம் வ்யக்தம் இப்பாட்டில்; பராமவர்களுக்கு விருத்தமாகையால். இப்பாட்டில் 'அவன், அவன்' என்கிற மூன்று பர்யாயத்திலும் 'துயரறுசுடரடி தொழுதெழென்மனனே' என்று வாக்யபேதம்பண்ணி யோஜிப்பர். "நமோநமஃ" இத்யாதி ஶ்லோகவத் ப்ரதிவிசேஷணம் ஈடுபடுகையாலே.

பன்னீராயிரப்படி.

இத்திருவாய்மொழிக்கு ஸங்க்ரஹமான முதற்பாட்டில் பரத்வப்ரதாநோபபாதகமான நிரவதிக கல்யாணகுணயோகத்தையும் நிர்ஹேதுக உபகாரகத்வத்தையும் நித்யஸூரிநிர்வாஹகத்வத்தையும் நித்யமங்கள விக்ரஹயோகத்தையு முடைய ஸர்வேஶ்வரன் திருவடிகளிலே நிரந்தர ஶேஷவ்ருத்தியைப் பண்ணென்று தம்நெஞ்சை நியோகிக்கிருர்.

(ஆநந்தவல்லியிற் சொல்லுகிற கணக்கிலே), உயர்வு – அல்லாத உயர்த்திகள், அற – அஸத்கல்பமாம்படி, உயர் - அவாங்மநஸகோசரமாய் உயர்ந்த, நலம் - ஆநந்தத்தை, உடையவன் - உடையனாக, யவன் அவன் – ப்ரமாணப்ரஸித்தனானவன் யாவனொருவன்,—மயர்வு - (ஸம்ஶயவிபர்யயாதி ரூபமான) அஜ்ஞாநம், அற - நசிக்கும்படி, மதிநலம் - ஸ்வாபாவிகஜ்ஞாந ப்ரேமங்களை, அருளினன் - (தன் அருளாலே) தந்தருளினவனாக, யவன் அவன்-"வஜ்ஞாவஷஸ்ரா தஸ்தாவஸாணீ" என்கிற ப்ரஸித்தியை யுடையவன்) யாவனொருவன்,—அயர்வு - விஸ்மரணப்ரஸங்கம், அறும் - இல்லாத, அமரர்கள் - (நிரந்தராநுபவயுக்தரான) நித்யஸூரிகளுக்கு, அதிபதி - நிரவதிகஶேஷியானவன், யவன் - யாவனொருவன்,—அவன் - அவனுடைய, துயரறு - ஸமாஶ்ரிததுஃகநிவர்த்தகமாய், சுடர் - நிரந்தரௌஜ்ஜ்வல்யவிஶிஷ்டமான, அடி - திருவடிகளைக் குறித்து, தொழுது - ("வஜ்ஞாஜ்ஞிவடிாஃ" என்கிறபடியே) ஶேஷத்வாநுரூபவ்ருத்தியைப் பண்ணி, என்மனனே - என்மநஸ்ஸே! எழு - நித்யோச்ச்ராய ரூபமான உஜ்ஜீவநத்தைப் பெறு (என்று தம்முடைய திருவுள்ளத்தைக் குறித்து அநுபாஷித்தருளினாராயிற்று.)

இதில் முதலடியில் - 'நலம்' என்று ஆநந்தகுணத்தையாதல், ஆநந்தஹேதுவாக உபநிஷத்திற்சொன்ன யுவத்வாதிகுண விபூதிகளையாதல் சொல்லுகிறது. இரண்டாமடியில் - 'நலம்' என்று பக்திரூபஸ்நேஹத்தைச் சொல்லுகிறது. இப்பாட்டில் மூன்றடியிலும் 'யவன்' என்கிற ஶப்தத்தோடே 'அவன்' என்று தொடங்கி, நாலாமடியைத் தனித்தனியே அந்வயித்து, மூன்று வாக்யமாகவும் சொல்லுவர்; முதலடியில் யவனோடே 'அவன்' என்று தொடங்கி இரண்டாமடியைக் கூட்டி வாக்யமாக்கி, அவ்விரண்டாமடிதன்னை ஆவர்த்தித்து யச்சப்தத்தாலே நிர்த்தேசித்து அத்தை 'அவன்' என்று தொடங்கி மூன்றாமடியோடே கூட்டி, அதுதன்னையும் ஆவர்த்தித்து 'யவன்' என்று நிர்த்தேசித்து அத்தோடே 'அவன்' என்று தொடங்கி நாலாமடியிலே வினைமுடித்து வாக்யைகவாக்யமாகவும் சொல்லுவர்; அங்ஙனன்றியே, "ஸயஶ்சாயம்வஷேயஶ்சாஸாவாதித்யே ஸஏகஃ" என்கிற கணக்கிலே 'யவனவன்' என்று யச்சப்தார்த்தமாய் ப்ரஸித்தியைக் காட்டி, அத்தை 'அவன்' என்று தொடங்கி நாலாம்பாதத்தாலே பராமர்ஶித்து முடிக்கையாலே ஏகவாக்யமாகவும் சொல்லுவர். இப்பாட்டு ஸர்வஶாஸ்த்ரோபப்ரும்ஹணமான இப்ப்ரபந்தஸங்க்ரஹமாகையாலே ஸகலஶாஸ்த்ரஸங்க்ரஹரூபமான மந்த்ரரஹஸ்யார்த்ததாத்பர்யத்தை ப்ரகாசிப்பிக்கிறது. எங்ஙனேயென்னில்,—'உயர்நலமுடையவன்' என்கிற ஸர்வாதிக ஶேஷித்வத்தாலே ப்ரதமபதார்த்தமான அநந்யார்ஹஶேஷத்வ ப்ரதிஸம்பந்தித்வத்தையும், 'மதிநலமருளினன்' என்று க்ருபாகார்யமாகச் சொன்ன உபகாரகத்வத்தாலே மத்யமபதார்த்தமான உபாயபாவத்தையும், 'அமரர்களதிபதி' என்று நித்யஸூரிஸேவ்யத்வத்தாலே சரமபதார்த்தமான ப்ராப்யத்வத்தையும், 'தொழுதெழு' என்கையாலே சதுர்த்த்யர்த்தமான கைங்கர்யத்தையும் சொல்லிற்றாயிற்று.

இருபத்திநாலாயிரப்படி.

முதற்பாட்டு. ஸ்ரீயப்பதியாய் ஸமஸ்தகல்யாண குணாத்மகனாய் அக்குணங்களுக்கு ப்ரகாஶகமான திவ்யவிக்ரஹத்தையுடையனாய் அவற்றையநுபவிக்கும் நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனாயிருக்கிற இருப்பைத் தன்னுடைய நிர்ஹேதுகக்ருபையினாலே அநுபவயோக்யமாம்படி நமக்கு பக்திரூபாபந்நஜ்ஞாநத்தைத் தந்தருளினான்; அவன் திருவடிகளிலே அடிமைசெய்து உஜ்ஜீவிக்கப்பாரென்று தம்திருவுள்ளத்தைக் குறித்து அநுஸந்திக்கிறார்.

[உயர்வு] - உயர்த்தி; அதாவது—தன்னையொழிந்த ஸகலபதார்த்தங்களிலும் எல்லாப்படியாலுமுண்டான எல்லாவுயர்த்தியையுஞ் சொல்லுகிறது. [அற]-ஆதித்யஸந்நிதியிலே நக்ஷத்ராதிகளைப்போலே யுண்டாய், அவற்றை இல்லையென்னலாம்படி யிருக்கை; “ஜ்யோதீம்ஷ்யாதித்யவத்” இத்யாதி. [உயர்] - உயராநிற்கை. காலதத்த்வமுள்ளதனையும் அநுபவியாநின்றாலும் அவ்வருகாய்க்கொண்டு வாங்மநஸங்களால் பரிச்சேதிக்கவொண்ணாதிருக்கை. அநுபூதாம்ஶம் அல்பமாய் அநநுபாவ்யாம்ஶமே விஞ்சியிருக்கை. [நலம்] - குணவிபூத்யாதிகளை அநுபவிக்கையால் வந்த ஆநந்தகுணம்; ஏகவசநம் - ஜாத்யபிப்ராயமாய் குணஜாதிபரமாகவுமாம்; ஆநந்தாவஹமான குணவிபூத்யாதி பரமாகவுமாம். நலமென்கையாலே - கட்டடங்க நன்மையேயாயிருக்கை. [உடையவன்] - ஆகந்துகமன்றிக்கே ஸ்வரூபாநுபந்தியாயிருக்கை. இதுக்கு ஆளவந்தார் “ஸ்வாபாவிகாநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாணகுணகணௌக” என்று அருளிச்செய்வர். ‘குத்ருஷ்டிகளுடைய மிடற்றைப் பிடித்தாற்போலே நலமுடையவன் என்று ஆழ்வார் அருளிச்செய்தபடி கண்டாயே’ என்று பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வான் பணித்தான். [யவன்] - இக்குணங்களுக்கு ஆஶ்ரயமான திவ்யாத்மஸ்வரூபத்தினுடைய ப்ரஸித்தியைச் சொல்லுகிறது. இந்தக்குணங்கள்தானும் நிறம்பெறும்படியான ஸ்வரூபவைலக்ஷண்யத்தைச் சொல்லிற்றாகவுமாம். [அவன்] - முன்பு சொன்ன நன்மைகளிற்காட்டில் மேற்பட்டதொரு நன்மை சொல்லுகைக்காக ‘அவன்’ என்று உத்தேஶிக்கிறது. [மயர்வு] - அஜ்ஞாநம்; இத்தால், ஜ்ஞாநாநுதய அந்யதாஜ்ஞாந விபரீதஜ்ஞாந ரூபமான அஜ்ஞாநத்தைச் சொல்லுகிறது. [அற] - ஸவாஸநமாகப் போகும்படி. [மதிநலம்] - மதியென்று - ஜ்ஞாநம், நலமென்று - பக்தி: பக்திரூபாபந்நஜ்ஞாந மென்றபடி [அருளினன்] - இத்தலையில் நன்மை தீமை பாராதே, நிர்ஹேதுகக்ருபையாலே தந்தருளினான்; முலைக்கடுப்பாலே தரையிலே பீச்சுமாபோலே. எனக்குத் தந்தருளினானென்னாதொழிந்தது - பகவத்விஷயீகாரத்துக்குமுன்பு தம்மை அஸத்கல்பராக நினைத்திருக்கையாலே. [யவன்] - இப்படி உபகாரகனாக ப்ரஸித்தனானவன். [அவன்]-அதுக்குமேலே ஒருநன்மை சொல்லுகைக்காக அவனென்றுதேஶிக்கிறது. [அயர்வறும்] - பகவத்ஜ்ஞாநத்துக்கு விஸ்ம்ருதியில்லாமை ஸ்வபாவமாயிருக்கை. [அமரர்கள்] — மரணமின்றிக்கே யிருப்பவர்கள். அவர்களுக்கு மரணமாவது - பகவதநுபவ விச்சேதம்; அதின்றிக்கே யிருக்கை. அமரர்களென்கிற பஹுவசநத்தாலே — அவர்களுக்கு எண்ணில்லை யென்கிறது. [அதிபதி] - அதிகனான பதி. அஸங்க்யாதரான நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணாநின்றாலும் பரிச்சேதிக்கவொண்ணாத பெருமையையுடையவன். [யவன்] - நித்யவிபூதியோகத்தாலே வந்த ப்ரஸித்தி. [அவன்]-அதுக்குமேலே விக்ரஹத்தால் வந்த வைலக்ஷண்யம் சொல்லுகைக்காக உத்தேஶிக்கிறது. [துயரறு] - துயரற்ற என்றபடி. இவர் மயர்வற, அவன் துயரற்றபடி. [சுடரடி] - நிரவதிகதேஜோரூபமான திவ்யவிக்ரஹம். [அடி] - ஶேஷபூதர் அநுபவிக்க இழியுந் துறை. [தொழுது]-ஶேஷியைக்கண்டால் பிறக்கும் வ்ருத்திவிஶேஷம். [எழு] - உஜ்ஜீவி. தொழப்பெறாத போது “ஸதைவ” என்னும்படியாயிறே இருப்பது. [என்மனனே] - பகவத்ப்ரத்யாஸத்தியாலே தமக்குத் திருவுள்ளத்தோடே ஒரு ஸம்பந்தத்தை ஆசைப்படுகிறார்.

தனித்தனியே ‘அவன்’ என்கிறது - ஓரோவொன்றே ஈஶ்வரத்வ ஸாதகங்களென்று தோற்றுகைக்காக. மூன்றுபர்யாயத்திலும் ‘துயரறுசுடரடிதொழுதெழென்மனனே’ என்று வாக்யபேதம்பண்ணி யோஜிக்கவுமாம்; “நமோ நமோ வாங்மநஸாதிபூமயே” என்னுமா

போலே தனித்தனியே ப்ரீதியாலே ஈடுபடுகையாலே. "உயர்வறவுயர்நலமுடையவன் யவன், அவன் மயர்வறமதிநல மருளினன். மயர்வற மதிநலமருளினன் யவன், அவன் அயர்வறும் அமரர்களதிபதி; அயர்வறும் அமரர்களதிபதி யவன், அவன் துயரறுசுடரடி தொழுதெழு என் மனனே" என்று வாக்யைகவாக்யந்யாயத்தாலே யோஜிக்கவுமாம்.

ஈடு முப்பத்தாறாயிரப்படி.

முதற்பாட்டு.—தான் ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாயிருக்கிற இருப்பைக் காட்டி உபகரித்தான்; அக்குணங்களும் தன்னைப்பற்றி நிறம்பெறவேண்டும்படியாயிருக்கிற திவ்யாத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தைக் காட்டி உபகரித்தான்; இப்பேற்றுக்கு எனபக்கல் சொல்லலாவது ஒன்றுமின்றிக்கேயிருக்க, நிர்ஹேதுகமாகத் தானே உபகாரகனானான்; ஸ்வஸ்வரூபாபந்நராயிருக்கிறவர்களுக்கும்அவ்வருகாயிருக்கிற இருப்பைக்காட்டி உபகரித்தான்; தன்னுடைய திவ்யவிக்ரஹவைலக்ஷண்யத்தைக் காட்டி உபகரித்தான் என்று அவன்பண்ணின உபகாரங்களடையச் சொல்லி, இப்படிஉபகாரகனானவன்திருவடிகளிலே நித்யகைங்கர்யத்தைப் பண்ணி உஜ்ஜீவிக்கவாரா யென்று தம்திருவுள்ளத்தோடேகூட்டுகிறார். ஆறு கிண்ணகமெடுத்தால் நேர்நின்றமரங்கள் பறியுண்டுபோய்க் கடலிலே புகும்; நீர்வஞ்சி தொடக்கமானவை வளைந்து பிழைக்கும்; அதுபோலே பகவத்குணங்களினுடைய எடுப்பு இருந்தபடி கண்டோமுக்கு எதிரே நானேன்று பிழைக்க விரகில்லை; அவன் திருவடிகளிலே தலைசாய்த்துப் பிழைக்க வாராய் நெஞ்சே. என்கிறார்; உயர்வறவுயர்நலமுடைய

சீயர் அரும்பதம்.

இப்படி அவதரிப்பித்த ப்ரபந்தத்தில் பாட்டுக்களை அடைவே விவரிப்பதாக உபக்ரமிக்கிறார் - 'முதற்பாட்டு' இதி; முதற்பாட்டு - வ்யாக்யாயதே என்றபடி. இப்படி எங்கும் கண்டுகொள்வது. வாக்யைக வாக்யயோஜநாநுகுணமாக அவதாரிகை-'தான் ஸமஸ்த' இத்யாதி. 'தொழுதெழு' என்ற கைங்கர்யம் ப்ரீதிகாரிதமாக வேண்டுகையாலே ப்ரீதிஹேதுத்வேநோபகாரபரம்பரைகளை அருளிச்செய்கிறாரென்று கண்டுகொள்வது. 'அருளினன்' என்றத்தை ப்ரதிவாக்யம் அந்வயித்து 'உபகரித்தான் உபகரித்தான்' என்கிறாராதல்; இப்ப்ரபந்தம் அநுபவபரீவாஹரூபமாகையாலே உபகரித்தமை அர்த்தாத்ஸித்தமாதல். தான் ஸமஸ்தேத்யாதிக்கு - 'நலம்' என்றதிலே நோக்கு. அக்குணங்களும் 'தன்னைப்பற்றி' என்கிறவிடத்திலே - 'குணயத்தம்' இத்யாதி ஶ்லோகஶ்ச, ஹேமாரவிந்தபரிமளந்யாயஶ்சஅநுஸந்தேய꞉. மங்களபதம் - மங்கள பதப்ரயோக꞉. ஶ்ரீபூயம் - ஶ்ரீபத்வம். ஶ்ருதிவஶாத் என்றது - "ஜ்யோதிஷாம்ஜ்யோதி꞉" என்றத்தைப் பற்ற. 'அக்குணங்களும்' இத்யாதிக்கு - 'யவன்' என்ற விசேஷ்யாம்ஶத்திலே நோக்கு. 'இப்பேற்றுக்கு' இத்யாதி - 'அருளினன்' என்றத்தைப் பற்ற. 'ஸ்வஸ்வரூபாபந்நராய்' இத்யாதி - 'அயர்வறுமமரர்களதிபதி' என்றத்தைப் பற்ற. 'ஸ்வஸ்வரூபாபந்நராய்' - தங்களுடைய அபஹதபாப்மத்வாத்யஸாதாரணாகாரத்தை அடைந்தவர்களாய். 'துயரறுசுடரடி' என்றத்தைப் பற்ற, 'தன்னுடைய திவ்ய விக்ரஹ' இத்யாதி. கூட்டுகை - உபதேசிக்கை. உபகாரத்துக்குத் தோற்றால், "ஹாவுஹாவுஹாவு" என்றாற்போலே தாம் தொழாதே நெஞ்சுக்குச் சொல்லுகிறது - ப்ரீத்யதிசயத்தாலே உசாவவேண்டி, அதுக்கு இவ்விபூதியில் ஆளில்லாமல், மூந்துற்ற நெஞ்சாகையாலே- 'திருவுள்ளத்தோடேகூட்டுகிறார்' என்று பாடமானால், 'என்மனனே' என்று உறவுகொண்டாடுகிறாரென்றபடி. இந்தப் பாடத்தில் 'உஜ்ஜீவிக்க வாராய்' என்றது, நான் உஜ்ஜீவிக்கும்படி வாரா யென்றபடி. வாக்யபேதயோஜனைக்குச் சேர அவதாரிகாந்தரம் - 'ஆறு கிண்ணகம்' இத்யாதி. இதுக்கு 'உயர்வறவுயர்நலமுடையவன்' என்கிற பதத்திலே நோக்கு. யத்வா, 'தான் ஸமஸ்த' இத்யாதி வாக்யத்திலே உபகாரங்களை அநுஸந்திக்கில் அவஶ்யம் தொழவேணு மென்கிறாராய், 'இதில் நேரே நாம் தொழாதொழியிலும் குணோத்ரேகம் தொழுவித்துக்கொள்ளு மென்றார்' என்று யோஜிக்கவுமாம். கிண்ணகம் - ப்ரவாஹம். நேர் - எதிர். 'நீர்வஞ்சி' இதி; அத்ர "கூலாத்ஸம்ரக்ஷிதவ்யம்வேஹஸரீத்தோஶ்ரீருத்வேதஸீம்" என்றது அநுஸந்தேயம். எடுப்பு-அதிசயம்;ஔத்தத்யம்வா. குணங்களுடைய எடுப்பு என்கிற விடத்திலே - "த்ருஷ்டாக்ருஷ்ணம்தடா" இத்யாத் யநுஸந்தேயம். கண்டோமுக்கு - கண்ட நமக்கு. உக்தார்த்தஸ்ய ஶப்தாகாங்க்ஷாயாமாஹ - 'உயர்வற' இத்யாதி. குணக்ருத

வன் துயரறுசுடரடிதொழுதெழப்பாரா யென்கிறார்; "அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர்தாஸ்யமுபாகத:" (அஹமஸ்யாவரோப்ராதா குணைர்தாஸ்யமுபாகத:) என்னுமாபோலே: இளைய பெருமாளை 'நீர்இவர்க்கு என்னுவீர்?' என்ன, 'பெருமாளும் ஒருபடி நினைத்திருப்பர், நானும் ஒரு படிநினைத்திருப்பேன்' என்றார்; 'அவர்' நினைத்திருக்கும்படி யேன்? நீர் நினைத்திருக்கும்படியேன்?' என்ன; 'அவர் தம்பின்பிறந்தவனேன்றிருப்பர்; நான் அவர் குணங்களுக்குத் தோற்று அடியேனா யிருப்பன்' என்றாரிறே; அப்படியே இவரும் 'உயர்வறவுயர்நல முடையவன் துயரறுசுடரடி தொழுதெழப்பாராய் நெஞ்சே' என்கிறார். இவர்தாம் முற்படக் குணங்களிலே யிழிவானேன்? என்னில்;—தாம் அகப்பட்டதுறை அதுவாகையாலே. இவரைக் குணத்தையிட்டாயிற்று வணங் குவித்தது.

[உயர்வு இத்யாதி] - பகவதாநந்தத்தைப் பேசப்புக்க வேதங்கள் மநுஷ்யாநந்தம் தொடங்கி ப்ரஹ்மாநந்தத்தளவும் சேன்று பின்னையும் அவ்வருகே உத்ப்ரேக்ஷித்துக்கொண்டு சேன்று பின்னையும் பரிச்சேதிக்கமாட்டாதே "யதோ வாசோ நிவர்த்தந்தே" (யதோவாசோநிவர்த்தந்தே) என்று மீண்டனவிறே; இது ஆநந்தகுணமொன்றிலுமிறே; குணங்களெல்லாம் இப்படியே

தாஸ்யஸ்யத்ருஷ்டாந்த: - 'அஹமஸ்ய' இத்யாதி. உபபாதகம் - 'இளையபெருமாள்' இத்யாதி. 'நீர் இவர்க்கு என்னுவீ ரென்ன' என்றதுக்கு - "ராஜ்யாத்ப்ரஷ்டேந வநவாஸம் ஸம்யோஜிதாத்மந: । ஸாந்த்வயாவஹோ தேஜஸ்வீ தயா நந்தாவளீ" என்கிறபடியே பித்ருவசநத்தாலே அவர் வந்தார், பார்யை யாகையாலே பிராட்டி வந்தாள்; இரண்டுநிமித்தமு மின்றிக்கேயிருக்க "அபாஸாம்" என்று நீர் வந்த இது க்கு நிமித்தபூத ஸம்பந்தமேது? என்று தாத்பர்யம். ப்ராத்ருத்வமாவது-தோள்தீண்டியான ஆகாரம். தாஸத்வ மாவது-க்ரயவிக்ரயார்ஹத்வம். ஒருவனுக்கு ஏகவிஷயத்தைக்குறித்து இந்தஉத்கர்ஷாபகர்ஷரூப ப்ராத்ருத்வ தாஸத்வபுத்திகள் விருத்தங்களாகையாலே பிந்நபுத்யதீநங்களாக அருளிச்செய்கிறார் - 'பெருமாளும்' இத் யாதி. ஏதந்நியாமகம் - "யச்சிவ்யம் த்ரிதஹாராஜயக்ஷ்யந்து ஹாஹ்யதாமயி" என்றது; ப்ரீதி - ப்ராத்ருத்வ நிபந்தனை. அநுக்ராஹ்யதை - தாஸத்வநிபந்தனை. "அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர்தாஸ்யமுபாகத:" என்று 'ஸப்தநிர்வாஹம்' என்று பிள்ளை அருளிச்செய்வர். ப்ரக்ருதத்திலே ஏதென்ன, 'அப்படியே இவரும்' இத்யாதி- கத்யத்தில் "ஸவிஶேஷ" இத்யாதிப்படியே ஸ்வரூபம் முன்னாகச் சொல்லாதே குணத்தில்இழிவான் என்? என்றபடி. முற்பட - ஸ்வரூபாபேக்ஷயா என்றபடி. த்விதீயாவ தாரிகைக்குச்சேர ஹாவார்த்தரம்-'இவரை' இத்யாதி. சாடுவுக்குக்குணம்-கயிறு. குணத்தையிட்டிறே தநுஸ்ஸை வணங்குவிப்ப தென்றபடி.

ஶ்ருதியாலும் அபரிச்சேத்யமான ஆநந்தத்தை 'உயர்வற' இத்யாதியாலே வர்ணித்து நிலமா கப் பேசுகையால் வந்த ஜ்ஞாநாதிக்யத்திலே வ்யாக்யாதா ஈடுபடுகிறார். 'பகவதாநந்தத்தை' இத்யாதி; 'நில மாய்ப்பேசுகிறார்றே இவர்' என்னுமளவாக. அதாவது - வேதத்தைப்போலே பரிச்சேதிக்கவென்று இழி ந்து நிலமல்லாமை மீளுகையன்றிக்கே முதலிலே அபரிச்சிந்நமென்று சொல்ல இழிகையாலே நில மாய்ப் பேசத் தட்டில்லை யென்றபடி; அதவா, ஆநந்தகுண பரிச்சேத்யதைக்கு ப்ரமாணம்-'பகவத்' இத்யாதி. "யுவா ஸ்யாத் ஸாதுயுவாத்யாயக: ஆஶிஷ்டோ த்ருடிஷ்டோ பலிஷ்ட:" என்றுதொடங்கி "ஸ ஏக: ப்ரஜாபதேராநந்த:" என்னுமளவும் கடாக்ஷித்து 'மநுஷ்யாநந்தம்தொடங்கி ப்ரஹ்மாநந்தத்தளவும் சென்று' என்கிறார் பின்னையும் அவ்வருகே உத்ப்ரேக்ஷித்து என்றவிடத்திலே - "உபர்யுபரி ப்ரஹ்மாதிவர்த்தமாநா", "ஶ்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய ஸஹஸ்ர ஸம்ஸ்தா" இத்யாத்யநுஸந்தேயம். 'யுவாஸ்யாத்' இத்யாதி ஶ்ருதியிலே அவ்வருகே உத்ப்ரேக்ஷித்தமை இல் லாவிட்டாலும் ஊஹ்யாயஸித்தம். அதாவது - "யுவாஸ்யாத்" இத்யாதியாலே மநுஷ்யாத்ய ஸம்பாவித ஆகாரத்தைச் சொன்னபோதே ப்ரஹ்மாவையும் மநுஷ்யஸ்தாநே கல்பிக்கை ஶ்ருதிக்கு விவக்ஷித மென்ற படி: ஆநந்தகுணமொன்றிலுமிறே; 'மற்றகுணங்களின் அபரிச்சேத்யதை சொல்லவில்லையே யென்னில்' என்று சங்கையைப் பூரிப்பது. 'குணங்களெல்லாம் இப்படியேயிறே' என்றது - ஆநந்தாபரிச்சேத்யதா

யிறே இருப்பது; இக்குணங்களெல்லாம் தமக்கு நிலமாய்ப் பேசுகிறுரிறே இவர். உயர்வு - வருத்தம். எல்லாருக்கும் உயர்த்தியுண்டாம்போது வருத்த முண்டு; அப்படி வருந்தவேணுமோ? என்றால், உயர்வறஉயராநிற்கும்; இத்தைப்பற்றவிறே ஆளவந்தார் அருளிச்செய்த சந்தை. பகவத்வ்யதிரிக்தஸமஸ்தவஸ்துகதமான ஸர்வப்ரகாரத்தாலுமுண்டான உச்ச்ராயத்தை‘உயர்வு’என்கிறது; அற - இன்றியிலே ஒழிய. இத்தால். அத்யந்தாஹாவத்தைச் சொல்லுகிறதன்று; பின்னை என்

ஹேது குணவிபூத்யபரிச்சேத்யதையாகையாலே, ஆநந்தம் அபரிச்சிந்நமென்றபோதே தத்பரிச்சிந்நத்வ ஹேதுவான குணாந்தராபரிச்சேத்யதையும் அர்த்தஸித்த மென்றபடி. இது “யுவா ஸ்யாத்” இத்யாதி ஶ்ருதிவ்யாக்யாநத்திலே வ்யக்தம். ஆனால், இவர் பரிச்சேதித்துப்பேசும்படி என்? என்னில்,—‘இக்குணங்களெல்லாம்’ இத்யாதி என்று இங்ஙனே யோஜிக்கவுமாம்.

தைத்திரீயகே “யுவா ஸ்யாத்ஸாதுயுவாத்யாயக: ஆஶிஷ்டோ த்ருடிஷ்டோ பலிஷ்ட:। தஸ்யேயம் ப்ருதிவீ ஸர்வா வித்தஸ்ய பூர்ணா ஸ்யாத், ஸ ஏகோ மாநுஷ ஆநந்த:, தே யே ஶதம்” இத்யாதி — யுவா - பஞ்சவிம்ஶதிவார்ஷிக:, ஸாது: - ஸ்வவர்ணாஶ்ரமாசாரஸஹித:. யுவாத்யாயக: - ஸ்வஶாகாத்யயநஸம்பூர்ணாத்யாயக:; ததர்த்தஜ்ஞாந இத்யர்த்த:. ஆஶிஷ்ட: - அஶநக்ஷம: அஶநஶக்த்யுக்த:. த்ருடிஷ்ட: - காயபலவாந். பலிஷ்ட: - மநோபலவாந். வித்தஸ்ய பூர்ணா - வித்தேந பூர்ணா. ஸ ஏகோ மாநுஷ ஆநந்த: - ஏவம்குணஸம்பந்நஸ்ய விஶிஷ்டைஶ்வர்யயோக்து: ஸ ஏகோ மாநுஷ ஆநந்த: இதி தத்ஸமுதாயம் ஆநந்தஶப்தேந நிர்திஶ்ய தஸ்யாநந்தஸ்ய நிரதிஶயத்வப்ரதிபாதநாத் ஸர்வகுணாநாம் விஶிஷ்டாநவதிகாதிஶயத்வம் ப்ரதிபாதிதம் பவதி. ந ச ஜ்ஞாநாதிஸ்வகுணவிஶிஷ்டத்வாதே: ஆநந்தாதிஶயத்வம், ஆநந்தமயத்வம் ஸ்யாத். தச்ச ஸ்வரூபவைஷம்யம். தச்ச குணவிஶிஷ்டதயா ஸம்பவதி. ஶ்ருத்யா ஸர்வஸ்ய ப்ரஹ்மாநந்தத்வம் உக்தம். ஆநந்தரூபஜ்ஞாநமேவ - ஆநந்தமிதி குணவிஶிஷ்டவிஷயஜ்ஞாநஸ்ய ஆநந்தத்வேபி தஸ்யாநந்தஸ்ய நிரவதிகாதிஶயத்வோக்த்யா குணவிஶிஷ்டத்வஸ்ய அவதிகாதிஶயத்வம் ப்ரதிபாதிதம் பவதி, ததாநந்தஸ்ய குணவிஶிஷ்டாநந்த நிபந்தநத்வாத், ஏவம் “ஸ ஏகோ மாநுஷ ஆநந்த:” இத்யாரப்ய “ஸ ஏக: ப்ரஜாபதேராநந்த:” இத்யந்தே க்ஷேத்ரஜ்ஞாநந்தாதிஶய உக்த:. “ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:” இதி பகவதாநந்த உக்த இதி “யுவா ஸ்யாத்” இதி ஶ்ருதேர்வ்யாக்யாநம்.

உயர்வென்று - வருத்தமாதல்; உச்ச்ராயமாதல். அதில் ப்ரதமத்தை அருளிசசெய்கிறுர், ‘உயர்வு வருத்தம்’ என்று. வருத்தத்துக்கு ப்ரஸக்தியேது? என்ன, ‘எல்லாருக்கும்’ இத்யாதி. “யோ ப்ரஹ்மகோடிஶதஸஹஸ்ராணி விஷ்ணோராராத்யவலஹர்ஷ்ய:। யாநந்தைஶ்வர்யாத்யநுபவாத்ப்ரதிஶ்ராந்தாஶ்ச”, “ஸோபி தேவஸஹஸ்ராணி யோஷிதா ஸ்வர்க்காணி தேவதேவோபவஹர்ஷ” இத்யாதிப்படியே ப்ரஹ்மாதிகளுக்கு வருத்தமுண்டு என்றபடி. உயர்வற உயராநிற்கும் - வருத்தமற்று உயராநிற்கும். இந்த அர்த்தத்தில்‘அற’என்று அத்யந்தாஹாவத்தைச் சொல்லி, வருத்தமற் றென்றபடி. வருத்தமற்றிருக்கு மென்கையாலே-ஸ்வாபாவிக மென்றபடி. இந்தஅர்த்தத்துக்கு ஆளவந்தார்ஸ்ரீஸூக்தியை அருளிச்செய்கிறுர்,‘இத்தைப்பற்ற’இத்யாதி. வருத்தமற உயராநிற்கும் என்கிற இவ்வர்த்தத்தைப் பற்றவிறேயென்றபடி. ஆளவந்தார்அருளிச்செய்யும் சந்தையாவது - “ஸ்வாஹாவிக” இத்யாதி சந்தை யென்றபடி. இது மேலே சொல்லுகிறதிறே. உயர்வென்று-உச்ச்ராயமாக அர்த்தாந்தரம்-‘பகவத்வ்யதிரிக்த’ இத்யாதி. இவ்வர்த்தத்துக்கு ‘அற’ என்று அல்பதையிலே தாத்பர்யம். பூர்வயோஜநையில் வ்யாவ்ருத்தி - ‘இத்தால்’ இத்யாதி.

சொல்லுகிறது? என்னில்;—தன்னுடைய உச்ச்ராயத்தையும் இவற்றையும் பார்த்தால் ஆதித்ய ஸந்நிதியில் நக்ஷத்ராதிகளைப்போலவும்,மேருசிகரத்திலே நின்றவனுக்குக் கீழுள்ள ஸர்ஷபாதிகள் இருக்குமாபோலவும், உண்டாயிருக்கச்செய்தே இல்லையென்னலாம்படி யிருக்கை. இப்படி அல்லாதவற்றை இல்லையென்னலாம்படி பண்ணினால் தனக்கு ஓரேல்லை யுண்டாயிருக்குமோ? என்னில்;— [உயர்] - காலதத்த்வமுள்ளதனையும் அநுபவியாநின்றாலும் அவ்வருகாய்க்கொண்டு வாங்மநஸ்ஸுக்களால் பரிச்சேதிக்கவொண்ணாதபடி உயராநிற்கும் ஆனால்,"ஸர்வே க்ஷயாந்தா நிசயா: பதநாந்தா: ஸமுச்ச்ரயா: । ஸம்யோகா விப்ரயோகாந்தா மரணாந்தஞ்ச ஜீவிதம்" (ஸர்வேக்ஷயாந்தாநிசயா: பதநாந்தாஸ்ஸமுச்ச்ரயா: | ஸம்யோகாவிப்ரயோகாந்தாமரணாந்தஞ்சஜீவிதம்.) என்கிறபடியே இருக்கிறதோ? என்னில்:—அன்று; *இயத்தாராஹித்யத்தைச் சொன்னபடி. இப்படி கரைகட்டாக் காவேரிபோலே பரந்திருந்தால் இப்பரப்பெல்லாம் ப்ரயோஜநமாயிராதே காடு பட்டுக் கிடக்குமோ? என்னில், — [நலம்] - கண்டிடமெங்கும் பயிர்பட்டிருக்கும் நிலம்போலே எங்குமொக்க உபாதேயமாயிருக்கும். நலமென்று - ஆநந்தகுணமொன்றையும் சொல்லுகிறதென்னுதல்; குணஸமூஹத்தைச் சொல்லுகிறதென்னுதல்; ஆநந்தாவஹமான விபூதியைப்பற்றச் சொல்லுகிறதென்னுதல். [உடையவன்] - இக்குணங்கள்தன்னை அஸ்தியென்று விடுமளவன்றிக்கே இவற்றையிட்டு நிரூபிக்கவேண்டும்படியாயிருக்கும். அதாவது - ஆகந்துகமன்றிக்கே ஸ்வரூபாநுபந்தியாயிருக்கு மென்றபடி. ஆழ்வான் பிள்ளைப்பிள்ளையைப்பார்த்து "நிர்க்குணமென்பார் மிடற்றைப்பிடித்தாற்போலே ஆழ்வார் 'நலமுடையவன்' என்றபடி கண்டாயே" என்று பணித்

இவ்விடத்திலே "வாணஸ்ஸ்த்ரீத்வநிவர்ஸாந்தாகிஞ்சநஹாயநா: | ஜ்யோதீம்ஷ்யாதித்யவத் ராஜந் குலாநுவ்ருத்தா ஹ்யபஜஞ்ச்ரியா" என்றது அநுஸந்தேயம். 'உயர்' என்கிற வர்த்தமாநார்த்தம் - 'கால தத்த்வம்' இத்யாதி. மந்தஶங்கை - 'ஆனால்' இத்யாதி. இதம்வசநம்-அயோத்யாகாண்டே பரதம்ப்ரதி ராமः. ஆனால் - அத்யுச்ச்ராயமானா லென்றபடி. - 'அத்யுச்ச்ராயःபதநஹேது:' என்று விவக்ஷிதம். நலபதத்தைப் பாராமல் ஶங்கித்து அதுக்கு நலபதத்தைக் கடாக்ஷித்துப்பரிஹாரம் - 'அன்று இயத்தா' இத்யாதி-இதுக்கு த்ரவ்யகதோச்ச்ராயம் பதநஹேது, குணகதோச்ச்ராயம் பதநஹேது வன்றென்று பரிஹாரம். குணஸமூஹ விவக்ஷாபக்ஷத்திலே குணமுடையவனென்றால் வரும் ஶங்கையை அநுவதித்துத் தத்பரிஹாரார்த்தமாக நலமென்கிற பதத்தை அவதரிப்பிக்கிறார். 'இப்படி கரைகட்டா' இத்யாதி. குணங்கள் அநந்தங்களாகையாலே ஸமூஹைகதேஶமான ஓரோகுணங்களிலே அபோக்யதையும் ப்ரஸங்கிக்குமிறே யென்று சங்காதாத்பர்யம். உயர்குணமென்றதே 'உயர்நலம்' என்றதுக்கு வாஸநை - 'கண்டிடம்' இத்யாதி. உபாதேயமாயிருக்கு மென்றது - 'நலம்' என்ற ஶப்தத்தினுடைய மூன்றுபொருளுக்கும் ஸமுதாயம். ஸமூஹவாசித்வ பக்ஷத்தில் "வநகோவ்ரீஹி:" இதிவத் 'நலம்' என்று - ஜாத்யேகவசநம்; "நலந்தானொன்றுமிலேன்" என்னக்கடவதிறே. த்ருதீயார்த்தத்துக்கு "ஸுயஜ்ஞோ வ்யாப்தம்" என்றாற்போலே கார்யவாசிஶப்தத்தாலே காரணமான விபூதியை நினைக்கிறது. ஆநந்தகுண மொன்றையுஞ் சொன்னபோது, மற்ற குணங்களுக்கும் உபலக்ஷணம். பற்ற - பற்றி, விவக்ஷித்து என்றபடி. "ஹேதுஶநிந்தாவ்யஶம்ஸாஸந்நித்யயோகேதிஶாயநே | ஸம்பந்தேஸ்திவிவக்ஷாயாம் பவந்தி மதுபாதய:" என்கிறவற்றில் வைத்துக் கொண்டு அஸ்திவிவக்ஷயா வன்றிக்கே நித்யயோகமதுப்பு என்கிறார் - 'இக்குணங்கள்தன்னை' இத்யாதி. இத்தால் 'உடையவன்' என்கிற மதுப்பு நித்யயோகததைச் சொல்லுகிற தென்று கருத்து. குணங்கள் ஸ்வரூபாநுபந்திகளா யிருக்கு மென்கையாலே குணமில்லை யென்கிறவர்கள்பக்ஷம் நிரஸ்தமாயிற் றென்கைக்கு ஆழ்வான் ஸ்ரீஸூக்தியை அருளிச்செய்கிறார் - 'ஆழ்வான்' இத்யாதி. யத்வா, நலஶப்தஸ்ய குண பரத்வேஸம்மதிமாஹ - 'ஆழ்வான்' இத்யாதி ஆதல். 'நலம்'என்று குணஸமூஹத்தைச் சொல்லுகிறவதுக்கு

* இவ்வளவென்று சொல்லத்தக்க அளவு கடந்திருக்கை.

தான். இத்தால் "ஸமஸ்தகல்யாணகுணாத்மகோऽஸௌ" (ஸமஸ்தகல்யாணகுணாத்மகோஸௌ) என்றபடி; "வர்ஷாயுதைஃ" (வர்ஷாயுதைஃ) இத்யாதி, "யாதோऽநாதிபவேऽபி நோ குண

ப்ர.— 'நலமுடையவன்' இத்யாதி:— ஸ்ரீவிஷ்ணுபுராணே, [சு-ரு] "ஸமஸ்தகல்யாணகுணாத்மகோऽஸௌ ஸ்வஶக்திலேஶாத் த்ருʼதபூதஸர்க: | இச்சாக்ருʼஹீதாபிமதோருதேஹ: ஸம்ஸாதிதாஶேஷஜகத்திதோऽஸௌ" [அசு] கல்யாண: ஶ்ருதப்ரகாஶிகாகாரைர்விவ்ருʼத:. "ஸமஸ்தகல்யாணகுணாத்மக:" இதி கல்யாணகுணவத்த்வோக்தேச - ஆத்மஶப்த: - ஸ்வபாவவாசீ ஸ்யாத். ஆத்மஶப்தஸ்ய ஸ்வரூபவாசித்வே கல்யாணஶப்தோ பாவப்ரதாந: - ஸமஸ்தகல்யாணம் குண: யஸ்ய ஸ: ஸமஸ்தகல்யாணகுண: - 'த்வேஷ்யோऽஸ்மி தவ தேநைவ' இத்யாதிவச்சப்தவத்; "அம்மிக்குழவி" இதி ஹி வ்யுத்பத்தி:. ஸமஸ்தகல்யாணகுண: ஆத்மா - திவ்யஸ்வரூபம் யஸ்ய ஸ: - ஸமஸ்தகல்யாணகுணாத்மக:; பஹுவ்ரீஹிரௌபசாரிக:; ஶிலாபுத்ரகஸ்ய ஶரீரமிதிவத். திவ்யாத்மஸ்வரூபமேவாஸ்ய "ஸ்வஶக்தி" இதி. ஸ்வாம்ஶலேஶாத் த்ருʼதபூதஸர்க:; யத்வா, ஶக்தி: - ஸாமர்த்யம். ஸ்வகுணலவாத் த்ருʼதஜாத இத்யர்த்த:. பூதஸர்க: - பூதஸமூஹ:. யத்வா, ஸ்ருஜ்யத இதி ஸர்க: - கார்யவஸ்துஜாத இத்யர்த்த:. விக்ரஹவைலக்ஷண்யமாஹ "இச்சா" இதி. அபிமதத்வம் - அபிமதத்வம் - அநுரூபத்வம்; அவதாரேண ஸாத்யம் விக்ரஹப்ரயோஜநமாஹ "ஸம்ஸாதித" இதி.

ப்ரமாணம் அருளிச்செய்கிறார் - 'இத்தால் ஸமஸ்த' இத்யாதி. வைஷ்ணவே புராணே "ஸமஸ்தகல்யாணகுணாத்மகோऽஸௌ ஸ்வஶக்திலேஶாத் த்ருʼதபூதஸர்க: | இச்சாக்ருʼஹீதாபிமதோருதேஹ: ஸம்ஸாதிதாஶேஷஜகத்திதோऽஸௌ". மஹாபாரதே பீஷ்மபர்வணி கர்ண: "வர்ஷாயுதைர்யஸ்ய குணா ந ஶக்யா வக்தும் ஸமேதைரபி ஸர்வலோகை: | மஹாத்மந: ஶங்கசக்ராஸிபாணேர்விஷ்ணோர்ஜிஷ்ணோர்வஸுதேவாத்மஜஸ்ய". கிஷ்கிந்தாகாண்டே பஞ்சதஶேஸர்கே தாரா "நிவாஸவ்ருʼக்ஷ: ஸாதூநாம்" இத்யாரப்ய "யாதோऽநாதிபவேऽபி நோ குணநாமாவ்ருʼத்த" அயோத்யாகாண்டே தஶரதம் ப்ரதிராஜாந: "ததேவ குணஸம்பந்நம் பராத்பரதரம் தவ... ஸுஹ்ருʼத்" இத்யாதி 'ஸ்வாபாவிகாநவதிகாதிஶயாஸங்க்யேயகல்யாணகுணகண:' இதி யாமுநாசார்ய வசநம். 'ஸமஸ்தகல்யாண குணாத்மகோஸௌ'-அஸ்யார்த்த த்வயம், ஸமஸ்தாஶ்சதே கல்யாண குணாஶ்ச ஸமஸ்தகல்யாணகுணா:. தேஆத்மாஸ்வபாவோயஸ்ய ஸ இதிவா; அதாவது - ஸமஸ்தகல்யாண குணங்களை ஸ்வபாவமாக வுடையவனென்றபடி. அஸ்மிந் அர்த்தே குணஶப்தோ குணபர:; ஆத்மஶப்த: ஸ்வபாவவாசீ. அன்றிக்கே, கல்யாணஶப்தம் பாவப்ரதாநமாய், கல்யாணத்வத்தை குணமாக - ஸ்வபாவமாகவுடைய திவ்யாத்மஸ்வரூபம் யாவனொருவனுக்கு, அவன் ஸமஸ்தகல்யாண குணாத்மக னென்னுதல்; குணம் - ஸ்வபாவம். ஆத்மஶப்தம் - ஸ்வரூபபரம். ஸமஸ்தகல்யாணத்வமாவது ஸமஸ்தப்ரதேஶமும் கல்யாணமாயிருக்கை. அதாவது கட்டளைபட்ட அநுகூலமாயிருக்கை; ஆநந்தமயனென்றபடி. திவ்யாத்ம ஸ்வரூபமென்றும், அதையுடையவனென்றும் இரண்டில்லாமையாலே உடையவனென்கிற பஹுவ்ரீஹி ஔபசாரிகம்; ஶிலாபுத்ரகஸ்ய ஶரீரமிதிவத் "அம்மிக்குழவியினுடைய சரீரமென்னுமாபோலே. திவ்யாத்மஸ்வரூபமேவ ஸ்வஶக்தி ஸ்வஶக்தி' இதி. ஸ்வஶக்திலேஶாத்-ஸ்வாம்ஶலேஶாத். யத்வா, ஶக்தி:- ஸாமர்த்யம். ஸ்வகுணலவாத் த்ருʼதஜாத இத்யர்த்த: - பூதஸர்க: - பூதஸமூஹ:. யத்வா, ஸ்ருஜ்யத இதி ஸர்க:. கார்யவஸ்துஜாத இத்யர்த்த:. விக்ரஹவைலக்ஷண்யமாஹ - 'இச்சேதி' இச்சாக்ருʼஹீதமென்கையாலே - அபிமதத்வம். அப்ய மென்கையாலே - அநுரூபத்வம். அவதாரேண ஸாத்யம் விக்ரஹப்ரயோஜநமாஹ - 'ஸம்ஸாதித' இதி. 'வர்ஷாயுதைஃ' இத்யாதி; விஶேஷணைர்குணஸ்ஸர்வலோகைஸ் ஸமே

[illegible] (தாதூநாமிவஸைலேந்த்ரோ குணாநாமாகரோமஹாந்) [illegible] (பஹவோநருபகல்யாணகுணா: புத்ரஸ்யஸந்திதே); [illegible] (ஸ்வாபாவிகாநவதிகாதிஸயாஸங்க்யேயகல்யாணகுணகணா:) என்றுஇதுக்கு ஆளவந்தார் அருளிச்செய்யுஞ் சந்தை.-இப்படி குணங்கள் கரைபுரண்டிருந்தால் இக்குணங்களாலே தனக்கு நிறமாம்படியிருக்குமோ திவ்யாத்ம ஸ்வரூபம்? என்னில்,—அங்ஙன் இராது; அஸ்ஸ்வரூபத்தைப்பற்றி குணங்களுக்கும் நிறம்பெறவேண்டும்படியிருக்குமென்று ஸ்வரூபவைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறது—['யவன்' என்று]- [illegible] (யதாஸைந்தவகந:) என்கிற ப்ரமாணப்ரஸித்தியைப்பற்ற 'யவன்' என்கிறார். இத்தால் குண

ப்ர.— 'யவன்' இத்யாதி:— [illegible] [௪-௫] [illegible], [illegible] [௪-௪] [illegible] [illegible]

தைரபி வர்ஷாயுதைர்வக்தும்நஸக்யா இத்யர்வய:. 'தாதூநாம்' என்கிறதுக்குமுன்னே 'ஜ்ஞாநவிஜ்ஞாந ஸம்பந்நோ நிதேஸேஸிரத:பிதுர:' என்கிறவிடத்தில் ஜ்ஞாநவிஜ்ஞாநஸப்தங்கள் அலௌகிக லௌகிக ஜ்ஞாந பரங்கள்; [illegible] இத்யமரகோஸ:. 'நலமுடையவன்' என்றவிடத்தில் ஸாமாந்யேந தர்மிஸ்வரூபம் ப்ரதிபந்நமாயிருக்கச்செய்தே திரியவும் ப்ரஸித்திபர யச்சப்த ப்ரயோகஸாவம் அருளிச்செய்கிறார் - 'இப்படி குணங்கள்' இத்யாதி. ஸ்வரூபம் குணநிர பேக்ஷமாய் போக்யமா யிருக்கு மென்கைக்கு ஸ்ருதியை தர்ஸிப்பிக்கிறார். - 'யதா' இத்யாதி. யத்வா, 'யவன்' என்ற யச்சப்தத்தாலே எந்தப் ப்ரஸித்தியைச் சொல்லுகிறது என்ன, 'யதா' இத்யாதி என்னுதல். இயம் ஸ்ருதிர்ப்ருஹதாரண்யகே மைத்ரேயீப்ராஹ்மணே- [illegible], [illegible].'[illegible]' இதிஅந்தரங்கவ்யதிரிக்த தர்மபூதஜ்ஞாநம் தார்ஷ்டாந்திகே உச்யதே. 'அபாஹ்ய:' - பஹிரங்கவ்யதிரிக்த:. அந்தரங்க ஆத்மோச்யதே. ஆக, அநந்தரோ பாஹ்ய: என்று - தர்மதர்மிகளைச் சொல்லுகிறது. க்ருத்ஸ்நஸப்தம் இவ்விரண்டுக்கும் ஏகதேஸவ்யுதாஸார்த்தம். இத்தால் தர்மதர்மிகளெல்லாம் ஜ்ஞாநஸ்வரூபமா யிருக்கு மென்றபடி. இந்த ஸ்ருதி '[illegible]' இத்யாதி மேலில் பதஸாமர்த்யத்தாலே ஜீவபரமேயாகிலும், ப்ரகார வாசி ஸப்தம் ப்ரகாரி பர்யந்தாபிதாநம் பண்ணு மென்னுமத்தைப்பற்ற, பரமாத்மபரமாகக் கண்டுகொள்வது. இத்தால் - 'யவன்' என்கிற இத்தால். குணநிரபேக்ஷ ஸ்வரூபப்ரஸித்தி பரமானபோது 'யவன்

நிரபேக்ஷமான ஸ்வரூப ப்ரஸித்தியைச் சொல்லுதல்; குணவிஶிஷ்டமான ஸ்வரூபவைலக்ஷண்யத்தைச் சொல்லுதல். [அவன்] - இதுக்குஅவ்வருகே ஓர்உபகாரத்தைச் சொல்ல நினைத்துக் கீழ்நின்ற நிலையை அமைத்து மேலே தோள்படிகொள்ளுகிறார். அந்த உபகாரந்தான் ஏது? என்னில்;—[மயர்வற] - ஜ்ஞாநாநுதயம் அந்யதாஜ்ஞாநம் விபரீதஜ்ஞாநம் என்கிற இவை வாஸநையோடே போம்படியாக. “ஜ்ஞாநாநுதயமாவது – தேஹாத்மாபிமாநம் அந்யதாஜ்ஞாநமாவது - தேவதாந்தரஶேஷமென்றிருக்கை. விபரீதஜ்ஞாநமாவது - ஸ்வதந்த்ரமாகவும் ஸ்வபோக்யமாகவும் நினைத்திருக்கிற கேவலனுடைய ஜ்ஞாநம்” என்று நம்பிள்ளை அருளிச்செய்வர். தம்வாயாலே ‘மயர்வற’ என்று சொல்லலாம்படிகாணும் அவன்தான் இவர்க்கு அஜ்ஞாநத்தை வாஸனையோடே போக்கினபடி. [மதிநலம்] - ‘ஜ்ஞாநபக்திகளிரண்டையுந் தந்தான்’ என்று நிர்வஹிப்பாருமுண்டு; அன்றிக்கே, ‘நலமான மதியைத் தந்தானென்றாய், முளைக்கும்போதே வயிரம்பற்றி முளைக்கும் பதார்த்தம்போலே பக்திரூபாபந்நஜ்ஞாநத்தைத் தந்தானென்கிறார்’ என்று பட்டர் அருளிச்செய்யும்படி. கர்மஜ்ஞாநாநுக்ருஹீதையான பக்திஸ்தாநத்திலே பகவத்ப்ரஸாதமாய், அநந்தரம் கைங்கர்யத்துக்குப் பூர்வக்ஷணவர்த்தியான பக்தியாயிற்று இவரது. “ஆழ்வார் ப்ரபந்நரோ? பக்திநிஷ்டரோ?” என்று எம்பாரைச் சிலர்கேட்க, “ஆழ்வார்ப்ரபந்நர்; பக்தி இவர்க்குதேஹயாத்ராஶேஷம்” என்று அருளிச்செய்தார்; என்போல வென்னில்;—நாமுமெல்லாம் ப்ரபந்நராயிருக்கச்செய்தே ஆண்டாறுமாஸத்துக்கு ஜீவநம்தேடுகிறாப்போலே; *உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்

ணாக. [illegible]

உயர்வற உயர்நலமுடையவன்’ என்று அந்வயிப்பது; மற்றபக்ஷத்தில் அடைவே அந்வயம் குணவிஶிஷ்டமான ஸ்வரூப வைலக்ஷண்யத்தை-வைலக்ஷண்யகதப்ரஸித்தியை. ‘அமைக்கை’ - ‘அவன்’ என்று பராமர்ஶிக்கை. கீழ்நின்ற நிலையாவது - கல்யாணகுணயோகமும் ஸ்வரூபவைலக்ஷண்யமும். தோள்படிகொள்ளுகையாவது- ராஜாவானவன்கஜாரோஹணதசையில் ஸாமந்தர்தோளைப்படியாகக்கொள்ளுகை; அதிஷ்டிக்கையென்றபடி. ‘ஜ்ஞாநாநுதயம்’ இத்யாதி ஜ்ஞாநாநுதயாதிகளுக்கு தத்த்வத்ரயோக்தலக்ஷண மொழிய இங்கே லக்ஷணாந்தரமென்று கண்டுகொள்வது. வாஸநையோடே போக்கினதுக்கு ப்ரஸக்தமில்லையே என்ன ‘தம்வாயாலே’ இத்யாதி பட்டர் நிர்வாஹத்துக்கு ஏகவசந ஸ்வாரஸ்யமும் அர்த்தாதிஶயமும் உண்டு. இத்தைக்கடாக்ஷித்திறே “[illegible]” என்றது. ஜ்ஞாநமுண்டாய் பக்தியுண்டாகவேண்டாவோ? என்ன,-‘முளைக்கும்போதே’ என்றுதொடங்கி. முளைக்கும் பதார்த்தம்-கருங்காலி முதலானவை. இவர்பக்திக்கு அடியேது? தத்விநியோகந்தான் ஏது? என்ன, ‘கர்மஜ்ஞாந’ இத்யாதி, பக்திஸ்த்தாநத்திலே-பரமபக்த்யாதிஹேது பூதபக்த்யங்குர ஸ்த்தாநத்திலே. பக்தி கைங்கர்யோபகரண மென்னுமதுக்கு ஸம்வாதம்-‘ஆழ்வார்’ இத்யாதி. தேஹயாத்ரையென்றது - அநுபவகைங்கர்யங்களை. ஆண்டாறுமாஸத்துக்கு - ‘ஆண்டுக்கும் ஆறுமாஸத்துக்கும்’ என்று பிள்ளை அருளிச்செய்வர். இது தேவமாத்ருக நதீமாத்ருக தேஶவிபாகத்தைப் பற்ற; தேவமாத்ருகம் ஒருபூ விளைகையாலே வர்ஷாவதிக்கு ஜீவநந்தேடுர்கள், நதீமாத்ருகம் இரண்டு பூ விளைகையாலே ஆறுமாஸத்துக்கு ஜீவநந் தேடுவார்களென்றபடி. அப்படி அநுபவகைங்கர்யங்கள் தேஹயாத்ரையாயிருக்குமோ, பக்தி இதுக்கு ஶேஷமாயிருக்குமென்கைக்கு? என்ன, ‘உண்ணுஞ்சோறு’ இத்யாதி. கண்ணனிறே

* திருவாய்மொழி—சு, எ, க.

றிலேயு மெல்லாம் கண்ணனிறே இவர்க்கு. [அருளினன்] - நிர்ஹேதுகமாக அருளிக்கொண்டு நிற்கக் கண்ட இத்தனை. 'எனக்குஅருளினன்' என்றுதொழிந்தது பகவத்விஷயீகாரத்துக்குமுன்பு தம்மை அஸத்கல்பராக நினைத்திருக்கையாலே. [அருளினன்] - இத்தலை அர்த்திக்கவன்றிக்கே முலைக்கடுப்பாலே தரையிலே பீச்சுவாரைப்போலே அருளிக்கொண்டு நிற்கக் கண்ட இத்தனை; "தாது: ப்ரஸாதாந்மஹிமாநமீஶம்" (தாதுஃப்ரஸாதாந்மஹிமாநமீசம்) என்கிறபடியே நிர்

ப்ர.— *'அருளினன்' இத்யாதி:* — தைத்திரீயகே ஸ்ரீநாராயணே [௧௦] "அணோரணீயாந்மஹதோ மஹீயாநாத்மா குஹாயாந்நிஹிதோऽஸ்ய ஜந்தோ:। தமக்ரதும் பஶ்யதி வீதஶோகோ தாது: ப்ரஸாதாந்மஹிமாநமீஶம்." அஸ்யார்த்த: - "அணோ: - ஸர்வேப்யஸ்ஸூக்ஷ்மாஜ்ஜீவாதபி. அணீயாந் - அணுதர:. மஹத: - ப்ருதிவ்யாதேர்மஹதோऽபி. மஹீயாந் - மஹத்தர:; விபுதர:. ஆத்மா - அணுதரஸ்யைவ ஜீவாத்மநோऽபி ஸர்வேஷாமாத்மா; ஸர்வாணி ஹி பூதாந்யஸ்ய ஶரீரம். அஸ்ய ஜந்தோ: - ஜநநாதியுக்தஸ்ய ஸர்வஸ்ய ப்ராணிஜாதஸ்ய. குஹாயாம் - ஹ்ருதயகுஹாயாம். நிஹித: - ஸர்வாத்மபாவேந ப்ரேரகதயா நியமநத்வேந ஸ்தித:. ஹ்ருதயகுஹாநிஹிதத்வாத்வாஹ்ருதஸ்ய நாராயணத்வம் ஸாத்யதே. தஸ்மாதயமேவ நாராயணாநுவாகப்ரதிபாத்யதத்த்வமிதி போத்யம். (தமக்ரதும் பஶ்யதி வீதஶோக:) தம் - பரமாத்மாநம், அக்ரதும் — க்ரது: - ஸங்கல்ப:. தத்ரஹிதம்; அவாப்தஸமஸ்தகாமத்வாதக்ரதும் ஸங்கல்பஶூந்யமிதி. அதவா, ஸஜாதீயக வைதிககர்மைகஸாத்யத்வம் க்ரதுத்வம் நாஸ்தீதி அக்ரதும்; ஸர்வஸம்ரக்ஷணைகதீக்ஷிதமித்யர்த்த:. யதா பஶ்யதி, ததா வீதஶோகோ பவதி. அதவா, யதா வீதஶோக:, ததா பஶ்யதி. வீதஶோகத்வம் நாம - ஸாம்ஸாரிகஹேயேஷு நிஸ்ஸ்ப்ருஹத்வம் பரமபுருஷவிஷயே நிஸ்ஸ்ப்ருஹத்வாபாவஶ்ச. தத்ர ஶப்தநிஷேதார்த்தம் "தாது: ப்ரஸாதாத்" இதி. தாது: - ஸர்வேஶ்வரஸ்ய. ப்ரஸாதாத் - "யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்" [௧-௨-௨௩] இதி ஶ்ருதே:. மஹிமாநம் - மஹிமாநம் - ஸ்வாஸாதாரணமஹாமஹிமயுக்தம். ஈஶம் - க்ருத்ஸ்நஶாஸிநம்;

யென்று - க்ருஷ்ணநுபவ தாரகத்வாபிதாநம் தஜ்ஜநித கைங்கர்யத்துக்கும் உபலக்ஷணம். நிர்ஹேதுகமாக வென்றது - ஹேத்வநுக்தி ஸித்தார்த்தம். எனக்கருளினன் என்றுதே 'அருளினன்' என்றதுக்குத் தாத்பர்யமான நிர்ஹேதுகத்வம் இரண்டுவிதம்; அதில் முந்தினது - 'எனக்கருளினன் என்றுது' இத்யாதி அதாவது - அங்கீகாரஸாதநம் தம்பக்கலில்லை யென்றபடி ; இத்தால் உபாஸகவ்யாவ்ருத்தி. இரண்டாவது - 'இத்தலை அர்த்திக்க வன்றிக்கே' இத்யாதி. அதாவது - ப்ரபத்தியும் தம்மிடத்திலில்லை யென்றபடி. இத்தால், ப்ரபந்நவ்யாவ்ருத்தி. அன்றிக்கே, கீழே எனக்கு என்றுததுக்கு ஹாவமாய், 'அருளினன்' என்ற பதமாத்ரத்துக்கு ஹாவம் - 'இத்தலை' இத்யாதி என்னுதல். பீச்சுவார் - கறப்பார் நிர்ஹேதுகத்வத்துக்கு ப்ரமாணம் - 'தாதுஃப்ரஸாதாத்' இத்யாதி. "பும்ப்ரஜாபதிமேவாஸ்வேந்யோஹவதி" என்னக்கடவதிறே. தைத்திரீயே ஸ்ரீநாராயணயே "அணோரணீயாந்" இத்யாரப்ய "தமக்ரதும் பஶ்யதி வீதஶோகோ தாது: ப்ரஸாதாந்மஹிமாநமீஶம்". அஸ்யார்த்த:— அக்ரதும் - க்ரத்வநாராதிதம். யத்வா - க்ரது: - ஸங்கல்ப:, அக்ரதும் - ஸங்கல்பரஹிதம். அவாப்த ஸமஸ்தகாம மிதி யாவத். மஹிமாநம்- மஹிமவிசிஷ்டம். தமீசம் - பரமாத்மாநம். தாது: ப்ரஸாதாத் - ஸர்வேச்வரஸ்ய நிர்ஹேதுகக்ருபயா யதா பச்யதி, ததா, வீதசோகோபவதீதி

ஹேதுகமாக அருளிக்கொண்டு நிற்கக் கண்ட இத்தனை. 'இத்தலையில் நினைவின்றிக்கேயிருக்க வந்தருளினவன் தன்னருள்கொள்வாரில்லாதா னொருவனோ? என்னில், — [அயர்வறுமமரர்களதிபதி] - தான் அருளாதஅன்று ஸத்தையின்றிக்கே யிருப்பாரை ஒருநாடாகவுடையவன். அயர்வாகிறது - விஸ்ம்ருதி. அதின்றிக்கே யிருப்பவர்கள். ப்ராகபாவத்தைப் பற்றச் சொல்லுகிறது, ப்ரத்வம்ஸாபாவமுண்டிறே முக்தர்க்கு. [அமரர்கள்] - பகவதநுபவ விச்சேதத்தில் தாங்கள் உளரன்றிக்கேயிருக்குமவர்கள், "நசஸீதாத்வயாஹீநா நசாஹமபிராகவ" (நசஸீதாத்வயாஹீநா நசாஹமபிராகவ) என்கிறபடியே. [அமரர்கள்] - த்ரிபாத்விபூதியோகத்தைப் பற்றச் சொல்லுகிறது. பரமஸாம்யாபந்நரா யிருக்கையாலே ஓலக்க மிருந்தாலாயிற்று, அவர்களுக்கும் அவனுக்கும் வாசியறியலாவது; பிராட்டிமாராலேயாதல், ஸ்ரீகௌஸ்துபாதிகளாலேயாதல் சேஷியென்றுஅறியுமத்தனை. ஆனால், இப்படியிருக்கிற இவர்கள் பலராய்த் தான் ஒருவனானால், இவர்களை அநுவர்த்

ஸவம்ஶேஷிணஃ. ஈஶேந நாராயணஸ்ய ஸம்பந்தாத் ஸவஜ்யாவிகம், ஸவஜ்ஞத்வம், ஸவஶக்த்யம், நாராயணத்வம், தத்ஸர்வதேவத்ஸ்வ ஜநஶிகீ இதி ஶ்ருதி வாதிதஃ" இதி நாராயணோபநிஷத் வ்யாக்யாதஃ.

